விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
(3940)
Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 17 வியாழக்கிழமை (31.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 163

ஊடகவியலாளர் தாக்குதல் பின்னணியில் அரசாங்கமா?

முதலமைச்சர் விக்னேஸ்வரன் சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் பொலிஸில் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படாமையானது, இவ்வாறான விடயங்கள் அரச அனுசரணையுடன் நடைபெறுகின்றதா என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதென வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்டமைக்கு எதிராக நேற்று புதன்கிழமை நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர், வடக்கு 24

அரசின் செயற்பாடு குறித்து விவாதிக்க தயார் - ஜனாதிபதி

(கொழும்பு)

அரசாங்கத்தின் கடந்த மூன்றரை வருடங்களில் இந்த நாட்டில் என்ன நடந்தது என்பது குறித்து திறந்த கலந்துரையாடல் ஒன்றுக்கோ, தொலைக்காட்சி பொது நிகழ்ச்சிக்கோ அழைத்தால் வருவதற்கு தயாராக இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 24

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்து

இளைஞர் ஒருவர் உயிரிழப்பு; வன்னி விளாங்குளத்தில் சம்பவம்

(மல்லாவி)

மாங்குளம், வன்னிவிளாங்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் அவருடன் பயணித்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணி 24

இலங்கையின் புதிய வரைபடம் இன்று வெளியீடு

(கொழும்பு)

அரச நில அளவையாளர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட இலங்கையின் புதிய வரைப்படம் இன்று வெளியிடப்படவுள்ளது.

கொழும்பில் புதிதாக அமைக்கப்படும் துறைமுக நகரத்தை உள்ளடக்கியதினால் இலங்கையின் நிலப்பரப்பு 2 கிலோமீற்றரினால் அதிகரித்துள்ளதாக நில 24

கேள்விப்பத்திரமின்றி மருந்து கொள்வனவுக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

தென் மாகாணத்தில் பரவி வரும் வைரஸ் காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கு தேவையான மருந்து வகைகள் உள்ளிட்ட மற்றைய உபகரணங்களை கேள்விப்பத்திர அடிப்படையில் அல்லாமல் கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

ஜனாதிபதி செயலகத் 24

ஜனாதிபதியானதும் முதலாவது வேலையாக

பாராளுமன்றத்தினை கலைக்க நினைத்தேன்

பிரதமரின் நூறு நாள் வேலைத்திட்டம் தடுத்து விட்டது - ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு) நான் ஜனாதிபதியாக பதவியேற்றதும் முதலாவது வேலையாக பாராளுமன்றத்தை கலைக்க நினைத்தேன் என குறிப்பிட்ட ஜனாதிபதி மைத்திரி, பிரதமரின் நூறு நாள் வேலைத்திட்டம் அதனைத் தடுத்துவிட்டதாகவும் தெரிவித்தார். மேலும் நூறு நாள் வேலைத்திட்டம் ஒரு மோசமான நடவடிக்கை எனவும் குற்றம் சாட்டியுள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

கொக்குவில் பகுதியில் ஆலய சிலை ஒன்று சேதமாக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களால் ஆலய சிலை ஒன்று சேதப்படுத்தப்பட்டதால் கொக்குவில் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை கொக்குவில் மேற்கு பகுதியில் 23

மாவா விற்பனையை தடுக்க நீதிமன்றம் கடும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களுக்கு மாவா என்ற பெயரில் விநியோகிக்கப்படும் போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கு யாழ்ப்பாணம் 23

பல பிரேரணைகள் நிறைவேறியிருந்தால் 3வங்கிகள் மூடப்பட்டிருக்கும் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

அமைச்சரவைக்கு வந்த பல பிரேரணைகளை நான் தடுத்து நிறுத்தியுள்ளேன் எனவும், அந்தப் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டிருந்தால் நாடு பாரிய பிரச் 23

அரசிலிருந்து விலகிய சுதந்திரக்கட்சியின்

16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தனுடன் நேற்றுச் சந்திப்பு

23

சாவகச்சேரி - கச்சாய் பகுதியில்

மோ.சைக்கிள் - சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

சைக்கிளில் பயணித்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி -கச்சாய் வீதி உப்புக்கேணிப் பகுதியில் நேற்று புதன்கிழமை மாலை 6.45மணியளவில் இடம்பெற்ற விபத்தில் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் பலியாகியுள்ளார்.

சாவகச்சேரி சந்தை நோக்கி பலாக்காய் கட்டி சைக்கிளில் சென்ற நபரை சாவகச்சேரி பகுதியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் நேருக்கு நேராக மோதிய 23

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பேசத் தயார் - சம்பந்தன்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த தயார் என தமிழ்த் தேசி 23

இலங்கை அரசாங்கம் வழங்கிய

வாக்குறுதி நிறைவேற்றப்படுவதனை சர்வதேசம் உறுதி செய்ய வேண்டும்

அமெரிக்க குழுவிடம் இரா.சம்பந்தன் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

ஜ.நா மனித உரிமை பேரவை தீர்மானத்தினை அடிப்படையாக கொண்டு இலங்கை 24

பிரிவினையின்றி அனைவரையும் ஒன்றிணைத்து வெற்றி கொள்வோம்

சம்பந்தனின் கருத்துக்கு செவிசாய்த்த சுதந்திரக்கட்சியின் சுயாதீன அணி

(கொழும்பு)

இலங்கையராக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். பிரிவினைவாதம் வேண்டாம். அனைத்து தரப்பையும் இணைத்து வெற்றிகொள்ள வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கூறும் காரணிகளை இந்த நாட்டின் சிங்கள பெரும்பான்மை மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சுயாதீன அணியினர் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட உறுப்பினர்கள் தமது அடுத்த கட்ட அரசி 23

வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2018

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2018 ஆம் ஆண்டிற்கு (2018.07.01 இருந்து 2018.12.31 வரையான காலப்பகுதி) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 2018.06.04 இருந்து 2018.06.11 பி.ப 2.00 மணி வரை

கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 2018.06.12 - பி.ப 2.00 மணி வரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி: 2018.06.12 - பி.ப 2.00 மணி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு,மூலப்பிரதியை "தவிசாளர், வலி கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்" எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும், எதிர்வரும் 2018.06.12ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ, அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தொ.இல	விபரம்	மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம	மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம்	ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (VAT, NBT நீங்கலாக)
	உரும்பிராய் உப அலுவலகம்			
01	ஊரெழு மாட்டிறைச்சிக் கடை	250.00	1000.00	110,000.00
02	ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை	250.00	1000.00	80,000.00

01.கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் சமுகமளிக்கும் போது அதன் நிழற்படப் பிரதியையும், பிரதேச கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வதிவிடத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதாவ தொரு பிரதி (நிரந்தர தொலைபேசி பட்டியல்/மின்சார கட்டணப் பட்டியல்/ வங்கிப் புத்தகப் பிரதி) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

02.கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு, காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும்.

03.உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

04.ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

05.கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

06.விலை மதிப்பீட்டுத் தினைக்களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்

07.இல 03/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான விபரங்களை கேள்விப்பத்திரங்களை பெறும் போது தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

08.கேள்வி சம்பந்தமான முக்கிய நிபந்தனைகள் மற்றும் மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தவிசாளர்
வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

(ந-2772)

கேள்வி அறிவித்தல்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
பிரமான அடிப்படையிலான மூலதனநன்கொடை நிதி-2018

01.வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02.தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். வடமாகாணம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்க ளிடமிருந்து அரசுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் வியரிக்கப்பட்டவாறு வீதிப்புனரமைப்பு வேலைகளுக்கு கோருகின்றார்.

03.தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04.பொதுநிதிச் சுற்றறிக்கை 04/2016 (i) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும் கறுப்புப் பட்டியலில் (Black List) பெயரிடப்படாததுமான கேள்விமனுதாரர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதுமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

05.தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4.இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், (தொலைபேசி இல.0212058 983 பக்ஸ் இல 0212058866 e.mail - secveps@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 20.06.2018 ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணியை ஆங்கில மொழியில் தவிசாளர் /செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் இடத்திலிருந்து 30.05.2018ம் திகதியிலிருந்து 20.06.2018ஆம் திகதிவரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08.கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர் /செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரிக்கு 21.06.2018ம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09.கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று–22.08.2018) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

10.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

11.கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் எமது அலுவலக மாநாட்டு மண்டபத்தில் 11.06.2018 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தங்களது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

ஒப்பந்த இலக்கம்	வேலை விபரம்	மதிப்பீட்டுத் தொகை (Rs.) Min	ஒப்பந்தகாலம்	வேண்டப்படும் தரம்	வேண்டப்படும் கேள்விப் பிணை	
					பிணை வைப்பு (Rs)	செல்லுபடியாகும் காலம்
NP/14/41(13)/ CBG/SP/1/2018	Renovation works for Market Building, Kopay	3.63	03மாதங்கள்	C8	36500.00	19.09.2018

தியாகராஜா நிரோஷ்
தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

2018.05.31

முச்சக்கரவண்டி விபத்து ஒருவர் பலி; மூவர் படுகாயம்

(கொழும்பு)

தெனியாய பல்லேகம குடகலஹேன பிரதேசத்தில் இடம்பெற்ற முச்சக்கர வண்டி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மூவர் காயமடைந்துள்ளதாக தெனியாய பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

குடகலஹேன பிரதேசத்திலிருந்து பல்லேகம நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டி கட்டுப்பாட்டையிழந்து பள்ளத்தில் வீழ்ந்ததாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

அதில் பயணித்த நால்வரில் ஜீ.விமலாவதி (வயது 53) என்பவர் உயிரிழந்தார். காயமடைந்த மூவரும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை தெனியாய பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ம)

சர்வாதிகார கனவை சம்பிக்க காண்கிறார்
-சுனில் ஹந்துநெத்தி

(கொழும்பு)

அமைச்சர் சம்பிக்க ரணவக்க சர்வாதிகாரியாவதற்கு கனவு கண்டு கொண்டிருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி சமர்ப்பித்துள்ள 20ஆவது அரசியலமைப்புச் திருத்தச் சட்டம் குறித்த பிரேரணை நாட்டின் ஸ்திரமற்ற நிலைமைக்கு காரணமாக அமையலாம் எனவும், அது நாட்டிற்கு பொருத்தமற்றது என்றும் சம்பிக்க தெரிவித்திருந்தார். இந்நிலையில், அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே சுனில் ஹந்துநெத்தி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவித்த அவர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை குறித்த தமது நிலைப்பாட்டை தெளிவாக வெளியிட்டமைக்கு சம்பிக்கவிற்கு பாராட்டு தெரிவிக்கிறேன். எனவே, இது தொடர்பாக எதிர்வரும் காலத்தில் அவருடன் பேச்சுவார்த்தை நடத்துவது பயனற்றதாகும்.

அவர் ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்காவிடின், அவரை ஓர் சர்வாதிகார ஆதரவாளராகவே நாம் நோக்க வேண்டி இருக்கிறது. சம்பிக்க சர்வாதிகாரியாவதற்கே கனவு கண்டு கொண்டிருக்கிறார். ஹிட்லரை போன்று சர்வாதிகாரிகளாக செயற்பட பலர் விரும்புகின்றனர் எனத் தெரிவித்தார். (ம)

கொழும்பு துறைமுகம் 2ஆம் இடம்பெற்றது

சர்வதேச மட்டத்திலான கொள்கலன் துறைமுகங்களில் கூடுதலான வளர்ச்சியை பதிவு செய்துள்ள இரண்டாவது துறைமுகமாக கொழும்பு துறைமுகம் இடம்பெற்றுள்ளது.

இந்தப்பட்டியலில் சிங்கப்பூர் துறைமுகம் 16.5 சதவீத வளர்ச்சியுடன் முதலாவது இடத்தை தொடர்ந்தும் தக்கவைத்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் வளர்ச்சி 12.6 சதவீதமாகும். Alphaliner global port நிறுவனத்தின் தரப்படுத்தலில் இலங்கை இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளமை சிறப்பம்சமாகும். (ம)

சேல்ஸ்மன் தேவை

யாழ்நகரில் இயங்கும் புடைவைக் கடைக்கு O/L, A/L படித்த புடைவை வியாபாரம் பழக ஆர்வம் உள்ள ஆண்கள் தேவை. மற்றும் அரச உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்ற அனுபவம் உள்ள காவலாளர் ஒருவரும் தேவை. தொடர்பு:0772250753 (4293)

மணமகன் தேவை

1978ஆம் ஆண்டு பிறந்த பூராட நட்சத்திரத்தை உடைய இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனிற்கு பொருத்தமான மணப்பெண்ணைத் தேடுகிறோம்.

தொடர்பு:

0212231460,0773834296 (4259)

ஏல விற்பனை

யா/கொக்குவில் ஸ்ரீ ஞானவைரவர் வித்தியாசாலையின் முற்றத்தில் 11.06.2018 காலை 10 மணியளவில் பொருட்களை விற்பதற்கான ஏலவிற்பனை நடைபெறவுள்ளது. அதிபர் (4249)

இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தப்படுவதை கட்டுப்படுத்த அமெரிக்காவின் உதவி அவசியம்

காங்கிரஸ் உறுப்பினர்களிடம் ஜனாதிபதி நேரில் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தப்படும் மார்க்கங்களை கட்டுப்படுத்துவதற்கு ஐக்கிய அமெரிக்காவின் உதவி அவசியமாகும் என்பதுடன் அதன்பொருட்டு இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு காணப்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தப்படும் மார்க்கங்களை கட்டுப்படுத் துவதற்கு அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு காணப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

பிரதிநிதிகள் குழுவின் தலைவர் McClellen Thornberry, Enrique Cuellar, Vicky Hartzler, Carol Shea – Porter உள்ளிட்டோர் ஜனாதிபதியை சந்தித்தனர்.

இலங்கை உலக நாடுகளுடன் ஒத்துழைப்புடனும் நட்புடனும் செயற்படும் நாடு என்று இதன்போது தெரிவித்த ஜனாதிபதி இலங்கை இராணுவத்தின் பயிற்சி நடவடிக்கைகளுக்கு ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பினை விசேடமாக நினைவுகூர்ந்தார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையில் 'இராணுவ பயிற்சி செயற்றிட்டங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருவதுடன், அவற்றை மேலும் அபிவிருத்தி செய்து பாதுகாப்பு சேவையில் தொழில்நுட்ப அறிவின் பயன்பாட்டினை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி நவீன உலகில் பாதுகாப்பு சேவைகளில் தொழில் நுட்பம் இன்றியமையாதது என தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்கு தேவையான ஒத்துழைப்புக்களை இலங்கைக்கு வழங்க இணக்கம் தெரிவித்த காங்கிரஸ் குழு உறுப்பினர்கள், இலங்கையை பலமான சுபீட்சமிக்க நாடாக கட்டியெழுப்புவதற்கு தேவையான உதவிகளை வழங்குதல் தமது நாட்டின் கொள்கை எனவும் தெரிவித்தனர்.

இது அமைதிக்கு முக்கியமானதென குறிப்பிட்ட காங்கிரஸ் பிரதிநிதிகள், இருநாடுகளும் இடையிலான பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்புக்களை பலப்படுத்துவதற்கான புதிய நடவடிக்கைகள் தொடர்பாக கண்டறிதலே தமது இந்த விஜயத்தின் நோக்கம் என்று தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் செயலாளர் ஓஸ்டின் பெர்னாண்டோ, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (இ-7)

சபாநாயகரால் தனது நாற்காலியின் கௌரவத்தை பாதுகாக்க முடியவில்லை

கூட்டு எதிரணி விசனம்

(கொழும்பு)

சபாநாயகரால் தனது நாற்காலியின் கௌரவத்தை பாதுகாக்க முடியாது போயுள்ளதாக கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பேர்ப்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனத்திடம் பணம் பெற்ற மற்றும் தொலைபேசி வழி தொடர்புகளை கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் காரணமாக, எந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கும் வீதியில் நடந்து செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும் தற்போதைய நாடாளுமன்றமுறைமையை சபாநாயகர் திரிபுபடுத்தியுள்ளார். அர்ஜுன் அலோசியஸுக்கு சொந்த மான நிறுவனத்திடம் பணம் பெற்றவர்கள் கூட்டு எதிர்க்கட்சியில் இருந்தால், அவர்கள் உடனடியாக நீக்கப்படுவார்கள் எனவும் காமினி லொக்குகே தெரிவித்தார். (இ-7)

மகிந்தவின் ஊழல்கள் தொடர்பாக பேசியவர்கள் இப்போது எங்கே?

கீர்த்தி தென்னக்கோன் கேள்வி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடியில் பணம் பெற்றுக் கொண்ட அனைவரது விபரங்களும் வெளிப்படுத்தப்பட வேண்டும் என கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், கடந்தகால மகிந்த ஆட்சியின் போது ஊழல்களுக்காக எதிர்ப்புக் குரல் எழுப்பியவர்கள் இன்று வாய் மூடி அமைதியைக் காத்து வருகின்றார்களா என்ற கேள்வியையும் தென்னக்கோன் முன்வைத்தார்.

தயாசிறி ஜயசேகர அரசாங்கத்தில் இருக்கும் வரையிலும் குற்றச்சாட்டுகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இப்போது மட்டும் விமர்சனங்கள் முன் வைக்கப்படுவது எதனால் எனவும் அவர் கேள்வி யெழுப்பியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்திய மத்திய வங்கி ஊழல் குற்றத்திலும், இதன் மூலம் பணம்பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்படும் 118 பேரின் முழு விபரங்களும் வெளியிடப்பட வேண்டும் எனக் குறிப்பிட்ட தென்னக்கோன், அது இப்போதைக்கு முக்கிய தேவை எனவும் தெரிவித்தார். (இ-7)

நாமலுக்கு எதிரான வழக்கில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை

(கொழும்பு)

சட்டவிரோதமாக உழைக்கப்பட்ட 30 மில்லியன் ரூபா நிதியைப் பயன்படுத்தி கவர்ஸ் கோர்பரேட் எனும் நிறுவனத்தில் முதலீடு செய்த குற்றச்சாட்டு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சம்பத் அபேகோன் முன்னிலையில் வழக்கு விசாரிக்கப்பட்டது.

இதன்போது அரச தரப்பு பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் துசித் முதலிகேயின் நெறிப்படுத்தலில் மொன்டன் கெப்பிடல் எனும் நிறுவனத்தின் தலைவரிடம் சாட்சி பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், பிரதிவாதி சார்பான சட்டத்தரணியால் குறுக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த குறுக்கு விசாரணையின் போது, முன்னாள் இரகசிய பொலிஸாருக்கு வழங்கிய 5 வாக்கு மூலங்களில் இரண்டு பொய்யானது என்று சாட்சியாளர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து மேலதிய குறுக்கு விசாரணை நடவடிக்கை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது. (இ-7)

மாகாண சபைத் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்துமாறு மகிந்த தேசப்பிரிய கோரிக்கை

மாகாண சபைத் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்த நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்களிடம் கோரியுள்ளார் என பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்தார். இது தொடர்பில் கட்சி களின் தலைவர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுத் தலைவரால் கடிதம் அனுப் பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது கலைக்கப்பட்டுள்ள மூன்று மாகாண சபைகளினதும், ஏனைய மாகாண சபைகளினதும் தேர்தல்களை உரிய காலத்துக்குள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என குறித்த கடிதம் மூலம் அவர் கோரியுள்ளதாக பிரதித் தேர்தல் கள் ஆணையாளர் தெரிவித்தார். மேல், தென், வடமத்திய, சப்ரகமுவ மாகாணங்களின் அதிகார காலம் கடந்த ஆண்டு நிறைவடைந்தது.

இதேவேளை, வடமாகாண சபையின் அதிகார காலமும் இந்த ஆண்டின் இறுதியில் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

எகிப்து சுப்பர் ஸ்ரார் மொஹமட் சாலா
ரஷ்ய கால்பந்து தொடரில் பங்கேற்பாரா?
லிவர்பூல் உடல்கூற்றியல் அறிக்கை



ரியல் மட்ரிட் அணிக் கெதிரான ஆட்டத்தில் காயம் அடைந்த சாலா உலகக் கிண்ண தொடரில் பங்கேற் பது சந்தேகம் எனக் கூறப் பட்டுள்ளது.

உக்ரைனில் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு நடைபெற்ற ஐரோப்பிய சம்பி யன்ஸ் லீக் இறுதிப் போட்டி யில் ரியல் மட்ரிட் - லிவர்பூல் அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

இதில் ரியல் மட்ரிட் 3-1 என வெற்றி பெற்று கிண் ணத்தை கைப்பற்றியது.

இந்த போட்டியின் முதல் பாதி நேரத்தில் லிவர்பூல் அணியின் முன்னணி வீர ரான மொஹமட் சாலாவின் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதனால் கண் ணீரோடு தொடர்ந்து விளை யாட முடியாமல் வெளியேறி னார்.

இந்த காயத்தால் அடுத்த மாதம் 14ஆம் திகதி தொடங் கும் உலகக் கிண்ண தொட ரில் எகிப்து அணிக்காக விளையாடுவாரா? என்ற சந்தேகம் இருந்து வந்தது.

காயம் அடைந்த மொஹ மட் சாலா கூறுகையில்,

"ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் நடைபெற்ற இறுதிப் போட்டி கடினமான இரவாக அமைந்தது. என்றாலும், நான் ஒரு போராளி. நான் ரஷ்யா சென்று உங்களுக்கு பெருமை சேர்ப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது.

உங்களுடைய அன்பு மற்றும் ஆதரவு எனக்கு வலி மையை கொடுக்கும்" என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் லிவர்பூல் கால்பந்து கழக அணியின் பிசியோ, சாலாவின் காயம் குணமடைய மூன்று அல் லது நான்கு வாரங்கள் ஆகும் எனக் கூறியுள்ளார்.

இதனால்உலகக்கிண்ண தொடரில்சாலாபங்கேற்பாரா? என்ற கேள்வி எழுந்துள் ளது.

எகிப்து முதன்முறையாக 1934ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடரில் விளை யாட தகுதிப் பெற்றது. அதன் பின் 56 வருடங்களுக்குப் பின் 1990ஆம் ஆண்டு தகுதி பெற்றது. த

ற்போது 28 ஆண்டுகள் கழித்து தகுதி பெற்றுள்ளது. எகிப்து அணி உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெற மொஹமட் சாலாவின் ஆட் டம் முக்கியத்து வம் வாய்ந் ததாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ்
3வது சுற்றில் ஜோகோவிக்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுக்கு செர்பியாவின் ஜோகோவிச், செக்குடியரசின் கிவிட்டோவா, உக்ரைனின் ஸ்விடோலினா உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறினர்.

பிரான்ஸ்தலைநகர்பரிஸில் பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ் லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஆண் கள் ஒற்றையர் பிரிவு 2வது சுற்றில் செர்பியா வின் நோவக் ஜோகோ விச், ஸ்பெயினின் முனார் மோதினர். இரண்டு மணி நேரம், 18 நிமிடம் வரை நீடித்த போட்டியில் அசத்த லாக ஆடிய ஜோகோவிச், 7-6, 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில்வெற்றிபெற்று, 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றைய 2ஆவது சுற்றுப் போட்டிகளில் ஸ்பெயி னின் பெர்ணான்டோ வெர்டஸ்கோ, ரொபர்டோ பாடி ஸ்டா அகுட், பாப்லோ காரனோ புஸ்டா உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர். முதல் சுற்றுப் போட்டியில் செக் குடியரசின் தோமஸ் பெர்டிச், 6-7, 6-7, 6-1, 7-5, 2-6 என்ற செட் கணக்கில் பிரான்ஸின் ஜெரிமி சார்டி யிடம் போராடி தோல்வியடைந்தார்.

கிவிட்டோவா வெற்றி

பெண்கள் ஒற்றையர் பிரிவு 2வது சுற்றில் செக்குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, ஸ்பெயி னின் லாரா அருபாரினா மோதினர். ஒரு மணி நேரம், 8 நிமி டம் நீடித்த போட்டி யில் அபாரமாக ஆடிய கிவிட்டோவா, 6-0, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் உக்ரைனின் எலினா ஸ்விடோலினா, 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்கில் ஸ்லோவாகியாவின் விக்டோரியா கஸ்மோவாவை தோற்கடித்து, 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

பிபா கால்பந்து கவுண்டவுன் 14
கடவுளின் கையால் கோல்

கால்பந்து போட்டிகளில் கோல் காப்பாளர் தவிர, மற்றைய வீரர்கள் கையால் பந்தை தொடுவதே தவறு. ஆனால், கையால் கோல் அடித்த அதிசயம் 1986ல் மெக்சிகோவில் நடந்த 13ஆவது உலக கிண்ணத் தொடரில் அரங்கேறியது.

முன்னதாக இந்த உலகக் கிண் ணத் தொடரை நடத்துவதற்கு கொலம பியா தேர்வு செய்யப்பட்டிருந்த நிலை யில் பொருளாதாரச் சிக்கல் காரண மாக உலகக் கிண்ணத்தை நடத்த முடியாது என அந் நாடு தெரிவித்து விட்டது. இதனால் மெக்சிகோவில் நடந்தது.

இதில், மொத்தம் 24 அணிகள் பங்கேற்றன. முதல் சுற்றுப் போட்டி கள் 'ரவுண்ட-ரொபின்' முறையில் நடந்தன. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட பிரேசில், இத்தாலி அணிகள் சாதிக்க வில்லை.

ஜூன் 22இல் நடந்த காலிறுதி யில் ஆர்ஜென்ரீனா - இங்கிலாந்து அணிகள் மோதின. 51ஆவது நிமி டத்தில் ஆர்ஜென்ரீனா அணியின் தலைவர் டியாகோ மாரடோனா தலையால் முட்டுவது போல, தனது இடது கையால் பந்தை தட்டி தவறாக கோல் அடித்தார். இதனை கவனிக் காத நடுவர் நாசர், கோல் என அறி வித்தார்.

இதற்கு, இங்கிலாந்து கோல்காப் பாளர் பீற்றர் ஷில்டன் மற்றும் சக வீரர்கள் எதிர்ப்பு தெரிவித்தும் பல னில்லாமல் போனது. தொட ர்ந்து அசத்திய மரடோனோ, 55ஆவது நிமிடத்தில் நான்கு இங்கிலாந்து வீரர் களை கடந்து 'சுப்பர்' கோல் அடித்தார்.

இது நூற்றாண்டின் சிறந்த கோலாக போற்றப்பட் டது. இறுதியில் ஆர்ஜென் ரீனா 2-1என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்றது. அப் போது மாரடோனா கூறுகை யில்,

"எனது தலை மற்றும் 'கடவுளின் கை' ("ஹான்ட் ஒப் கோட்) உதவியுடன் முதல் கோல் அடித்தேன்," என சமாளித்தார். அரையிறுதி யில் ஆர்ஜென்ரீனா அணி, பெல்ஜியத்தை வீழ்த்தி, இறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு அரையிறுதி யில் மேற்கு ஜேர்மனி, பிரா ன்ஸ் அணியை வீழ்த்தி, இறுதி போட்டி வாய்ப்பை பெற்றது.

இறுதிப் போட்டியில் மர டோனாவின் துடிப்பான ஆட் டம் கைகொடுக்க, ஆர்ஜென் ரீனா அணி, மேற்கு ஜேர் மனியை 3-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, உலக கிண்ணத்தை இரண்டாவது முறையாக கைப்பற்றியது.

பெறுகை அறிவித்தல்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
சபை நிதி - 2018

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்கு னர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

02. தேசியப்போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாக கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்விபெற தகுதியுடையாவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், பெறுகை ஆவணம் பகுதி 111 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல் களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 16.00 மணிவரை 01.06.2018ஆம் திகதியிலிருந்து 21.06.2018ஆம் திகதி வரை காலப் பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள வழங்குனர்கள் ஆங்கிலமொழியிலுள்ள பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப் பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 01.06.2018 தொடக்கம் 21.06.2018 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணிவரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/- (வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

07. கேள்வி ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து 22.06.2018ம் திகதி 14:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேச சபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

08. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 77 (எழுபத்தேழு) நாட்கள் (06.09.2018) வரையும் செல்லுபடியாகும்.

09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 08.06.2018ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு 25000.00 வினை பணமாக செலுத்தி பற்றுச்சீட்டினை கேள்வி ஆவணத்துடன் இணைக்க வேண்டும்.

11. இக்கேள்வி கோரலில் உள்ள நிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

இல	வேலை விபரம்	ஒப்பந்த இல	மதிப்பீட்டு தொகை மில்லியனில்	ஒப்பந்த காலம்	வேண்டப்படும் தரம்	கேள்வி பிணை	
						மீளளிக்கும் பிணை வைப்பு (ரூபா)	வைப்பு செல்லுபடியாகும் காலம்
1	வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல்	NP/14/41 (15) /Street Lamps/2018	3.80	01 மாதம்	வடக்கு மாகாண சபையில் வழங்குனராக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல்	25000.00	04.10.2018

தவிசாளர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

31.06.2018 (C-2773)

சிறுபான்மை மதத்தினர் மீது தொடரும் தாக்குதல்கள்

அமெரிக்கா ஆண்டறிக்கையில் சுட்டிக்காட்டு

(வோஷிங்டன்)

இலங்கையில் சிறுபான்மை மதப்பிரிவினர் மீது தொடர்ந்தும் தாக்குதல்கள் இடம்பெறுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

2017 இல் உலகநாடுகளில் காணப்பட்ட மதச் சுதந்திரம் குறித்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய கிறிஸ்தவ எவாஞ்செலிகள் என்ற அமைப்பு கடந்த வருடம் 97 தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளதாக பதிவு செய்துள்ளது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கிறிஸ்தவ மதகுருமார் மீதான தாக்குதல்களும் தேவாலயங்கள் மீதான தாக்குதல்களும் இடம்பெற்றதாகவும் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் காணப்பட்டதாகவும் அமெரிக்கா குறித்த அமைப்பை மேற்கோள் காட்டி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் கடந்த வருடம் முஸ்லிம்களின் பள்ளிவாயில்கள் மற்றும் தொழுகை அறைகளில் தாக்குதல்கள் இடம்பெற்றதாக தெரிவித்துள்ளது எனவும் அமெரிக்கா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக ரமழான் மாதத்தில் இந்த தாக்குதல்கள் இடம்பெற்றதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுபலசேனா போன்ற பௌத்த அமைப்புகள் தொடர்ந்தும் பௌத்த சிங்களவர்களின் மேலாதிக்கத்தை ஊக்குவித்து வருகின்றன, என தெரிவித்துள்ள அமெரிக்கா, இந்த அமைப்புகள் ஏனைய சிறுபான்மை மத இனப்பிரிவினரை சிறுமைப்படுத்த முயல்கின்றன. இதற்காக சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றன எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பொதுபல சேனாவும் ஏனைய தேசிய குழுக்களும் சிறுபான்மை மத குழுக்களிற்கு எதிராக வன்முறைகளைத் தூண்டும் விதத்திலான கருத்துக்களை பரப்பி வருவது குறித்து சிவில் சமூக அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன எனவும் அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

யாழ். நூலக எரிப்பின் 37 ஆம் ஆண்டு நினைவேந்தலும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

யாழ். நூலக எரிப்பின் 37ஆம் ஆண்டு நினைவேந்தலும் கலந்துரையாடலும் தமிழர்களின் அறிவுக்களஞ்சியமான யாழ்ப்பொது நூலகம் பேரினவாதிகளால் எரியூட்டப்பட்டு 37 ஆண்டுகள் கடக்கின்றது. தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாதொழிக்கும் அரசின் கட்டமைப்புசார் இன வழிப்பின் ஓர் அங்கமான பண்பாட்டுப் படுகொலையாக அரங்கேற்றப்பட்டதே யாழ் நூலக எரிப்பாகும்.

மேற்படி நூலக எரிப்பின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் கலந்துரையாடலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.45 மணிக்கு யாழ். பொதுநூலக முன்றலில் நடைபெற வுள்ளது. அனைவரையும் பங்கு கொள்ளுமாறு த.தே.ம. முன்னணியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (இ-7

முன்பள்ளியின் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் கண்காட்சி விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் மத்திய முன்பள்ளி மண்டபத்தில் கா.சிவசோதி தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலராஜ், சிறப்பு விருந்தினர்களாக அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் சி.திரிகரன், யாழ்ப்பாணம் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கவிமலரோன் உள்ளிட்டோர் விருந்தினர்கள் கலந்து கொள்வர். (இ

முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பின் வீதியில் கு.சண்முகநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன், சிறப்பு விருந்தினர்களாக கனடா சண்முகம் மகாலிங்கம், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சிவகுமார் அகிலன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலால் ஊழியர்களை இடைநிறுத்திய

தனியார் வங்கியின் நடவடிக்கை குறித்து யாழ். வணிகர் கழகம் கடும் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் தனியார் வங்கி ஒன்றில் கிளிநொச்சிக் கிளையில் போரினால் இறந்த பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது தொடர்பாக இரு ஊழியர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டமைக்கு யாழ். வணிகர் கழகம் தனது கண்டனத்தையும் மன வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது.

போரின் போது சிறுவர் தொடக்கம் பெரியவர் வரையிலான பொதுமக்கள் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே, ஒவ்வொருவருடைய சகோதர , சகோதரிகள், பிள்ளைகள், தாய்தந்தையர்கள், உறவினர்கள் இவ்வாறு எல்லோருக்கும் ஏதோ ஒரு வகையிலான உறவுமுறையினர் இறந்ததும் அவர்களுக்கான அஞ்சலி செலுத்துவதும் மக்களின் அடிப்படை உரிமை. இதை விமர்சனம் செய்வதற்கோ இது சம்பந்தமாக எதிர்க்கருத்து கூறுவதற்கோ யாருக்கும் உரிமை இல்லை. இறந்த உறவுகளுக்கான அஞ்சலியை செலுத்துவதை விமர்சனம் செய்வதோ அல்லது தடுப்பதோ மனிதாபிமானம் அற்றசெயல். அவர்கள் மனித சுபாவம் அற்றவர்கள்.

தமிழ் அரசியல் தலைமைகள் இந்த நிகழ்வுகளை நடத்தும் படியும் அதே நேரம் முள்ளிவாய்க்கால் நிகழ்வில் பங்கு பற்றும் படியும் அந்நிகழ்வில் பங்குபற்ற முடியாதவர்கள் தத்தமது இடங்களிலேயே அஞ்சலிகளை செலுத்தும் படியும் அறிவுறுத்தியிருந்தார்கள். அதுமட்டுமல்ல மத்திய அமைச்சர்கள், பிரதமர் உட்பட சில தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் மக்களுக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வை வேந்தலுக்கு தமது ஆதரவை தெரிவித்திருந்தார்கள். இவ்வாறு இருக்கையில் இத் தனியார் வங்கி சில தென்னிலங்கை தீய சக்திகளுக்கு அடிபணிந்து நினைவேந்தலுக்கு அஞ்சலி செலுத்திய தமது ஊழியர்களை வேலையில் இருந்து நிறுத்துவது மிக மிக பாரதூரமான விடயமாக தமிழ் மக்கள் கருதுகிறார்கள்.

தனியார் வங்கியானது நீண்டகாலம் தமிழ் மக்களுடன் நல்லுறவை பேணி வந்த வங்கி. போர்ச் சூழ்நிலையிலும் தமிழ் மக்களுக்கு தன்னால் சேவையை வழங்கி வந்த வங்கி. அவ்வாறான தொரு வங்கி இவ்வாறான மனிதாபிமான நிகழ்விற்காக அஞ்சலி செலுத்திய தமது ஊழியர்களை வேலையில் இருந்து நீக்கியமை மிக மிக தவறான விடயம்.

இது சம்பந்தமாக வடமாகாணத்திற்கான இத்தனியார் வங்கியின் உயர் அதிகாரிகளுடன் நாம் கலந்துரையாடலொன்றை நடத்தி எமது அதிருப்தியை தெரிவித்திருந்தோம். ஆகவே வங்கி நிர்வாகம் உடனடியாக பணிநீக்கம் செய்யப்பட்ட இரு ஊழியர்களையும் வெகுவிரைவில் மீளவேலைக்கு அமர்த்தி தமிழ் மக்களுடனான ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்த வேண்டும் என யாழ். வணிகர் கழகம் வேண்டு கோள் விடுத்துள்ளது. (இ

இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
ரோகினி

31.05.2018

வைகாசி 17, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
துதியை முன்னிரவு 11.11 மணிவரை
மூலம் பின்னிரவு 5.42 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
சர்வதேச புகைத்தல் தினம்
திருஞான சம்பந்தர் குருபூசை
வளர்பிறை

		சூரி, புத	சுக்
			ராகு
செவ், கேது			
சனி, சந்		குரு	

மீனம் — செய் தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் கூடும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

மேடம் — அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

ரிஷபம் — எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.

மிதுனம் — விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், போனஸ் சுகமுண்டு.

கும்பம் — செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த தனவரவு வந்து சேரலாம், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

கடகம் — பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பலநாட்களாக நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

மகரம் — தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையை கேட்டு நடப்பது நல்லது, சயனசுகக் குறைவுண்டு.

சிம்மம் — அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைகள் கூடும் நாள்.

தனுசு — சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், திடீர் பயணத்தால் வழக்கமான வழிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

விருச்சிகம் — நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

துலாம் — நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

கன்னி — இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கடன் சுமை குறையும் நாள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

அமரர் விநாயக மூர்த்தியின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு

(சாவகச்சேரி)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வும், நினைவுப் பேருரையும் நாளை மறுதினம் 02.06.2018 சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு தென்மராட்சி கலாசார மண்டபத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையில் இடம்பெறும். (இ-7)

3 கணித நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை முன்னாள் கணித பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகரும் ஓய்வுநிலை அதிபருமான வி.சச்சிதானந்தன் எழுதிய இலகு கணிதம், சுபோக்கு,விவேககணிதம்ஆகிய நூல்கள் வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சபாபதிப் பிள்ளை வீதி (செல்வா மண்டபம்) வாழ்வகத்தில் வாழ்வகத் தலைவர் ஆறுமுகம் இரவீந்திரன்தலைமையில்இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி யோ.திவாகர், மகப்பேற்று வைத்திய சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி த.சரவணபவ, பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி அ.ரகுபதி, இரத்த வங்கி வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ம.பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

திருஞானசம்பந்தர் குருபூசை

சைவ பரிபாலன சபை நடத்தும் திருஞானசம்பந்தர் குருபூசை இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் நீராவியடி சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இ.வசந்தசேனன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் சிறப்பு சொற்பொழிவினை ஆசிரியர் இரா.செல்வவடிவேல் வழங்குவார். (இ)

தேசிய கல்வியியற் கல்லூரியின் அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை ஜூன் 5ஆம் திகதி கோப்பாயில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதிக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் ஜூன்மாதம்5ஆம் திகதி காலை 9 மணிக்கு கோப்பாயில் அமைந்துள்ள யாழ். தேசிய கல்வியியிற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு பதிவுசெய்து அன்றைய தினமே கற்கைநெறிக்குள் உள்வாங்கப்படவுள்ளனர். இதற்கான கடிதங்கள ஏற்கனவே பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இம்முறை ஆரம்பக்கல்வி 60 பேர், விஞ்ஞானம்தமிழ்மொழி மூலம் 40 பேர், விஞ்ஞானம் ஆங்கிலமொழி மூலம் 20. பேர், கணிதம் தமிழ் மொழி மூலம் 44 பேர், கணிதம் ஆங்கில மொழிமூலம் 8 பேர், ஆங்கிலம் 35 பேர், சித்திரம் 15 பேர், பரதநாட்டியம் 15 பேர், கர்நாடக சங்கீதம் 15 பேர், விசேட கல்வி 15 பேருமாக மொத்தம் 267 பேர் உள்வாங்கப்படவுள்ளனர் என கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி எஸ்.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (இ-9)

வைகாசி விசாகப் பொங்கல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சித்தியம் புளியடி அண்ணமார் ஆலயத்தில் வைகாசி விசாகப் பொங்கல் விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6 மணியளவில் பாரம்பரிய முறைப்படி முரசு பறை முழங்க நடைபெறும். இவ்விழா கடந்த 25.05.2018 வெள்ளிக்கிழமை இரவு விளக்கு வைப்புடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 8 ஆம் திகதி இரவு மண்டபப் பூசையுடன் நிறைவு பெறும். - (இ)

இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாதம் இந்து சமய அறநெறிக் கல்வி-கொடித்தினம்-2018

(யாழ்ப்பாணம்)

இந்து சமய அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாதம் மற்றும் இந்து சமய அறநெறிக் கல்வி - கொடி தினம் என்பன அனுஷ்டிக்கப்படுகின்றது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரதுகுருபூஜை தினமாகிய மே மாதம் 31 ஆம் தேதி முதல் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை "இளம் சிறார்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு அறநெறிக் கல்வி தேவையென உணர்வீர்!" என்ற தொனிப்பொருளில் நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இவ்வாரத்தில் பல்வேறு செயற்றிட்டங்களை செயற்படுத்த புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் அமைச்சரின் வழிகாட்டல் மற்றும் அமைச்சினது ஒருங்கிணைப்புடன் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நோக்கங்கள்

தேசிய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாதம் மற்றும் இந்து சமய அறநெறிக் கல்வி - கொடி தினம் அனுஷ்டிக்கப்படுவதன் நோக்கங்கள்

* இந்து சமய அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை இந்துமக்கள் மத்தியில் குறிப்பாகப் பெற்றோர் மத்தியில் ஏற்படுத்துதல்.

*இந்து மாணவர்கள் கல்வி கற்கும் அனைத்துப் பாடசாலைகளும் இந்து மாணவர்களை அறநெறிப் பாடசாலைகளுக்கு செல்வதனை ஊக்கப்படுத்தவேண்டியதன் அவசியத்தை பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்திற்குஉணர்த்துதல்.

*ஆலயங்கள் தோறும் அறநெறிப்பாடசாலைகள் எனும் இலட்சிய வாசகத்திற்கு அமைவாக அறநெறிப் பாடசாலைகள் இல்லாத இடங்களில் அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு ஆலய அறங்காவலர்கள் முன் வரவேண்டியதன் அவசியத்தை உணர்த்துதல்.

*அறநெறிப்பாடசாலைகள் சீரான முறையில் நடத்தப்படுவதற்கும் மாணவர்கள் தடையின்றி அறநெறி வகுப்புக்களுக்கு செல்வதற்கும் ஏதுவாக தனியார் கல்வி நிலையங்கள் வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரத்திலும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை நேரத்திலும் வகுப்புக்கள் நடத்தப்படுவதை தவிர்த்து ஒத்துழைப்பு வழங்க வேண்டியதன் அவசியத்தை தனியார் கல்வி நிலைய நடத்துநர்களிற்கு உணர்த்துதல்.

*கொடி தினத்தில் சேகரிக்கப்படும் நிதியினைக் கொண்டு இந்துசமய அறநெறிக் கல்விச் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கான நிதியம் ஒன்றை 1985 ஆம் ஆண்டு 31ஆம் இலக்க இந்து பண்பாட்டு நிதிய சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இந்து பண்பாட்டு நிதியத்தின் கீழ் ஏற்படுத்துதல்.

*ஒவ்வொரு மாணவர்களும் சமூக சேவை மற்றும் மற்றவர்களுக்கு உதவுதலை நோக்கமாகக் கொண்டு வாழ வேண்டும். எனவே இந்நிதி சேகரிப்பின் மூலம் அறநெறியின் முக்கியத்துவம் உணரப்படுவதுடன் மாணவர்களும் சேவையில் ஈடுபட சந்தர்ப்பம் ஏற்படுத்துதல்.

செயற்பாடுகள்

தேசிய இந்துசமய அறநெறிக்கல்வி விழிப்புணர்வு மாதத்தினையும் இந்து சமய அறநெறிக் கொடி தினத்தினையும் தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களிலும் இந்து மாணவர்கள் கல்வி கற்கும் அனைத்துப் பாடசாலைகளிலும், அனைத்து இந்துசமய அறநெறிப் பாடசாலைகள், அனைத்து இந்து ஆலயங்கள் மற்றும் இந்துசமய நிறுவனங்களினாலும் அனுஷ்டிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1. தேசிய மட்ட நிகழ்வுகள்

தேசிய இந்துசமய அறநெறிக்கல்வி விழிப்புணர்வு மாதத்தினை முன்னிட்டு தேசிய மட்டத்தில் இந்துமத அலுவல்கள் அமைச்சின் அமைச்சர் தலைமையில் தேசிய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாத ஆரம்ப நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் திருஞானசம்பந்தரது குருபூசை நிகழ்வு, இந்துசமய அறநெறிக் கொடி தினத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு, இலங்கையில் இந்து சமய அறநெறிக் கல்வியை மேம்படுத்தி விரிவாக்குவதன் அவசியம் தொடர்பான கருத்தரங்கு, இந்து சமய கலாசார கற்கைகள் நிறுவகத்தினால் நடத்தப்பட்ட இந்து சமய அறநெறிக்கல்வி ஆசிரியர்களுக்கான சான்றிதழ் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த முதற்தொகுதியினருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, இந்துசமய அறநெறிக்கல்வி ஆசிரியர்களுக்கான முதலாவது பட்டய (டிப்ளோமா) பயிற்சி நெறி ஆரம்பித்துவைத்தல் போன்ற நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

2. மாவட்ட மற்றும் பிரதேச மட்ட நிகழ்வுகள்

தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாதத்தினையும் இந்து சமய அறநெறிக்கொடி தினத்தினையும் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு, அறநெறிக் கல்வியின் முக்கிய த்துவத்தை உணர்த்தும் கருத்தரங்குகள், விழிப்புணர்வுப் பேரணிகள் என்பவற்றை மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களின் தலைமையில் மாவட்ட, பிரதேச மக்கள் பிரதிநிதிகளை விருந்தினர்களாகக் கொண்டு சமயத் தலைவர்கள், ஆலய அறங்காவலர்கள், இந்து சமய நிறுவனங்களின் பிரதிநிதிகள் போன்றோரையும் அழைத்து ஏற்பாடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

3. பாடசாலைகள்

பாடசாலை மாணவர்கள் மத்தியில் இந்து சமய அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக காலைப் பிரார்த்தனையின் போது கருத்துரைகள் வழங்குவதற்கும் இந்துசமய அறநெறிக்கல்வி கொடி தினத்தை அனுஷ்டிப்பதற்கும்ஏற்பாடுகள்மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

4. ஆலயங்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்கள்

இந்து சமய அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை இந்து மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விதமாக சொற்பொழிவுகள், கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல். இந்து சமய அறநெறிக்கல்வி கொடி தினத்தினை அனுஷ்டித்தல், தேசிய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாதத்தினை அனுஷ்டிக்கும் இந்துசமய அறநெறிப் பாடசாலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கு தல் போன்ற விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

5. இந்து சமய அறநெறிப்பாடசாலைகள்

தேசிய அறநெறிக்கல்வி விழிப்புணர்வு மாத ஆரம்ப நிகழ்வு, இந்து சமய அறநெறிக்கல்வி கொடி தின நிகழ்வுகள், திருஞான சம்பந்தரது குருபூசை நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்திடும் விழிப்புணர்வுப் பேரணி, போன்றவற்றை செயற்படுத்துமாறு அறநெறிப் பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டு கொடி வாரத்தின் மூலமாக இந்துப் பண்பாட்டு நிதியத்திற்குக் கிடைத்த நிதி தொடர்பான கணக்கறிக்கை.

கடந்த வருடம் 2017 ஜூன் மாதம் 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு வாரம் நாடு முழுவதும் அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்புடன் மிகுந்த விருப்போடும் வரவேற்போடும் நிகழ்ந்தேறியது. அறநெறி தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்தி மக்களின் கவனத்தை ஈர்த்த நிகழ்வாக அமைந்தது. பெரியவர் முதல் சிறியவர் வரை இக் கொடிவார நிகழ்விற் தம்மாலான பங்களிப்பை நல்கியிருந்தனர்.

தேசிய இந்துசமய அறநெறிக்கல்வி விழிப்புணர்வு மாதத்தினையும் இந்து சமய அறநெறிக் கொடிதினத்தினையும் அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்திடும் வகையிலும் இளம் இந்துச்சிறார்களின் முன்னேற்றத்திற்கு கை கொடுக்கும் வகையிலும் அனுஷ்டிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கி இத்தேசிய இலக்கை வெற்றி கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

யாழ். ஒஸ்மானியா கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் அஷ்ஷேக் எம்.எஸ்.ஏ.எம். முபாரக் (நளீமி) தலைமையில் இயங்கும் அல்பாக்கியாத்து ரிலிஹாத் பௌண்டேஷன் ஆதரவில் ரமழான் புனித அல்குர்ஆன் போட்டி பரிசளிப்பு விழா 10வது ஆண்டாக நடைபெற்றது. இதில் எழுத்தாளர் "தேசாபிமானி" எம்.எப்.எம்.இக்பால் மாணவி ஒருவருக்கு பரிசளிப்பதையும் "நிஜத்தின் நிழல்" மலர் வெளியீட்டு நிகழ்வில் அஹதிய்யா அமைப்பாளர் ஏ.எல்.எம்.அஸ்வர், யாழ்.ஒஸ்மானியா கல்லூரி அதிபர் எம்.சேகு ராஸிது, ஏ.எம்.ஏ.அஸீஸ் மௌலவி, ஏ.எச்.ஜமால் மொஹிடீன், என்.எம்.அப்துல்லாஹ், பி.எஸ்.எம்.சரபுல் அனாம், ஆர்.கே.சுனீஸ், ஆப்தீன் ஹாஜியார், எம்.ஆர்.எம்.கமால் ஆகியோர் பங்கேற்றுள்ளதையும் படங்களில் காணலாம்

நினைவஞ்சலிக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேஸ்வரன் மறைவினை நினைவு கூரும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இல.67,கோவில் வீதி, இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளையில் இடம்பெறும். (இ)

வடமராட்சியிலுள்ள வெளிமாவட்ட மீனவர்களின் வாடிகளை அகற்றாவிட்டால் மாபெரும் போராட்டம்

தமிழ் மீனவர்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் வெளி மாவட்ட மீனவர்களால் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை வாடிகளை உடனடியாக அகற்றாவிட்டால் மாபெரும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் என அப்பகுதி மீனவர்கள் எச்சரித்துள்ளனர். கடலட்டை வாடிகளுக்கு எதிராக நேற்று முன்தினம் போராட்டம் நடத்தியவர்களுக்கு கடற்படை புலனாய்வாளர்களால், கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதனை தொடர்ந்தே மீனவர்கள் இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு, தாளையடி, மருதங்கேணி, செம்பியன்பற்று கடற்பரப்பில் புத்தளம் மற்றும் உடப்பு பகுதிகளில் இருந்து வந்து சிங்கள மீனவர்கள் நூற்றுக்கணக்கான வாடிகளை அமைத்து கடலட்டை பிடிப்பதால், வடமராட்சி கிழக்கு மீனவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை கடந்த 27 ஆம் திகதி மேற்கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தை நடத்தியவர்களில் பலருக்கு தொலைபேசிமூலமாககொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் வெள்ளை வானில் ஏற்றுவோம், 4ஆம் மாடி பார்க்க ஆசையாக இருக்கிறதா? என்று கடற்படையின் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக நேற்று முன்தினம் மருதங்கேணி பிதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வடமராட்சி கிழக்கு மீனவர்கள் பிரதேச செயலரிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதாக பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்திருந்தார். குறித்த கடலட்டை வாடி தொடர்பான முடிவுகள் ஏதும் எட்டப்படாது கலந்துரையாடல் நிறைவு பெற்றது. எனினும் நாளை முதலாம் திகதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் கலந்துரையாடலில் முடிவுகள் எட்டப்படும் என மீனவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய தினமும் தொடர்ச்சியான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாலும், சட்டவிரோத கடலட்டை வாடிகளை உடனடியாக அகற்ற தவறினால் மாபெரும் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப் படுமெனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பான முக்கிய முடிவுகள் முதலாம் திகதிய கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-4-60)

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் பிரதமர் ரணிலுடன் சந்திப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது. இந்த சந்திப்பு நேற்றுக்காலை அலரிமாளிகையில் இடம்பெற்றது.

மேக் தொன்பரி, கேரோல் சீ போட்டர், விக்கி ஹட்ஸ்லர் குய்ட்டர் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அத்துல்கெஷாப் ஆகியோர் இந்த குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இலங்கையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகளுக்கு அமெரிக்காவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது தொடர்பாக இதன்போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. (இ-7)

ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தக் கோரி யாழில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் ஊடக வியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைக் கண்டித்தும் தமிழ் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தக் கோரியும் யாழ்ப்பாணத்தில் ஊடக வியலாளர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து நேற்றையதினம் முற்பகல் 10 மணியளவில் போராட்டம் ஒன்றை மூன்னெடுத்திருந்தனர்.

காலைக்கதிர் பத்திரிகையின் விரிபோக முகாமையாளர் செல்வராசா இராசேந்திரம் கடந்த 28 ஆம்திகதி அதிகாலை தாக்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே குறித்த போராட்டம் இடம்பெற்றது.

முன்னைய ஆட்சிகளிலும் தற்போதைய ஆட்சியிலும் ஊடக வியலாளர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் குற்றவாளிகள் தொடர்ந்தும் கைது செய்யப்படாமல் சுதந்திரமாகவேநடமாடுகின்றனர்.

எனவேஊடகசுதந்திரத்தை உறுதிப்படுத்து. மாறு குறித்த போராட்டத்தின் போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

ஆறு மாதக் குழந்தையை வெட்டிக் கொலை செய்த தந்தை தற்கொலை

(கோமுப்பு)

பிங்கிரிய இஹல பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் தனது குடும்பத்தினுள்ள மூவரை வெட்டி காயப்படுத்தியதுடன் தனது ஆறு மாதக் குழந்தையையும் கொலை செய்துள்ளதாக பிங்கிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த சந்தேக நபர் தனது மனைவி, ஆறு மாதக் குழந்தை மற்றும் மனைவியின் பெற்றோர் போன்றவர்களையே இவ்வாறு வெட்டிக் காயப்படுத்தியதுடன் தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவரால் வெட்டுக் காயத்துக்கு இலக்கான குழந்தை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இதேவேளை சாயமடைந்த மனைவி, மனைவியின் தந்தை, தாய் ஆகியோர் ஆபத்தான நிலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981 கனடா P.R. எக்கவுண்டன் மணமகனுக்கு A/L தராதரமுள்ள அழகிய மெல்லிய மணமகள் தேவை..

தொடர்புக்கு
077 528 4718

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L கமம்
எதிர்பார்ப்பு: விவாகரத்துப் பெற்றவர்
தொ.இ: B/7734

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O//L சுவிஸ்
தொ.இ: B/7735

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 187cm
தகைமை/தொழில்: CBFLOLC
விற்பனையாளர்
எதிர்பார்ப்பு: கைவசபோகனம்
தொ.இ: B/7737

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம்: 6'
தகைமை/தொழில்: Diploma
சொந்தத் தொழில்
தொ.இ: B/7738

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 57 செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி
அரசதொழில்
தொ.இ: G/7896

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 35 செவ் 12இல்
உயரம்: 5'3"
தகைமை/ தொழில்:BSC
தொ.இ: G/7905

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 74
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/7906

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்திராட்டாதி
கி.பா: செவ் 4இல்
உயரம்: 150cm
தகைமை/தொழில்:BBM தனியார்
தொழில்
தொ.இ: G/7915

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

மண்ணை கொள்வனவு செய்தவர்கள் உடனடியாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவும்

விசேட சட்டவைத்திய நிபுணர் ராஜபக்ஷ கோரிக்கை

(மன்னார்)

மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்து உடைக்கப்பட்டு புதிய கட்டடம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த "லங்கா சதொச" விற்பனை நிலைய வளாகத்தில் இருந்து அகழ்வு செய்யப்பட்ட மண்ணை பெற்றுக்கொண்ட மக்கள் உடனடியாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்து மண்ணை ஆய்விற்கு உட்படுத்துமாறு விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ. ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஷ மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் நேற்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் "லங்கா சதொச" விற்பனை நிலையத்தின் வளாகத்தில் உள்ள மண் மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

பொதுமக்கள் குறித்த மண்ணை கொள்வனவு செய்து தமது வீடுகளில் கொட்டிய போது மனித எலும்புத்துண்டுகள் வெளிவந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் குறிப்பிட்ட சிலர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஏற்கனவே முறைப்பாடு செய்திருந்தனர்.

குறித்த சம்பவம் கடந்த மார்ச் மாதம் 19 திகதி முதல் 24 ஆம் திகதி வரையில் இடம் பெற்றுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி பொலிஸ் அதிகாரிகளினால் கூறப்பட்ட மைக்கு அமைவாக மன்னார் நீதவான் மார்ச் மாதம் 28 ஆம் திகதி அங்கு சென்று பார்வையிட்டுள்ளார்.

குறித்த மண் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது மனித எலும்புகள் குறித்த மண்ணில் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மனித எலும்புகள் மீட்கும் பரிசோதனைகள் அழைக்கப்பட்ட அதிகாரிகளின் கீழ் கட்டம் கட்டமாக இடம் பெற்று வருகின்றது.

மன்னார் நீதவானின் முன்னிலையில், அவரின் கட்டளைக்கு அமைவாக குறித்த அகழ்வுப் பணிகள் தற்போதும் இடம்பெற்று வருகின்றன.

அழைக்கப்பட்ட திணைக்களங்களில் இருந்து வருகை தந்தவர்கள் குறித்த அகழ்வுப் பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

குறித்த அகழ்வை முழுமைப்படுத்த வேண்டியுள்ளது. எனவே மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்து உடைக்கப்பட்டு புதிய கட்டடம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த "லங்கா சதொச" விற்பனை நிலைய வளாகத்தில் இருந்து மண்ணை மக்கள் ஏற்கனவே பெற்றுள்ளனர்.

மக்கள் தமது வீடுகளுக்கு போட்டுள்ள குறித்த மண்ணையும் ஆய்வு செய்ய வேண்டிய நிலை உள்ளது. எனவே குறித்த மண்ணையும் ஆய்வு செய்யும் போதே உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

எனவே குறித்த வளாகத்தில் இருந்து மண்ணைப் பெற்றவர்கள் உடனடியாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து, மண்ணையும் ஆய்வு நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டும்.

இதன்மூலமே குறித்த மண்ணில் என்ன இருக்கின்றது என்பது தொடர்பில் மக்களுக்கு தெரிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-4)

மூன்றாவது நாளாகவும்

மன்னாரில் அகழ்வுப்பணி தொடர்கின்றது மனித எலும்புத் துண்டுகள், பற்கள் மீட்பு

(மன்னார்)

மன்னார் சதொச விற்பனை நிலைய வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புகள் அகழ்வு பணிகள் நேற்று புதன் கிழமை 3 ஆவது நாளாக இடம் பெற்ற போதும் அன்றைய தினம் மன்னார் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு அகழ்வு பணிகளின் போது புகைப்படம்,வீடியோ ஆகியவற்றை பதிவு செய்வதை அதிகாரிகள் மட்டுப்படுத்தியுள்ளனர்.

சதொச விற்பனை நிலைய வளாகம் மற்றும் மன்னார் பொது மயானத்திற்கு பின் பகுதியில் சேகரிக்கப்பட்ட மண் ஆகியவை கடந்த 28 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் குறித்த இரு இடங்களிலும் ஒரே நேரத்தில் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப் பட்டன.நேற்று மூன்றாவது நாளாகவும் குறித்த அகழ்வுப் பணிகள் குறித்த இரு இடங்களிலும் ஒரே நேரத்தில் ஆரம்பமாகியது. இதன் போது நேற்றையதினம் காலை சதொச" விற்பனை நிலைய வளாகத்தில் இடம் பெற்று வரும் மனித எலும்புக்கூடு அகழ்வு பணியை செய்தி சேகரிக்கச் சென்ற மன்னார் பிராந்திய ஊடகவியலாளர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.எனினும் அகழ்வு பணிகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் ஊடகவியலாளர்கள் புகைப்படம் எடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்வதற்கு அங்குள்ள அதிகாரிகள் அனுமதி வழங்கவில்லை.அகழ்வு பணிகள் சிறிது நேரம் நிறுத்தப்பட்ட போது கடமையை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் காலை 7 மணியளவில் ஆரம்பமான குறித்த அகழ்வு பணியின் போது விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ. ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர்,களனி பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமையிலான குழுவினர், விசேட தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்களங்களான வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மன்னார் நகர சபை,நிலஅளவைத்திய திணைக்களம், பிரதேச செயலகம்,மாவட்டச் செயலகம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். தொடர்ந்தும் இரு இடங்களிலும் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.குறித்த அகழ்வுகளின் போது மனித எலும்புத் துண்டுகள், பற்கள் என மனித எச்சங்கள் அதிகளவில் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-4)

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு பேரணி மன்னாரில்

(மன்னார்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சுற்றுச்சூழலின் பாதுகாப்பின் அவசியத்தை வழியுறுத்தி மன்னார் நகரில் உள்ள பாடசாலை மாணவர்களை ஒன்றிணைத்து நேற்று முற்பகல் 10 மணியளவில் விழிப்புணர்வு பேரணி மற்றும் சிரமதான நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட சுற்றாடல் அதிகார சபையும், மன்னார் வலயக் கல்வி பணிமனையும் இணைந்து குறித்த விழிப்புணர்வுப் பேரணியை முன்னெடுத்தனர்.

முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் குறித்த பேரணி ஆரம்பமானது.

இதன்போது மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன், மன்னார் மாவட்ட சுற்றாடல் அதிகார சபை அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கலந்து கொண்ட பாடசாலை மாணவர்கள் பதாகைகளை ஏந்தியவாறு மாவட்டச் செயலகத்தில் இருந்து மன்னார் பிரதான பாலம் வரை ஊர்வலமாகச் சென்றனர். அதன் பின் மன்னார் பிரதான பாலப் பகுதியில் மாணவர்கள் சிரமதானத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

மன்னார் மாவட்டத்திற்கான விசேட விவசாய ஊக்குவிப்பு வேலைத்திட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திற்கான விசேட விவசாய ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின் முதலாவது நிகழ்வு பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனையால் கடந்த மாதம் 24 ஆம் திகதி 10 மணியளவில் உயிலங்குளம் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி. அ. ஸ்ரீரங்கன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க. சிவநேசன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜி.குணசீலன், விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் , விவசாயப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டபிள்யூ. எம். டபிள்யூ. வீரக்கோன், தேசிய விவசாய தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் மையத்தின் பணிப்பாளர் ஸ்ரீரங்கன் பெரியசாமி, விவசாயத் திணைக்களத்தின் (ஆராய்ச்சி) மேலதிகப் பணிப்பாளர் கலாநிதி எஸ். கே. அரசகேசரி மற்றும் மாகாண விவசாயப் பணிப்பாளர் சு. சிவகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் பொது-மக்கள், விவசாயிகள், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 150 இற்கு மேற்பட்டோர் பங்குபற்றியிருந்தனர். (2)

குளக்கட்டில் வீசப்பட்ட குப்பையிலிருந்து அரச திணைக்களங்களின் ஆவணங்கள் மீட்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா வைரவப்புளியங்குளம் குளக்கட்டுப்பகுதியில் வீசப்பட்ட குப்பையிலிருந்து நேற்று முன்தினம் அரச திணைக்களங்களின் ஆவணங்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வைரவப் புளியங்குளம் குளக்கட்டுப் பகுதியில் இனந்தெரியாதவர்களினால் வீசப்பட்ட குப்பைக் கழிவுகளிலிருந்து அரச திணைக்களங்களின் ஆவணங்கள் சில மீட்கப்பட்டுள்ளன. இதையடுத்து குறித்த ஆவணங்கள் அங்கிருந்து பெறப்பட்டுள்ளதுடன் சிவில் பாதுகாப்புக் குழுவினரிடம் அவற்றை ஒப்படைத்துள்ளனர். வைரவப் புளியங்குளம் பகுதியில் குப்பை வீசுவதைத் தடுக்கும் நடவடிக்கையை அப்பகுதியிலுள்ள இளைஞர்கள், விழிப்புணர்வுக்குழுவினர் மேற்கொண்டு வருகின்றார்கள்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னரும் இதே பகுதிகளில் கோழிக்கழிவுகள், குப்பைகள் வீசப்பட்டு வந்துள்ளன. அவற்றைத் தடுப்பதற்கும் பல நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(2-281)

உலக சுற்றாடல் தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

(குருமன்காடு)

உலக சுற்றாடல் தினம் வவுனியாவில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நகரசபை மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந் நிகழ்வானது வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து ஆரம்பமாகி விழிப்புணர்வுப் பேரணியாக மணிக்கூட்டு சந்தி வழியாக வைரவப்புளியங்குளத்தை வந்தடைந்து அங்கு வீடு வீடாக பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கழிவுப்பொருட்களை வகையாகப் பிரித்து அதனை சுத்திகரிப்பது தொடர்பான பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இந் நிகழ்வில் கூமாங்குளம் சித்திவிநாயகர் பாடசாலை, இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

"உயிரிகளின் உயிர் நாடியான ஈர நிலங்களை காப்பது எமது கடமை" எனும் தொனிப்பொருளில் நடத்தப்பட்ட இந் நிகழ்வில் வவுனியா நகரசபை தலைவர் கௌதமன், உப தலைவர் எஸ். குமாரசாமி, அதிபர் எஸ்.அமிர்தலிங்கம், தெற்கு வலயத்தின் பணிப்பாளர் மு.ராதாகிருஸ்ணன் ஆகியோர்கலந்துகொண்டிருந்தனர்.(2-250)

மீள்குடியேறியுள்ள குடும்பங்களுக்கு அடிப்படை வசதி ஏற்படுத்த வேண்டும்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக புள்ளிவிபரத்தில் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் மீள்குடியேறியுள்ள கூடுதலான குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் மற்றும் வாழ்வாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியிருப்பதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் ஒன்றான பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மூன்று கிராம அலுவலர் பிரிவுகள் நிலக்கண்ணி வெடி ஆபத்து காரணமாக மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்படவிலலை.

இருந்த போதும், ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளில் நான்காயிரத்து 109 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 199 பேர் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் குறித்த பிரதேசத்தில் பல்வேறு வகையான தேவைப்பாடுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, வீதிப்புனரமைப்புக்கள் மற்றும் உட்கட்டுமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளபோதும், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு தகவல்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, மீள்குடியேறியுள்ள ஆயிரத்து 821 குடும்பங்களுக்கு நிரந்தரமான வாழ்வாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் இதுவரை இரண்டாயிரத்து 755 நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளபோதும், 946 குடும்பங்களுக்கான வீட்டுத்தேவைகள் காணப்படுகின்றன.

இதேவேளை பகுதியளவில் சேதமடைந்த 56 வீடுகள் புனரமைக்கப்பட்டுள்ளபோதும், இன்னமும் பகுதியளவில் 449 வீடுகள் புனரமைக்க வேண்டியிருப்பதாகவும் மேற்படி தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 840 வரையான கிணறுகள் 367 மலசலகூடங்கள் என்பனவற்றின் தேவைப்பாடுகளும் காணப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

சிறிய குளங்களை புனரமைத்து விவசாயச்செய்கையை ஊக்குவிக்குக!

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற சிறிய குளங்களைப் புனரமைத்து அதன் கீழான விவசாயச்செய்கைகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய ஒன்பது நீர்ப்பாசனக்குளங்கள் தவிர, கமநலசேவை நிலையத்தின் ஆளுகைக்குட்பட்ட சுமார் 444 குளங்கள் காணப்படுகின்றன.

அதாவது, கரைச்சிப் பிரதேசத்தில் 44 சிறியகுளங்களும் கண்டாவளைப் பிரதேசத்தில் 65 வரையான குளங்களும் பூநகரிப் பிரதேசத்தில் 196 வரையான குளங்களும் பளைப்பிரதேசத்தில் 139 வரையான குளங்களும் காணப்படுகின்றன.

இதில் 213 வரையான குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளபோதும், 231 வரையான குளங்கள் புனரமைக்க வேண்டிக்காணப்படுவதாகவும் இந்தக்குளங்களைப் புனரமைத்து இதன்கீழுள்ள விவசாய நிலங்களை செய்கைகளுக்குட்படுத்துவதன் மூலம் மாவட்டத்தின் வறுமை நிலையைப்போக்கமுடியும் என்றும் பல்வேறு தரப்புக்களும் தெரிவித்துள்ளன. (2-315)

சங்குப்பிட்டி பாலப்பகுதியில் புகைப்படம் எடுப்பவர்கள் அவதானத்துடன் செயற்படுங்கள்

கிளிநொச்சி - சங்குப்பிட்டிப் பாலப்பகுதி ஆழமான கடல் என்பதன் காரணமாக, இப்பகுதிக்கு வருகை தருபவர்கள் கடலில் குளிப்பது தொடர்பாக, மிகுந்த விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தின் சுற்றுனாமையமாக சங்குப்பிட்டிப் பாலப்பகுதி அபிவிருத்தி அடைந்துவரும் நிலையில் ஏ-32 வழியான போக்குவரத்தும் நடைபெறுகின்றபோது விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

எனவே புகைப்படம் எடுப்பவர்கள் வீதி ஒழுங்குகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறும் வாகனங்கள் வரும்போது வீதியைக் கவனிக்காமல் வீதியைக் கடக்க வேண்டாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியில் சிறுவர்களின் நடமாட்டம் தொடர்பாக பெரியவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயற்படுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை புகைப்படம் பிடிப்போரினால் கூடுதலான விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளதன் காரணமாக இப்பகுதியில் நடமாடும் வீதிப்போக்குவரத்து பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுமாறும் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (2-4)

மன்னாரில் கம்பன் விழா

கம்பன் விழா, நான்காவது ஆண்டாக மன்னாரில் நடைபெறவுள்ளது. மன்னார் மாவட்ட சைவக் கலை இலக்கியப் பெருமன்றம் ஜூன் மாதம் 3 ஆம் திகதி மன்னார் நகர மண்டபத்தில் நடத்தும் இக்கம்பன்விழாவில் பல அறிஞர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கந்தையா நீலகண்டன் அரங்கில் மன்னார் மாவட்ட சைவக் கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவர் செந்தமிழருவி மஹா தர்மகுமாரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

கம்பன் விழாவில் பேராசிரியை திருமதி.மனோன்மணி சண்முகதாஸ் முன்னிலை வகிப்பார். பிரதம விருந்தினராக மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலாளர் எம். பரமதாசன் உட்பட பல உயர் அதிகாரிகளும் பல சமய சமூக மன்றங்களின் முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

விருந்தினர் வரவேற்பு, மங்கள இசை, மங்கள விளக்கேற்றல், கடவுள் வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து, அரங்கத் திறப்புரை, ஆசியுரை, தலைமையுரை, கம்பன் பாடலுக்கான நடனம், கம்பன் பற்றிய சிறப்புக்கவிதை, இசை நாடகம் என்பன ஆரம்ப அரங்கில் இடம்பெறும்.

"கம்ப காவிய நோக்கம் நிறைவேற பெரிதும் துணை செய்தவர்கள், கூடிப்பிறந்த தம்பியரா? கூடச் சேர்ந்த தம்பியரா?" எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமண்டபம் இடம் பெறவுள்ளது. தமிழறிஞர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்பட்டிமண்டபத்தில் மொழியும் வள்ளல் யரா ரதீஸ், செந்தமிழருவி மஹா தர்மகுமாரக் குருக்கள், இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாசன், மொழியும் வள்ளல் சோ.றோகன்ராஜ், தமிழ் ஜோதி எஸ்.ரமேஸ், இலக்கிய இளந்தளிர் பா.சதீஸ் ஆகியோர் பங்குபற்றுவர்.

கம்பன் தமிழூடாக தமிழிலக்கியப் பணியை நீண்டகாலமாகப் புரிந்துவரும் ஒருவருக்கு, ஆண்டுதோறும் வழங்கப்படும் கம்பன்புகழ் விருதை இவ்வாண்டு வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பெறுகிறார். ஏற்கனவே இவ்விருதை கம்பவாரிதி இ.ஜெயராஜ், தமிழருவி த.சிவகுமாரன், ஸ்ரீபிரசாந்தன் ஆகியோர் பெற்றிருக்கின்றனர்.

கலைப்பணியூடாக சமூகப் பணி செய்தவர்கள் வரிசையில் மன்னார் மாவட்ட முன்னாள் கலாசார உத்தியோகத்தர் திருமதி.பு.மணிசேகரன், மன்னார் மாநகரசபை உறுப்பினர் மனோ ஐங்கரசர்மா, ஆசிரியர் பேணாட் ரமேஸ் ஆகியோரும் இளங்கலைஞர்கள் வரிசையில் திருமதி க.நிறைமதி (வவுனியா), ஜெயம் ஜெகன் (முல்லைத்தீவு), வை.கஜேந்திரன் (மன்னார்), தீபச்செல்வன் (கிளிநொச்சி), தனு (நெடுந்தீவு) ஆகியோரும் கௌரவம் பெறவுள்ளனர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (2)

கைப்பணிப் போட்டியில் தேசிய ரீதியில் சாதனை

(கொழும்பு)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கைப்பணிப் போட்டியை கல்வி அமைச்சு மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவை என்பன இணைந்து "சில்ப நவோத 2018" கைப்பணிப் போட்டியை நடத்தியது.

இதில் அகில இலங்கை ரீதியில் பல பாடசாலைகள் பங்குபற்றின. வடக்கு மாகாணத்தில் கலந்து கொண்ட பாடசாலைகளில் வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் அதிக வெற்றிகளை தனதாக்கிக் கொண்டது. அந்த வகையில் சிரேஷ்ட பிரிவில் உரதுஜினி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தையும், கனிஷ்ட பிரிவில் பி.பிரிய கௌரி தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும், தி.கபிசன் ஆறுதல் பரிசில்களையும் பெற்றுக்கொண்டனர்.

இப்பரிசுகள் திங்கட்கிழமை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

வெளிச்சவீடுகளை அமையுங்கள்

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட நொச்சிமுனை, காக்கை தீவு ஆகிய பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்ற வகையில் கரையோரப் பகுதிகளில் வெளிச்ச வீடுகளை அமைத்துத் தருமாறு கிராஞ்சி சிறிமுருகன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரிப்பிரதேசத்திற்குட்பட்ட கிராஞ்சி சிறிமுருகன் கடற்றொழிலாளர், கூட்டுறவுச் சங்கத்திற்குட்பட்ட கடற்றொழிலாளர்கள் நொச்சிமுனை, இலவங்குடா, காக்கை தீவு, எருமைதீவு உள்ளிட்ட பகுதிகளில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இரண்டு இடங்களில் வெளிச்ச வீடுகளை அமைத்துத்தருமாறு தெரிவித்த சங்க நிர்வாகம் தற்போது வீதிக்கு பொருத்துகின்ற சூரிய மின்கலத்தொகுதியுடன் கூடிய மின்விளக்கு ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

இதனுடைய உயரம் மிகக் குறைவாக இருப்பதனால் கடற்றொழிலாளர்களுக்கு சிரமங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளதுடன் இப்பகுதியில் ஒரு வெளிச்ச வீடு ஒன்றினை அமைத்துத்தருமாறு மேற்படி நிர்வாகம் தெரிவித்துள்ளது. (2-315)

கலைத்தரிசனம்

*** மரபுவழி இசை நாடகம், கவிதை, விளையாட்டு என பல்வேறு துறைகளில் மிளிர்ந்துவருகிறீர்கள். தங்களைப் பற்றிக் கூறுங்கள்?**

நான் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் எனது கல்வியைக் கற்றேன். அந்தநாட்களில் பாடசாலையில் நடைபெறும் கலைநிகழ்வுகளில் ஆர்வத்தோடு பங்குபற்றுவேன். பாட்டுப்போட்டி, பேச்சுப்போட்டி என்பவற்றில் பங்குகொண்டு பல பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றேன். பாடசாலை நாடகங்களில் பாடி நடித்துள்ளேன். இவ்வேளைகளில் எல்லாம் நல்ல நாடக நடிகனாக வரவேண்டும் என்ற ஆர்வம் என்னுள் எழுந்தது. எங்கள் ஊரிலும் அயல் ஊர்களிலும் நாடகங்கள், இசைக் கச்சேரிகள் எங்கு நடந்தாலும் சென்று பார்ப்பது எனது வழமையாகியது. அத்துடன் மரதன் ஓடுவது, நீளம் பாய்வது, மென்பந்து துடுப்பாட்டம் இவைகளிலும் எனக்கு ஆர்வம் மிகுதியாக இருந்தது. இந்த ஆர்வம் காரணமாக எங்கள் கழகம் சார்ந்த போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பலவற்றையும் பெற்றிருந்தேன். கலைநிகழ்வுகளில் நான் பங்குபற்றி வரும் போது நவாலியூர் நா. செல்லத்துரை ஆசிரியரை சந்திக்கும் பேறு கிடைத்தது. அப்போது அவர் தனது எழுத்து ருவாக்கத்தில் தயாரித்த சமூகநாடகமான "பாவகாணிக்கையில்" நடிக்குமாறு கேட்ட தற்கமைய அந்நாடகத்தில் பெண்வேடத்தில் நடித்தேன். இந்த நாடகம் முதன் முதலில் யாழ்.மாநகரசபை அரங்கிலே மேடையேற்றப்பட்டது. சிறப்பான வகையிலே கதை, வசனம், நெறியாள்கை என்பன அமையப் பெற்றதாலும் நடிகர்கள், ஏனைய கலை ஞர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெற்றமையாலும் அந்நாடகம் நல்ல வரவேற்பைப் பெற்றதுடன் நானும் நாடக உலகில் நிலையாக காலூன்றி வாழச் செய்தது. இந்த நாடகத்தில் பங்காளிகளான நடிக கலாமணி வ.செல்வரத்தினமும் கலா பூஷணம் கே.செல்லத் தம்பி, கலைஞர் இரா.சின்னராசா ஆகியோர் தங்கள் நாடக சபாவாகிய அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவில் இணைந்து பங் காற்றுமாறு கேட்டுக் கொண்டார்கள். அதற் கமைவாக அரியாலை ஸ்ரீகலைமகள் நாடக சபாவினரால் மேடையேற்றப்பட்ட ஒரு சரித் திர நாடகத்தில் கதாநாயகன் வே.ஐயாத்து ரையை கட்டி வைத்து அடிக்கும் ஒரு பாத் திரத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அதைத் தொடர்ந்து "சகோதர விரோதி" என்ற சரித்திர நாயகத்தில் கதா நாயகனாக நடித்தேன். எனக்கு ஜோடியாக நடிக கலாமணி ச.செல்வரத்தினம் கதாநாயகியாக நடித்தார். இந்த நாடகத்தினை நட்டு வாங்கம் செய்தவர்கள் நாடக உலகின் புகழ் பூத்த கலைஞர்களான விக்கே.இரத்தினம், வே.ஐயாத்துரை, நீ.செல்லக்கண்டு ஆகியோர் இவர்களே நாடக உலகில் நான் உயரக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள்.

*** நீங்கள் இதுவரை அரங்காற்றிய நாடகங்கள் தொடர்பாக கூறுங்கள்?**

நாயன்மார்க்கட்டு பாரதி நாடகமன்றம் ஆசிரியர் எஸ். பாலசிங்கத்தின் நெறியாள்கை, கதை வசனத்தில் சங்கிலியன், இராஜராஜசோழன், மரகதபுரிமாலா ஆகிய நாடகங்களை மேடையேற்றியது. இந்த நாடகங்களில் கதாநாயக வேடத்தில் நான் நடித்தபோது என்னோடு பரராஜசிங்கம், உதயன், யுகந்தராஜா, செல்வராஜா துரைசிங்கம் ஆகியோர் பிரதான வேடங்களில் நடித்தனர். எழுத்தாளரும் ஆசிரியரும் நாடக அபிமானியுமாகிய சொக்கனின் கதை வசனத்தில் "சிங்ககிரிக் காவலன்" என்னும் சரித்திர நாடகத்தில் டாக்டர் நந்தி பிரதான பாத்திரத்தில் நடிக்க "முகலன்" எனும் பாத்திரத்தில் நான் நடித்தேன். மேலும் அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவினரின் நாடகங்களான "பதவிமோகம்", "ஏழையின் காதல்", "சத்தியவான் சாவித்திரி", "அரிச்சந் திரன்" (மயான காண்டம்), "பாமாவிஜயம்", "பண்டார வன்னியன்" போன்ற நாடகங்கள் எனக்குப் பெரும் புகழ் சேர்த்துத் தந்த நாடகங்களாகும்.

அன்றைய நாட்களில் கோடை காலங்களில் கோவில் திருவிழாக்கள், விளையாட்டுப் போட்டி இறுதிநாள் நிகழ்வுகள், நாடக விழாக்கள் என்பவற்றில் இவற்றை அடிக்கடி மேடையேற்றும் சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெற்றன. மேலும் நாவாந்துறைகெனடி வீதியில் உள்ள சனசமூக நிலைய நடிகர்களை இணைத்து "நம்பிக்கை" என்றொரு சமூக நாடகத்தை மேடையேற்றினேன். இந்த நாடகம் பல தடவைகள் வேறு வேறு இடங்களிலும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நாயன்மார்கட்டு எஸ். பாலசிங்கம் கண்டி வத்துகாமம் C.M.S. பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் வத்துகாமம் கலை வளர்ச்சிக் கழகத்தினர் இந்து நாதனின் கதை வசனத்தில் உருவான "ஒளி மயமான எதிர்காலம்" என்றொரு நாடகத்தை அரங்கேற்றினர்.

இந்நாடகத்தில் நான் கதாநாயகனாக நடித்தேன். இந்நாடகத்தில் பெண் பாத்திரங்களில் பெண்களே நடித்து அன்றைய நாட்களில் புதுமையை ஏற்படுத்தினர். என்னோடு கதாநாயகியாக நடித்தவர் செல்வநாயகி. எனது தாயார் வேடத்தில் செல்வாம்பாள் என்பவர் நடித்திருந்தார். இந்நாடகத்தை நெறியாள்கை செய்தவர் ஆசிரியர் எஸ்.பாலசிங்கம். இசை வழங்கியவர் நவாலியூர் நா. செல்லத்துரை ஆசிரியர். இந்நாடகம் மலையக மக்களின் வாழ்க்கையை மையப்படுத்தி எழுதப்பட்டதால் அப்பிரதேச பேச்சு வழக்கிலேயே உரையாடல்கள் இடம்பெற்றன. அந்தமொழி வழக்கு எனக்கு ஆரம்பத்தில் சற்று கடினமாக இருந்தபோதும் சில நாட்களில் சீருக்கு வந்தது. இரண்டுமாதங்களாக அங்கு தங்கியிருந்தே இந்நாடகத்தை அரங்கேற்ற முடிந்தது.

1975 களில் கலாபூஷணம் எஸ். புஸ்பராஜனின் கதை, வசனம், நெறியாள்கையில் அரியாலை ஸ்ரீ கலைமகள் ச.ச. நிலைய முத்தமிழ் கலை அரங்கில் "கொஞ்சம் குமரி" என்னும் கற்பனைச் சரித்திர நாடகம் மிகப் பிரமாண்டமான காட்சி அமைப்புக்களோடு மேடையேறியது. இந்நாடகத்தில் நான் கதாநாயகனாக நடிக்க, நடிகை கலாமணி செல்வம் கதாநாயகியாக நடித்தார். எஸ். புஸ்பராஜனின் "சகுந்தலை" இசை நாடகத்திலும் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. அத்தோடு "மௌன சோக நாடகம்" ஒன்றும் வித்தியாசமான முறையில் மேடையேற்றப்பட்டது. இப்பரீட்சார்த்தமான முயற்சி மிகப் பலரின் வரவேற்பைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.



கலாபூஷணம் இ.கனகரட்ணம் அவர்களுடனான சந்திப்பு

> அன்று சின்னமேளம் என்று சொல்லப்படுகின்ற நடனக் கலை நிகழ்வு மூலம் கலையுலகப் பிரவேசம் செய்து இன்று புராண இசை நாடகங்களான சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா மயான காண்டம் எனப் பல்வேறு இசை நாடகங்களைத் தன் குழுவினருடன் அரங்கேற்றி வருகிறார். 1946 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 03 ஆம் திகதி யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டில் இளைய தம்பி-பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகனாகப் பிறந்த இவர் 'ஒளிமயமான எதிர்காலம்' என்னும் சமூக நாடகத்திலேயே முதன் முதலாக நடித்தார். இந்த நாடகம் இவருக்கு கலையுலகில் ஓர் ஒளி மயமான எதிர்காலத்தை வழங்கியிருக்கிறது. புகழ்பூத்த கலைஞர்கள் பலரின் அனுபவங்களோடு நாடகம், கவிதை எனப் பல்வேறு தளங்களிலும் மிளிர்ந்து வரும் இவர் கலாபூஷணம் கலைமாமணி, மரபுக்கலைச்சுடர், கலைமகளின் கலைச்சிகரம், இசைநாதம் முதலான விருதுகளைப் பெற்றார். கலாபூஷணம் இ.கனகரத்தினம் அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகின்றது.

*** தற்போது வரை இசை நாடகங்களை அரங்கேற்றி வருகிறீர்கள். இந்த இசை நாடகத்துள் நீங்கள் வந்ததற்கான காரணங்கள் மற்றும் காரணங்கள் தொடர்பாக கூறுங்கள்?**

இசை நாடகங்களை நடிப்பதற்கு முக்கியமானதாக பாடும் ஆற்றல் கருதப்படுகின்றது. அந்தப் பாடும் திறனை என்னுள் வளர்த்துக் கொண்டதே இந்த இசை நாடகப் பிரவேசத்துக்கு வழி செய்தது எனலாம். 1963 காலப்பகுதியில் "சின்ன மேளம்" என்னும் நடனக்கலை நிகழ்வு கோவில்களில் நடைபெறுவதுண்டு. இந்த நிகழ்வுகளை யாழ். நாச்சிமார் கோவிலடி குழுவினர் மற்றும் நல்லூர் கந்தையா குழுவினர் நடத்தி வந்தனர். இந்த நிகழ்வுகளில் பின்னணிப் பாடல்கள் பாடுவதற்கு எனக்கு சந்தர்ப்பம கிடைத்தது. யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களில் இந் நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன. பின்னர் 1963இல் அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவின் முக்கிய கலைஞன் சோக சோபித சொர்ணக்கவிக்குயில் வி.கே.இரத்தினத்திற்கான கௌரவிப்பு விழாவில் "சத்திய வான் சாவித்திரி" இசை நாடகத்தை மேடையேற்றுவதாக தீர்மானிக்கப்பட்டு அந்நாடகம் அரங்கேற்றப்பட்டது. இதில் சத்தியவானாக நானும் சாவித்திரியாக நடிகமணி செல்வமும் இயமனாக ஆர்மோனியச் சக்கரவர்த்தி மு.திரு நாவுக்கரசுவும், நாரதராக கலாபூஷணம் ச. சிவபஞ்சாட்சரமும் சுமாலியாக கலாபூஷணம் வி.கே. செல்வரத்தினமும் துய்மைச்சேனனாக இரா. சின்னராசாவும் சித்திரபுத்திரனாக கலைச்சிகரம் க.தங்கராசாவும் நடித்தனர். இதைத் தொடர்ந்து அரிச்சந்திர (மயான காண்டம்), பண்டாரவன்னியன், பாமா விஜயம் போன்ற இசை நாடகங்களிலும் நடித்து வந்தேன். இசை நாடகப் பாடல்களைப் பாடுவதோடு எப்போதும் ஊக்கமளித்தவர் ஆர்மோனியச் சக்கரவர்த்தி மு.திருநாவுக்கரசு. கலைமகள் இசைக்குழுவை அமைத்து ஒரு சில இசைக் கருவிகளுடன் இசைக் கச்சேரி களை நடத்தி வந்துள்ளேன். அதில் பல பாடல்களை நானே எழுதி இசையமைத்துப் பாடியுள்ளேன். இலங்கை வானொலியில் அரியாலையூர் கவிஞர் வே. ஐயாத்துரை இயற்றிய பாடல்களை கலைமகள் விழாவில் இசைத்துள்ளேன்.

*** கலைக்காக இவ்வளவு பெரிய சேவை யைச் செய்துள்ளீர்கள். இற்காக உங்களுக்கு கிடைத்த விருதுகள், பட்டங்கள், கௌரவிப்புகள தொடர்பாக பகிர்ந்து கொள்ளுங்கள்?**

"கலாபூஷணம்" அரச விருது, யாழ். சர்வோதயம் வழங்கிய "கலைமாமணி" விருது, அரியாலை ஸ்ரீ கலைமகள் ச.ச.நிலை யம் வழங்கிய "கலைமகளின் கலைச்சிகரம்" விருது, பாரம்பரிய நாட்டார் வழக்கியல் கழகத்தால் வழங்கப் பட்ட "மரபுக்கலைச் சுடர்", நாயன்மார் பாரதி மன்றத்தால் வழங்கப் பட்ட "இசை நாதம்" விருது, வலிகாமம் கிழக்கு பண்பாட்டலுவல்கள் கழகம் வழங்கிய "செம்புலக்குரிசில்" என்பன எனக்கு கிடைக் கப்பெற்ற விருதுகள் ஆகும்.

இந்த விருதுகள் பெறுகின்ற வேளை களிலும் ஏனைய பல சந்தர்ப்பங்களிலும் மன்றங்களாலும் நிலையங்களாலும் சபை களாலும் மதிப்பளிக்கப்பட்டமையை நான் நன்றியோடு ஏற்றுக் கொள்கிறேன்.

*** நாடக உலகில் மறக்கமுடியாத சம் பவம் ஏதும்?**

ம்... இந்த விடயத்தைக் குறிப்பிடத்தான் வேண்டும். அன்றைய நாட்களில் தினமும் நாடகம் அரங்கேறுவதுண்டு. அத்துடன் நாடகப்பழக்கம் அதாவது பயிற்சி என்பது கூட நடுச்சாமம் கடந்தே நிறைவுபெறும். இப் படியான நாட்களில் ஒரு நாள் சத்திய வான் சாவித்திரி நாடகம் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. நேரம் அதிகாலை நான்கு மணியிருந்தது. இயமன் சத்தியவானின் எனது உயிரை கவர்ந்து சென்று விட்டார். இப்போது சாவித்திரி (என் மனைவி) இயமனைத் தொடர்ந்து சென்று எனது உயிரை மீட்கும் காட்சி. இயமன்-சாவித்திரி ஆகியோருக்கிடையில் நீண்ட உரையாடல்களும் பாடல்களும் இடம்பெறும் காட்சி. நான் இறந்ததுபோல் படுத்தி ருக்க வேண்டும். இப்படியான வேளையில் அவர்கள் நடித்துக் கொண்டிருக்க நான் சற்று நேரம் உறங்கிவிட்டேன். உறங்கிவிட் டேன் என்று சொல்வதிலும் பார்க்க உறக்கம் என்னை இறுக்கத் தழுவியது என்றே சொல்ல வேண்டும். இந்த வேளையில் சாவித்திரியின் வேண்டு தலுக்கு இசைந்து இயமன் எனது உயிரை தருவதாக காட்சி. ஆனால் உறக்கத்திலிருந்த என்னால் உடனே எழும்பமுடியாமல் போய் விட்டது. இயமனும் சாவித்திரியும் தர்மசங் கடமான நிலையில் இருக்கிறார்கள். ரசிகர்கூட்டம் சத்தியவானின் உயிர் போவதை ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சாவித்திரிக்கு ஒரு யோசனை வந்தது. "ம்... இயமதர்மன் என்னை மீண்டும் ஏமாற்றிவிட்டாரே..." என்று வசனத்தைப் பேசிய படியே என்மேல் வீழ்ந்து அழுவது போல் அழுது என் காதுக்குள் "என்னை மீறும் புங்கோவன்" என்று சொல்ல இதை அறிந்த இயமன் மீண்டும் உயிர்தருவதாக வசனம் பேசி அபிநயிக்க... அப்பாடா... இப்போதும் எப்போதும் மறக்க முடியாத காட்சி தானே இது.

நாடக உலகில் அனுபவ முதிர்ச்சி உடையவரான தாங்கள் தற்போதைய கலைஞர்களுக்கு கூற விளைவ தென்ன...?

* தற்காலத்தில் நாடகம் என்பது முன்னரைப்போல் அதிகளவில் நடைபெறுவ தில்லை. அதற்கு பல்வேறு காரணங்களைக் கூறினாலும் மேடை நாடகங்களை நடிப்பதிலும் பார்ப்பதிலும் இருக்கும் சுவையே அலாதி தான். நாடகங்களினூடே தான் அன்றைய நாட்களில் கருத்துக்கள், விடயங்கள் பரிமாறப்பட்டன.

இந் நாடகம் தற்போது பல்வேறு வடிவங்களில் காணப்படுவதால் மேடைநாடகங்களுக்கான வாய்ப்புக்கள் குறைந்துள்ளன. அந்தப் பொறுப்பை தற்காலக்கலைஞர்கள் ஏற்று தொடர வேண்டும்

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

சைவத்தலைமகனாகிய திருநீற்று நெறியினைப் பரவச்செய்த சிவஞானக் குழந்தை சம்பந்தரின் குருபூசை இன்று

சைவமும் தமிழும் தழைக்கவும், சைவநெறியைக் காக்கவும், திருநீற்றின் மகிமையை உலகறியச் செய்யவும்சோழவள நாட்டில் சீர்காழிப் பதியில் அந்தணர் மரபில் கவுணிய கோத்திரத்தில் சிவபாதவிருதயருக்கும், பகவதி அம்மையாருக்கும் சைவத் தலைமகனாக ஆதிரை நன்நாளில் திருவவதாரம் செய்த பெருமகனார் "ஞானசம்பந்தர்" ஆவார். ஞானசம்பந்தரின் அவதரிப்பால் வையகம் பெற்ற பேற்றினை திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க..." என்னும் பதிகத்தில் அழகாக எடுத்துரைத்தார்.



திருஞானசம்பந்தர் பெருமான்

மூன்றாண்டு ஆகியபோது தனது தந்தையுடன் ஆலயத்திற்குச் சென்றார். அங்கிருந்த பிரமதீர்த்தத்தில் தந்தை மூழ்கி ஜபம் செய்கையில், தந்தையை காணாது தோணியப்பரின் சிகரத்தைப் பார்த்து "அம்மே, அப்பா" என அழுத ஞானக்குழந்தைக்கு சிவபெருமான் உமையம்மையருடன் காட்சி கொடுத்து சிவஞானப் பாலை ஊட்டி மறைய, நீராடச் சென்ற தந்தையர் வந்து "உனக்கு பால் தந்தவர் யார்?" என அதட்ட ஞானசம்பந்தகுழந்தை "தோடுடைய செவியன், விடைஏறி, ஓர்தூவெண்மதிசூடிக்.." என்ற திருப்பதிகத்தை பாடினார். இதனை திருத்தொண்ட புராணத்தில், "பல்லுயிரும் களிக்கூரத் தம்பாடல் பரமர்பால், செல்லுமுறை பெறுதற்கத் திருச்செவியைச் சிறப்பித்து" எல்லா உயிர்களும் இன்ப நிலையில் திளைத்து விளங்குவதற்காக தாம் பாடும் பதிகம் இறைவனின் திருச்செவியை அடைய வேண்டும் என்பதற்காக "தோடுடைய செவியன்" என்று இறைவனின் திருச்செவியை சிறப்பித்து பாடியருளினார் என சேக்கிழார் கூறுகின்றார்.

இறைவனை தந்தையாக ஏற்று தன்னை புத்திரனாக கொண்டு "சற்புத்திர மார்க்கத்தின்" வழி நின்று வழிபட்டமையினால் இறைவனிடமிருந்துபொற்றாளம், முத்துச் சிவிகை, முத்துப்பந்தல், மற்றும் படிக்காசு என்பவற்றினை பெற்றுக் கொண்டார். திருஞான சம்பந்தரினால் திருநாவுக்கரசரின் பெருமை அறிந்து "அப்பரே வாருங்கள்" என்று அழைத்தமையினால் அது முதல் அப்பர் என போற்றப்படுகின்ற திருநாவுக்கரசருடன் திருவீழிமிழலை என்ற தலத்திற்குச் சென்றபோது "வாசிதீரவே.." என்னும் பதிகம்பாடி சிவபிரான் அருளால் பெற்ற படிக்காசு மூலம் அன்னதானம் புரிந்து மக்கள் துயர்துடைத்தார். மேலும் இருவருமாகத் திருமறைக்காட்டைச் சென்றடைந்து வேதங்கள் திருக்காப்பிட்ட கதவினைப் பதிகங்கள் பாடி மீண்டும் திறக்கவும் மூடவும் செய்தனர்.

பாண்டிய நாட்டிலே சைவமும் தமிழும் அழிவுறும் நிலைவந்த போது அச்சரிவிலிருந்து மீட்க மதுரைக்குச் செல்லப் புறப்பட்ட சம்பந்தரை. "இன்று நாளும் கோளும் தீயனவாக உளதே" என்று அப்பர் தடுக்க, சம்பந்தப்பெருமான், "நாளும் கோளும்அடியார்க்கு நல்லனவே செய்வன எனுமாறு", கூறி "வேயுறு தோளி பங்கன்...." எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடியருளி,மதுரை மாநகருக்கு சென்று பாண்டிய மன்னனின் வெப்பு நோயை "மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு" என்னும் திருநீற்றுப்பதிகம் பாடி மன்னனின் வெப்புநோயைக் குணப்படுத்தி திருநீற்றின் மகிமையை உலகறியசெய்தார்.

திருஞானசம்பந்தர் தன் ஞானக் கண்ணால் இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைத் திருநாட்டில் திருகோணமலையில் மாதுமை அம்பாள் உடனுறை கோணமாமலையாரை போற்றி வழிபட்டு பாடியருளிய திருப்பதிகத்திலே "கோயிலுஞ் சுனை யும்கடலுடன்சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே" என்றும் மாதோட்டம் நகரில் அமைந்துள்ள கௌரிநாயகியம்மை சமேத கேதீச்ஸ்வரபெருமான் அருள் புரிகின்ற திருக்கேதீச்சரத்தையும் புகழ்ந்தும் திருப்பதிகங்கள் பாடியமை ஈழமணித் திருநாட்டில் வாழ்கின்ற சைவர்களுக்கு கிடைத்த பெரும் பேறு ஆகும்.

பதினாறு ஆண்டுகளே வாழ்ந்து பல அற்புதங்களைச் செய்து சைவசமய பிரதம ஆசாரியராக விளங்கிய திருஞானசம்பந்தர், இருவினைக்குவித்தாகிய இல் வாழ்க்கை என்னைச் சூழ்ந்ததே, இனி இவளுடன் சிவனடி சேர்வேன் என்று திருநல்லூர் பெருமனை வேண்டுகின்றபோது "ஞானசம்பந்தனே நீயும் நின் மனைவியும் நினது திருமணம் காண வந்தோர் யாவரும் ஈனமாம் பிறவி தீர யாவரும் இச்சோதியுனுள் வந்து சேர்மின்" என திருவாய் மலர்ந்தருளி கருவறையில் ஓர் சோதி தோன்றிய போது, "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்குய்ப்பது, வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்று தொடங்கும் நமச்சிவாய பதிகத்தைப்பாடி தன் மனைவி மற்றும் அடியார்களுடன் வைகாசி மூல நன்னாளன்று அந்த சிவசோதியில் கலந்தருளினார்.

ஆதிமுதல் அறப்பணியில் ஈடுபட்டுத் தற்போது மீளச்செயற்படத் தொடங்கியுள்ள நாயன்மார் கட்டிலுள்ள "நாயன்மார் குருபூசை மடம்" என்னும் மடாலயத்தில் திருஞானசம்பந்தப் பெருமானது குருபூசையை முன்னிட்டு திருத்தொண்டர் புராணத்தில் செம்பாதி "ஆளுடைய பிள்ளை" என்றும் "பிள்ளை பாதி புராணம் பாதி" என்று போற்றும் திருஞானசம்பந்த நாயனார் புராணம் ஓதப்பெற்று அவரின் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெறவுள்ளது. அனைவரும் கலந்து அவனருள் பெறுவோமாக.

"எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்"
நாயன்மார் குருபூசை மடம்,
நாயன்மார்கட்டு, நல்லூர்.

சாவகச்சேரி நகரசபையினரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கஜிதனின் ஏற்பாட்டில் இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. சிரமதான நிகழ்வில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் அச்சுதன், நகரசபை உறுப்பினர் கஜிதன், வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் நகரசபை ஊழியர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்:-சுபேசன்)

ரயில்வே ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

இ.போ.சவின் 300 மேலதிக பேருந்துகள் சேவையில்

(கொழும்பு)

ரயில்வே தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பினால் பாதிக்கப்படும் பயணிகளின் நலனைகருத்தில்கொண்டு இலங்கை போக்குவரத்து சபை மேலதிக சேவைகளை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நாளாந்தம் இலங்கை போக்குவரத்து சபை வழமையாக 5,400 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துகின்றன.

பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக இத்தொகையை 5,700ஆக அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி பொது முகாமையாளர் பி.எச்.ஆர்.டி. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

ரயில் ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில் இலங்கை போக்குவரத்து சபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

விசேடமாக ரயில் சேவை பெரும் எண்ணிக்கையில் இடம்பெறும் மாகாணங்களை இலங்காக கொண்டு சம்பந்தப்பட்ட டிப்போக்கள் மூலம் பயணிகளுக்கு பிரச்சினை ஏற்படாத வகையில் பேருந்து சேவைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

தவிசாளர் அனுசரித்து செல்லாவிட்டால்

ஆதரவை விலக்குவோம் உறுப்பினர் எச்சரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் தொங்கு ஆட்சி நடைபெறுகிறது. ஆகவே தவிசாளர் மற்றைய கட்சி உறுப்பினர்களையும் அனுசரித்துச் செல்ல வேண்டும். நான்கு வருடங்களும் ஒரே ஆட்சி நகரசபையில் இடம் பெற வேண்டும் என்பதனை விரும்புகிறோம். எமக்கு தவிசாளர் ஒத்துழைப்பு தராத பட்சத்தில் எமது ஆதரவினை நிறுத்திக் கொள்ள முடியும் என சாவகச்சேரி நகரசபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் கந்தையா வேளாயுதபிள்ளை தெரிவித்துள்ளார். சாவகச்சேரி நகரசபையின் விசேட அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் கருத்து வெளியிடும் உரிமை சட்ட ரீதியாக உள்ளது. சாவகச்சேரி நகரசபையின் 17 வட்டாரத்தையும் சென்று பார்வையிடும் உரிமை மற்றும் அதிகாரம் சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டும். தவிசாளர் உறுப்பினர்களுடன் ஒத்துச் செயற்பட வேண்டும்.

சகல உறுப்பினர்களையும் சமபார்வையில் பார்க்க வேண்டும். கட்சியைப் பார்க்காமல் நியாயத்தைப் பார்க்க வேண்டும். சகல உறுப்பினர்களும் சபை ஒழுங்காக இயங்க ஒத்துழைக்க வேண்டும். அதற்கு தவிசாளரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நல்ல காரியங்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். பிழையான செயற்பாடுகளை எதிர்ப்போம். எமக்குத் தேவை மக்களின் நகரின் முன்னேற்றம். கட்சி பேதம் எமக்குத் தேவையில்லை. நான் சொல்வதைத் தான் கேட்க வேண்டும் என தவிசாளர் உறுப்பினர்களை நிர்ப்பந்திக்கக்கூடாது.

அத்துடன் எமது மூலவளங்களை அழித்து வேறொருவருக்கு கொடுப்பதை அனுமதிக்க முடியாது. மாடுகளை சாவகச்சேரி நகரசபை எல்லையை விடுத்து வெளியே கொண்டு செல்லக் கூடாது. ஒவ்வொரு நாளும் 20.30 மாடுகள் என வெட்டுவதற்கு மாடுகள் எங்கே இருந்து வருகின்றன? எமது ஆலோசனைகளையும் கேட்டு தவிசாளர் நடக்காவிட்டால் நாம் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி வரும் எனத் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையில் கொல்கள மற்றும் மாட்டிறைச்சிக் கடை விடயத்தில் தவிசாளருக்கும் தமிழ் தேசியமக்கள் முன்னணி உறுப்பினர்களுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்தே கவேலாத பிள்ளை இக்கருத்தினை தெரிவித்துள்ளார். (இ-7)

பாரதம்

தமிழக சட்டசபையில் அமளிதுமளி; தி.மு.கவினர் வெளிநடப்பு செய்தனர்

(சென்னை)

சட்டப் பேரவையின் கூட்டத் தொடரின் நேற்றைய முதல் நாள் அமர்வு பெரும் அமளி துமளியால் பாதிப் படைந்திருந்தது.

சட்டப்பேரவையின் கூட்டத் தொடரின் முதல் நாளான நேற்றுமுன்தினம் தி.மு.க வினர்கறுப்புச்சட்டை அணிந்து தங்கள் எதிர்ப்பினைத் தெரி வித்துள்ளனர்.

தமிழக சட்டப்பேரவை அமர்வுகள் நேற்று முன்ன திம் காலை ஆரம்பமானது. அமர்வின் முதல் நிகழ்வாக முன்னாள் சட்டமன்ற உறுப் பினர்கள் 7 பேரின் மறை விற்கு இரங்கல் உரை வாசிக்கப்பட்டது.

இதன்போது. தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டுக்கு கண் டனம் தெரிவிக்கும் வகை யில். தி.மு.க செயல்தலைவர் மு.க.ஸ்டாலின் உட்பட தி.மு.க கூட்டணி உறுப்பினர் கள் கறுப்பு உடையணிந்து அவை நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர்.

தூத்துக்குடி துப்பாக்சி சூட்டு சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க கறுப்பு ஆடை அணிந்து பேரவைக்கு சென்றதுடன். தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டு சம்பவம் குறித்து முழுநாள் விவா தத்தைநடத்துமாறுகோரிக்கை விடுத்தனர்.

சட்டமன்ற உறுப்பினர் தமிழல் அன்சாரி துப்பாக் கிச் சூடு சம்பவத்திற்கு எதி ரான பதாகையை கையில் ஏந்தி சட்டப்பேரவைக்கு வந்திருந்தார். எனினும் சபா நாயகர் இதற்கு மறுப்பு தெரி விக்க. அவர்கள் அவையிலி ருந்து வெளிநடப்பு செய்த னர். (7)

அரசின் வினைத்திறனற்ற செயற்பாடே தூத்துக்குடி படுகொலைக்கு காரணம்

கூறுகிறார் தினகரன்

(சென்னை)

அரசாங்கத்தின் அசமந்த போக்கே தூத்துக்குடியில் 13 பேர் உயிரிழந்தமைக்கு காரணமென அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித் துள்ளார்.

சென்னையில் இடம்பெற்ற மக்கள் சந்திப் பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரி விக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மக்களின் முக்கிய பிரச் சினையாக காணப்பட்ட ஸ்டெர்லைட் ஆலை தொடர் பில் போராட்டம் எழுவதற்கு முன்னரே தமிழக அரசு மூடியிருந்தால்இந்த உயிரிழப்பு கள் ஏற்பட்டிருக்காது.

இந்நிலையில் தூத்துக் குடி துப்பாக்கிச் சூட்டை படு கொலை என்று கூறினால் அரசாங்கத்துக்கு கோபம் வருகின்றது. அப்படியென் றால் கண்ணை மூடி உறங்கு கிறார்கள் என்றா கூற முடி யும்.

மேலும் தூத்துக்குடியில் படுகொலை ஏற்படுவதற்கு முக்கிய காரணமே தற் போது ஆட்சி செய்கின்ற அரசாங்கத்தின் வினைத் திறனற்ற செயற்பாடேயாகும்.

ஆனால் அரசாங்கம், மறைந்த முன்னாள் முதல மைச்சர் ஜெயலலிதா வழி யில் ஆட்சியென கூறி மக் களை ஏமாற்றி வருகின்றது உண்மையில் அவர் இருந் திருந்தால் இத்தகைய நிலை ஒருபோதும் ஏற்பட்டிருக்காது" என தினகரன் தெரிவித்து ள்ளார். (7)

ஸ்டெர்லைட் ஆலை மூடல் குறித்த தமிழக அரசின் அரசாணையில் நம்பிக்கை இல்லாமல் உள்ளது

தொல்.திருமாவளவன் சந்தேகம்

(சென்னை)

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுவதாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாண்ண சந்தேகத்தை எழுப்புகிறது என திருமாவளவன் தெரி வித்துள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரி வித்திருப்பதாவது,

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுவதாக தமிழக அரசு அறிவித்திருந்தாலும் ஆதா ரங்களோ, காரணங் களோ குறிப்பிடப்படாமல் அது வெளி யிட்டுள்ள அரசாணை சந் தேகத்தை எழுப்புகிறது. ஆலையை மூடுவதற்கு வேறு எந்த விரிவான காரணமும் அரசாணையில் இல்லை இந்த அரசாணையை எதிர்த்து நீதிமன்றத்தில் ஸ்டெர்லைட் நிர்வாகம் எளி தாக தடை ஆணை பெற்று விடும். அதற்கு வழி வகுப் பதாகவே இந்த அரசாணை உள்ளது.

தமிழ்நாடுமாசுகட்டுப்பாடு வாரியம் வெளியிட்ட அறிவிப் பிலும்கூட விரிவான காரணங் களையோ, ஆலையை மூடு வதற்கான ஆதாரங்களையோ அளிக்கவில்லை. இந்த நிலையில் அதை அப்படியே ஏற்று ஒப்புதல் அளித்திருப் பது தமிழக அரசின் நோக் கத்தை கேள்விக்கு உள் ளாக்குகிறது. ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுவது தான் தமிழக அர சின் நோக்கம் என்றால் அதற்கான விரிவான ஆதா ரங்களைக் கொண்ட அர சாணையை வெளியிட்டிருக்க வேண்டும்.

அப்படிச் செய்யாதது ஏன்? தமிழக அரசு தற்போது செய் திருப்பது போராட்டக்காரர் களையும் எதிர்க்கட்சிகளை யும் திசை திருப்புவதற்காக வும், வழக்கம்போல ஸ்டெர் லைட் ஆலை நிர்வாகம் நீதிமன்றத்தில்தடை ஆணை பெறுவதற்கு வசதி செய் வதற்காகவுமான தந்திரம் ஆகும். இதற்கு தமிழக அரசு உரிய விளக்கத்தை அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (7)

ஸ்டெர்லைட் ஆலை நிரந்தரமாக அரசாங்கம் உறுதி செய்ய வே

அன்புமணி ராமதாஸ் வலியுறுத்து

(தூத்துக்குடி)

தூத்துக்குடியில் செயற் பட்டு வந்த ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடப்படுவதை தமிழக அரசு உறுதி செய்யவேண்டும் என அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.

பா.ம.க. இளைஞரணித் தலைவர் டாக்டர் அன்பு மணி ராமதாஸ் எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது,

தூத்துக்குடியில் செயற் பட்டு வந்த ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட தமிழக அரசு ஆணை யிட்டுள்ளது.

ஓர் ஆலையை மூடுவது எளிதானது அல்ல ஆலையை மூடி பிறப்பிக்கப்படும் அர சாணை என்பது விரிவான காரணங்களை பட்டியலிட்டி ருக்கவேண்டும். ஒரு பத்தி யில் அரசாணை பிறப்பிப்பது எந்த வகையிலும் பயனளிக் காது.

ஸ்டெர்லைட் ஆலை வழக்குத் தொடர்ந்தால் ஆலையை மூடுவதற் கான தமிழக அரசின் ஆணை ரத்து செய்யப்படலாம். எனவே ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடவடிக்கை எடுத்து அது நிரந்தரமாக மூடப்படுவதை தமி ழக அரசு உறுதி செய்ய வேண்டும்.

மலேசிய விமானத்தைத் தேடும் தற்காலிகமாகவே நிறுத்தப்ப

பிரதமர் மஹதிர் அறிவிப்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவின் MH370 விமானத்தினைத் தேடும் பணிகள் நிறுத்தி வைக்கப் படுகின்றது எனவும் தட யங்கள் ஏதாவது கிடைத் தால் மீண்டும் தேடுதல் பணிகள் தொடரும் எனவும் மலேசியப்பிரதமர் மஹதிர் மொஹமட் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத் தில் கலந்து கொண்ட பின் னர் நேற்று புதன்கிழமை ஊடகவியலாளர் களைச் சந்தித்த போதே அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2014 மார்ச் மாதம் காணாமல்போன MH370 விமானம் தொடர்பாக எந்த வொரு தடயமும் இதுவரை யில் கிடைக்காததையடுத்து அதனைத் தேடும் பணி யினை நிறைவுக்கு கொண்டு வருவதாக மலேசிய அர சாங்கம் நேற்று அறிவித் திருந்தது.

இந்நிலையில் இந்த முடிவுக்கு அதில் பயணம் செய்தவர்களுடைய உற வினர்கள் வருத்தம் தெரி வித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (7)

புத்தகத்தில் சர்ச்சை கருத்து

பாக். உளவுத்துறை முன்னாள் தலைவர் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு தடை

(இஸ்லாமாபாத்)

புத்தகத்தில் வெளியிட்ட சர்ச்சை கருத்துக்கு உளவுத் துறை முன்னாள் தலைவர் பாகிஸ்தானில் இருந்து வெளியேற ராணுவம் தடை விதித்துள்ளது.

பாகிஸ்தான் உளவுத் துறையான 'ஐ.எஸ்.ஐ' அமை ப்பின் முன்னாள் தலைவர் லெப்டினெட் ஜெனரல் ஆசாத் துரானி. இவர் 1990 முதல் 1992ஆம் ஆண்டுவரை இப் பதவி வகித்தார்

கடந்த வாரம் 'தி ஸ்பை கிரானிகல்ஸ்' என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. ஆசாத் துரானி இந்திய உளவு அமைப்பான 'ரா' வின் முன் னாள் தலைவருடன் இணை ந்து இப்புத்தகத்தை எழுதி யுள்ளார். இவர் இணை ஆசிரியராக இருக்கிறார். அப் புத்தகத்தில் ஆப்கானிஸ் தான் மற்றும் இந்தியாவில் ஏற்படும் பிரச்சினைகளில் பாகிஸ்தானின் பங்கு இரு ப்ப தாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

மேலும் ஐ.எஸ். பயங்கர வாத இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் மறை ந்து இருந்த இடம் பாகிஸ் தான் அதிகாரிகளுக்கு தெரி யும். பின்னர் அவர்கள் அமெ ரிக்காவிடம் அவரை ஒப்ப டைத்தனர் என்ற கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இது சர்ச்சையை ஏற்படு த்துவதாகவும், உளவுத் துறையின் கண்ணியத்தை பாழ்படுத்துவதாகவும் இரா ணுவ தலைமையகத்தில் இருந்து துரானிக்கு சம்மன் அனுப்பப்பட்டது. அவரது நட த்தை விதிமுறையில் இரு ந்து தவறியதாக குற்றம் சாட்டி அவர் பாகிஸ்தானில் இரு ந்து வெளியேற தடை விதித் துள்ளது. (7)

குழந்தைகள் உ தலைதுண்டித்துப்

பயங்கரவாதிகள்

(மபுடோ)

தெற்கு ஆபிரிக்க நாடான மொசாம் பிக்கில் உள்ள கிராமம் ஒன்றில் பொலிஸுக்கு துப்பு கொடுத்ததால் குழந்தைகள் உள்ளிட்ட 10 பேரின் தலையை துண்டித்து பயங்கரவாதி கள் கொடூரமாக கொன்றுள்ளனர்.

தெற்கு ஆபிரிக்க நாடான மொசாம்பிக்கில் உள்ள பால்மா என்ற கிராமத்தில் இந்த கொடூர சம்பவம் நடந்துள்ளது.

இந்த கிராமத்தை ஒட்டிய வனப் பகுதியில் அப் சபாப் பயங்கரவாத குழு இயங்கி வருகிறது. பயங்கரவாதி களின் நடமாட்டம் குறித்து பால்மா

வெளிநாடு

...மாக மூடுவதை ...ய வேண்டும்

...த்து

சுற்றுச்சூழலுக்கும், மக்கள் நல னுக்கும் தீங்கு என்பது ஸ்டெர்லைட் ஆலையுடன் முடிவடைந்து விடுவதல்ல.

தூத்துக்குடி சிப்காட் வளாகம், கடலூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட சிப்காட் வளாகங்களில் சுற்றுச் சூழலை மாசுபடுத்தி, மக்களின் உயிரை பறிக்கும் தொழிற்சாலைகள் ஏராள மாக உள்ளன.

அவற்றால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து உலக சுகாதார நிறுவனம், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்குழு, அறிவியல் மற்றும் சுற்றுச்சூழ லுக்கான மையம், தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய நிறுவனங்களை கொண்டு ஆய்வு நடத்தி, பாதிப்பை ஏற்படுத்தும் ஆலைகளை மூட தமிழக அரசு ஆணை யிடவேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (7)

...டும் பணிகள் ...ப்பட்டுள்ளது

...ள் உட்பட 10 பேர் ...த்துப் படுகொலை

...திகள் வெறிச்செயல்

கிராம தலைவர் பொலிஸாருக்கு துப்பு கொடுத்துவந்துள்ளார்.

இதனால், ஆத்திரமடைந்த பயங் கரவாதிகள் சில நாட்களுக்கு முன் னர் கிராமத்துக்குள் நுழைந்து கிராம தலைவர்,அவரது குடும்பத்தி னர் உள்ளிட்ட 10 பேரை தலையை துண்டித்து கொடூரமாக கொலை செய்துள்ளனர். கொல்லப்பட்டவர் களில் குழந்தைகளும் அடக்கம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாதிகளை பிடிக்க தனிப் படை அமைக்கப்பட்டுள்ளதாகவும் அம்மாகாண பொலிஸார் தெரிவித் துள்ளனர். (7)

போர்ட்டோ ரிகோ தீவில் தாக்கிய மரியா புயலுக்கு 4600 பேர் உயிரிழப்பு

ஆய்வில் தகவல்

(நியூயோர்க்)

போர்ட்டோ ரிகோ தீவில் கடந்த செப்டெம்பர் மாதம் மரியா புயல் தாக்கியதில் 4600க்கும் மேற்பட்டோர் இறந்திருப்பதாக ஹார்வர்டு பல்கலைக்கழக ஆய்வு முடிவு கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் சுயாட்சி அதிகாரம் பெற்ற போர்ட்டோ ரிகோ தீவை கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் மரியா புயல் தாக்கியது. 90 ஆண்டு களில் இல்லாத வகையில் மிகவும் வலுவான இந்த புயல் தீவை சின்னாபின்னமாக்கி யது. பலத்த காற்றுடன் கன மழையும் பெய்ததால் தீவு முழுவதிலும் வெள்ளக்காடா னது. மின்சாரம் முற்றிலும் துண்டிக்கப்பட்டது. வெள் ளம் சூழ்ந்ததால் வீதிகள் மூடப்பட்டன. பல்லாயிரக் கணக்கானோர் வீடுகளை இழந்து தவித்தனர். புயல் மற்றும் மழை வெள்ளத்தில் சிக்கி 64 பேர் இறந்ததாக அரசுத் தரப்பில் தெரிவிக் கப்பட்டிருந்தது. தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்றன.

இந்நிலையில், ஹார் வர்டு பல்கலைக்கழக ஆய் வாளர்கள் மேற்கொண்ட ஆய்வு முடிவுகள் அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந் துள்ளன. புயல் மழையால் இறந்ததாக அரசுத் தரப்பில் கூறிய எண்ணிக்கையை விட 70 மடங்கு அதிகமாக, அதாவது 4600க்கும் மேற் பட்ட நபர்கள் இறந்திருப் பதாக தெரியவந்துள்ளது.

இவர்களில் மூன்றில் ஒரு பகுதி நபர்கள், மின் சாரம் துண்டிக்கப்பட்ட தாலும், வீதிகள் துண்டிக் கப்பட்டதாலும் போதிய மருத்துவ உதவி கிடைக் காமல் இறந்திருப்பதாக ஆய் வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்பு அறிவித்ததைவிட உயிரிழப்பு அதிகமாக இருக் கும் என்று எதிர்பார்த்ததாக போர்ட்டோ ரிகோ அரசு கூறியுள்ளது. ஹார்வர்டு பல்கலைக்கழக சர்வேயை வரவேற்பதாக மத்திய விவ காரங்களுக்கான அமைச்சர் கார்லஸ் கூறியுள்ளார்.

புயல் பாதிப்பு முற்றும் உயிரிழப்புகள் தொடர்பாக ஆய்வு செய்ய ஜார்ஜ் வோஷிங் டன் பல்கலைக்கழக குழு வையும் நியமித்திருக்கி றோம். அந்தக் குழுவின் ஆய்வு முடிவு விரைவில் வெளியிடப்படும். எதிர்காலத் தில் இயற்கை பேரிடர்களை இன்னும் சிறப்பாக எதிர் கொண்டு உயிரிழப்பை தடுக்கும் வகையில் பணி களை மேற்கொள்வதற்கு இந்த இரண்டு ஆய்வுகளும் உதவியாக இருக்கும்' என் றும் கார்லஸ் கூறினார். (7)

இருதரப்பு உடன்பாட்டிற்கு எதிராக அமெரிக்கா அறிக்கை வெளியீடு

சீனவர்த்தக அமைச்சு குற்றச்சாட்டு



(பீஜிங்)

அமெரிக்காவினால் வெளி யிடப்பட்டுள்ள அறிக்கை யானாது, வோஷிங்டனில் அண்மையில் மிகவும் ஆக்க பூர்வமான முறையில் நடை பெற்ற இருதரப்பு பேச்சு வார்த்தைகளுக்கு மாறாகக் காணப்படுவதாக சீன வர்த் தக அமைச்சு அறிவித்துள் ளது.

50 பில்லியன் அமெ ரிக்க டொலர் பெறுமதியான சீனப் பொருட்களுக்கு 25 வீதம்வரிக்கட்டணமாகசெலுத் தப்பட வேண்டும் என அமெ ரிக்க வெள்ளைமாளிகை நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை அறிக்கை வெளியிட்டது.

வெள்ளை மாளிகை யின் இந்த அறிக்கையா னது, எதிர்பார்ப்புமிக்க தரு ணத்தில் வெளியான, எதிர் பாராத தந்திரோபாய அறிக் கையாகும் என சீன வர்த் தக அமைச்சு விமர்சித் துள்ளது.

மேலும், அமெரிக்கா எத் தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் சீன மக்களையும், நாட்டையும் பாதுகாப்பதற்கான நம்பிக் கையும், திறமையும், அனு பவமும் தமக்கு உள்ளது என்றும் சீனா அறிவித் துள்ளது.

இதேவேளை, இரு நாடு களுக்கும் இடையே அண் மையில் எட்டப்பட்ட இணக் கப்பாட்டிற்கு ஏற்ப செயற்ப டுமாறு அமெரிக்காவை சீனா வலியுறுத்தியுள்ளது.

கடந்த சில மாதங்களாக உலகின் மிகப்பெரிய வல்ல ரசு நாடுகளான அமெரிக்கா வும் சீனாவும் மாறி மாறி வரி விதிப்புகளை மேற் கொண்டு வந்த நிலையில் இரண்டு நாடுகளுக்கும் இடையே வர்த்தகப் போர் நிலவிவந்தது.

ஆனால், அண்மையில் வோஷிங்டனில் நடை பெற்ற வர்த்தக பேச்சு வார்த் தை உலகின் மிகப் பெரிய பொருளாதார நாடு ளுக்கு இடையில் நிலவிய வர்த்தக அழுத்தங்களை எளிதாக் கியதுடன், வர்த்தக போரை தடுக்க உதவும் வகையிலான உடன்படிக்கையொன்றும் எட்டப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (7)

சீன ஆழ்கடலில் புதிய உயிரினங்கள்

விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(பீஜிங்)

கடந்த இரண்டு வருடங் களில் சீன விஞ்ஞானி களால், ஆழ்கடல் ஆராய்ச்சி களின் போது 30 இற்கும் மேற்பட்ட புதிய வகை உயி ரினங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இந்தத் தகவலை சீனா வின் பெருங்கட்டல் கனிம வளங்கள் ஆராய்ச்சி மற் றும் மேம்பாட்டு சங்க பிர தானி தெரிவித்துள்ளார்.

நேற்றும் இன்றும் கிழக்கு சீனாவின் ஷன் டொங் மாகா ணத்தின் ஷிங்டோ நகரில் சர் வதேச கடற்படை அதிகார சபையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற சர்வதேச மாநாடு ஒன்றில், இந்த ஆராய்ச்சிகள் குறித்தான காணொளிகளை சீன பெருங்கடல் கனிம வளங்கள் ஆராய்ச்சி மற் றும் மேம்பாட்டு சங்கத்தினர் வெளியிட்டுள்ளனர். குறித்த காணொளி ஒன்றில், சிவப்பு நிறத்திலான ஒரு மீன் கூட் டம் ஆழமான கடல் பரப்பில் நகர்வது படமாக்கப்பட் டுள்ளது.

அதேபோல்நீண்டவாலைக் கொண்ட மீன் இனம் ஒன் றும் காணப்படுகிறது.

இது பொதுவாக குறித்த கடல் பரப்பில் 5 ஆயிரம் அடி ஆழத்தில் காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. அதே போல, கழுத்து வெட்டி மீனி னமும், ஈர்க்கும் கண்க ளைக் கொண்ட எலி மீனி னமும் கமெராக்களின் முன் னால் தோன்றியுள்ளன.

அண்மைய வருடங் களில் வளர்ந்துள்ள தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி ஆழ்கடலில் இவ்வாறான பல உயிரினங்களை கண்ட றிந்துள்ளதாக சீனாவின் பெருங்கடல் கனிம வளங் கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சங்க பிரதானி வாங் ஷங்ஷெங் தெரிவித் துள்ளார்.

ஆழ்கடலில் உள்ள புதிய உயிரினங்கள், அவை எவ் வாறு ஏனைய இடங்களுக் கும் பரவுகின்றன என்பது தொடர்பிலான ஆராய்ச்சி களிலும், அவற்றை பாது காப்பதிலும் நாங்கள் கவ னம் செலுத்துகின்றோம் என அவர் மேலும் குறிப் பிட்டார். (7)

அலோசியஸிடம் பணம் பெற்ற எம்.பிக்கள் பற்றிய விபரங்களை மூடிமறைக்க வேண்டிய அவசியமில்லை

ஜனாதிபதியின் செயலர் ஒஸ்டின் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய பேர்பெச்சுவல் ட்ரஸரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியசிடம் பணம் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படும் 118 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பற்றிய விபரங்களை மூடி மறைக்க வேண்டிய அவசியமில்லை என ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடக மொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

அர்ஜுன் அலோஸியசிடம் பணம் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலை மறைத்து வைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தப் பட்டியலை நான் மறைத்து வைத்திருப்பதாக முன்னாள் அமைச்சர் தயா சிறி ஜெயசேகர குற்றம் சுமத்தியதனை ஊடகங்களில் பார்த்தேன். இது குறித்து தயா சிறி ஜெயசேகரவிடம் நான் வினவினேன்.

இவ்வாறான ஓர் பட்டியல் ஜனாதிபதி செயலகத்தில் இருப்பதாகக் கூறும் வகையில் தாம் கருத்து வெளியிட்டதாக தயாசிறி பதிலளித்தார்.

இவ்வாறான ஓர் பட்டியல் பற்றி எனக்குத் தெரியாது. ஜனாதிபதி செயலகத்திலிருந்து விலகிச் சென்றவர்களும் இருக்கின்றார்கள்.

இந்தப் பட்டியல் ஒலிப் பதிவு செய்யப்பட்ட ஓர் உரையாடலில் இருக்கக் கூடும். இந்த விடயம் பற்றிய உண்மைகளைகண்டறியவேண்டும்

உண்மைகளைக் கண்டறிந்ததன் பின்னர் அது குறித்து ஊடகங்களின் மூலம் தெளிவூட்டப்படும் என ஒஸ்டின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (இ-7)

மாணவனையும் மாணவியையும் அறையில் அடைத்து தண்டனை

ஆசிரியருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

கொழும்பு பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவன் ஒருவரையும், மாணவி ஒருவரையும் தனியாக ஓர் அறையில் அடைத்து தண்டனை விதித்த ஆசிரியர் ஒருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தண்டனை விதிப்பதாகக் கூறி மாணவனையும், மாணவியையும் ஓர் அறையில் ஒரு மணித்தியாலம் வரையில் தனியாக குறித்த ஆசிரியர் அடைத்து வைத்துள்ளார்.

இந்த வித்தியாசமான தண்டனையை விதித்த ஆசிரியர் தொடர்பில் எவ்வித விசாரணையும் நடத்தாது இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் இணைந்து குறித்த பாடசாலையின் அதிபர் ஆசிரியரை இடமாற்றம் செய்துள்ளார்.

ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டமை குறித்து தொழிற்சங்கங்களுக்கு அறிவிக்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கொழும்பு பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் மாணவனுக்கும், மாணவிக்கும் வழங்கிய வித்தியாசமான தண்டனை குறித்து உரிய முறையில் விசாரணை நடத்தாது இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை ஏற்புடையதல்ல எனவும் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் ஸ்டாலின் கோரியுள்ளார். (இ-7)

ஆட்ட நிர்ணய சதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை

மோசடி தவிர்ப்புச் சட்டத்தில் விரைவில் திருத்தம்

(கொழும்பு)

கிரிக்கெட் ஆட்ட நிர்ணய சதிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் வகையில் சட்டதிருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபடுவதை பாரிய குற்றச் செயலாக வகைப்படுத்தி கடுமையான தண்டனை விதிக்கப்படக் கூடிய வகையில் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு சட்டத்தில் திருத்தம் செய்யப்படும் என இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சரத் ஜயமான்ன கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

மேலும், ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

தற்பொழுது ஸ்ரீலங்கா கிரிக்கெட் ஓர் தனியார் நிறுவனமாகவே கருதப்படுகின்றது.

கிரிக்கெட் வீரர்கள் அரசாங்க ஊழியர்களாக கருதப்படுவதில்லை. இதனால் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் சட்டங்கள் நிறுவனத்திற்கோ அல்லது வீரர்களுக்கோ அமுல்படுத்தப்படவில்லை.

கிரிக்கெட் மட்டுமன்றி ஏனைய விளையாட்டுக்களிலும் இடம்பெறும் ஆட்ட நிர்ணய சதிகள் மற்றும் சூதாட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் சட்ட திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

ஜக்கிய நாடுகள் அமைப்பின் ஊழலுக்கு எதிரான மாநாடொன்று நாளை மறுதினம் 2 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை ஒஸ்ட்ரியாவில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டின் போது ஆட்ட நிர்ணய சதிகளை பாரிய குற்றச் செயல்களாக கருதி சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து கலந்துரையாடப்படும் என சரத் ஜயமான்ன தெரிவித்துள்ளார். (இ-7)

முஸ்லிம்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த நடவடிக்கை

பசில் ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டிலுள்ள முஸ்லிம் மக்களின் அனைத்து உரிமைகள் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமைத்துவத்தின் கீழ் முஸ்லிம் மக்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்படும் என்பதுடன், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

இன்று ஒரு தகவல்

சுய கருத்தின் அவசியம்!

நான் சொல்வதைத்தான் எல்லோரும் கேட்டாக வேண்டும் என்று நாட்டாமை செய்கிற பிரிவினர் ஒருவகை என்றால் சிலர் "நீங்கள் பார்த்து என்ன முடிவு செய்தாலும் சரி" என்று சுத்தமாகச் சரணாகதி அறிக்கையைச் சமர்ப்பித்து விடுகிறார்கள்.

பெரியவர்களுக்கு மரியாதை கொடுப்பது, கணவன் சொன்னால் மறு பேச்சுஇ இல்ல. நமக்கு மேலே உள்ளவர்களிடம் நாம் வாய் திறக்கக் கூடாது என்றெல்லாம் நம் மனதில் காலம் காலமாக ஊறிப் போன சம்பிரதாயங்களும் பண்பாட்டு அடிப்படையில் நாம் வளர்க்கப்பட்ட விதமும் நமக்கென்று எந்த சுய கருத்தும் இல்லாதபடி செய்து விடுகின்றன. நாம் மரியாதையையும் சுயகருத்தையும் குழப்பிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அப்பா கேட்கிறார். ''உனக்கு இந்த இடம் பிடிச்சிருக்காம்மா?" மகள், "உங்களுக்குப் பிடிச்சிருந்தா சரிப்பா!'' கல்யாணத்துக்குப் பிறகு கணவனுடன் லடாய் என்று வைத்துக் கொள் வோம்.

மகள் ;'' அப்பா ! என்னைப் பாழுங் கிணற்றிலே தள்ளிட்டீங்கப்பா"

அப்பா ; " நான்தான் உன்னைக் கேட்டேனேம்மா. நான் வற்புறுத்தியா செஞ்சு வைச்சேன்?" காட்சி கட். நடந்த தவறுக்கு யார் பொறுப்பு?

ஒரு மனிதனுக்குத் தன்மீது இருக்கும் அக்கறை மற்றவர்களுக்கு இருக்க முடியாது. இந்த விதத்தில் பார்க்கும் போது சுயநல உணர்வு என்பது தவறல்ல. சுயநலமின்றி எடுக்கப்படும் முடிவுகள் ஒருவனைப் படுபாதாளத்தில் கொண்டு போய்த் தள்ளிவிடும். எனவே நம் கருத்தையும் நம்மைப் பற்றி மற்றவர்கள் எடுக்கும் முடிவில் கலக்கத் தான் வேண்டும்.

அப்பா கேட்ட கேள்விக்கு பிடிச் சிருக்குப்பா, ஆனா நல்லா விசாரிக்கச் செய்யுங்கப்பா என்று சொல்லியிருந்தால் அப்பா மறுக்கவா போகிறார்? எனவே தான் சொன்னேன் மரியாதை என்பது வேறு, சுயகருத்தை வெளிப்படுத்துவது என்பது வேறு என்று.

தன் வருங்காலம் பற்றி +2 மாணவனுக்குச் சுயமான கருத்து இல்லாத போது அப்பா தமிழ்ப் பற்றின் காரணமாக "பி.ஏ. தமிழ் எடுத்துப்படி" என்பார். படிக்கலாம் தான். ஆனால் வேலை?

கடைக்குப் போகிறோம். தெளிவற்று நாம் போனால் கண்டதையும் தலையில் கட்டிவிடுவார்கள் வெற்றிகரமான விற்பனையாளர்கள். ஆனால் இன்னது தான் தேவை, இதுதான் நம் பட்ஜெட் என்று நாம் தெளிவாக இருந்தால் எவராவது நம்மை அசைக்க முடியுமா?

சுயகருத்து என்பது நம் அடிப்படை உரிமை. இது நமது தெளிவான சிந்தனையும் நமது தீர்க்கதரிசனத்தையும் முடிவெடுக்கும் ஆற்றலையும் இந்த உலகை நாம் புரிந்து வைத்திருக்கும் விதத்தையும் அளந்து விடக் கூடிய நல்ல அளவுகோல்.

இதை விடுத்து சும்மா பூம்பூம் மாடு மாதிரித் தலையாட்டிக் கொண்டு எத்தனை காலம் தான் நிழல் வாழ்க்கை வாழ்வது?

லேனா தமிழ்வாணன்

ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய சவாலில்லை

அமைச்சர் மத்தும பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்து இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ வேட்பாளராக முன்னிறுத்தப்படுவது சவாலுக்குரிய விடயம் அல்ல என அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபோன்ற கருத்துக்கள் இதற்கு முன்னரும் தெரிவிக்கப்பட்டுள்ளன. எனினும் தேர்தல் வரும்போது யாரை நியமிக்க வேண்டும்என்பதை மக்கள் தீர்மானிப்பர் என அமைச்சர் இதன்போது தெரிவித்தார். இதேவேளை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவரே முன்னிறுத்தப்படுவார்எனவும்அவர்இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

காட்சிப்படுத்தப்படும் முன்னாள் ஜனாதிபதிகளின் வாகனங்கள்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகள் உள்ளிட்ட பிரபுக்கள் பயன்படுத்திய குண்டு துளைக்காத வாகனங்கள் கொழும்பு ஹூனுப்பிட்டிய கங்காராம விகாரையில் கண்காட்சிக்காக வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.8 வாகனங்கள் இவ்வாறு கண்காட்சிக்கு வைக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்தியதாக கூறப்படும் குண்டு துளைக்காத 8 வாகனங்கள் கடலில் மூழ்கடிக்கப்பட்டன.

இந்த அதிசொகுசு வாகனங்கள் திருத்தங்களுக்கு உட்படுத்தி பயன்படுத்த முடியாதமையினாலும், விற்பனை செய்ய முடியாமையினாலுமே கடலில் மூழ்கடிக்கப்பட்டதாக ஜனாதிபதிசெயலகம்ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

புதையல் தேடிய பெண் உட்பட மூவர் கைது

(கொழும்பு)

அரலகங்வில ஜயமுதுகம பகுதியில் தொல்பொருட்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் புதையல் அகழ்வில் ஈடுபட்டிருந்த பெண்ணொருவர் உட்பட மூவரை பொலிஸார் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து புதையல் அகழ்விற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மற்றும்பூஜை பொருட்களும்பொலிஸாரால்மீட்கப்பட்டுள்ளன. (இ-7)

தனஞ்ஜயவின் தந்தை கொலை

குடு அஞ்சுவுக்கு நெருக்கமானோரிடம் பொலிஸார் தீவிர விசாரணை

(கொழும்பு)

தெஹிவளை - கல்கிஸை மாநகர சபையின் உறுப்பினர் கே.ரஞ்சித் டி சில்வா படு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள்முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, வெளிநாட்டில் வசிக்கும்சிங்ஹரஅமல்சில்வா என்றுஅழைப்படும்"குடுஅஞ்சு" என்பவருக்கு நெருக்கமான சிலரிடம் கல்கிஸை பொலிஸார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இது குறித்து பொலிஸ்உயர் அதிகாரி ஒருவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையில், "குடு அஞ்சு, அவருக்கு நெருக்கமானவர்களின் உதவியுடன் ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

எனினும், இந்தக் கொலை சம்பவத்தின் பின்னால் உள்ள நோக்கத்தை பொலிஸார் இது வரையிலும் உறுதி செய்ய வில்லை.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் இருந்து சி.சி.ரி.வி. காணொளிகளை பொலிஸார் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், கொலைக்கு பயன்படுத்திய வாகனத்தையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரையில் யாரும் கைது செய்யப்படவில்லை" என அவர்மேலும்குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பிரபல கிரிக்கெட் வீரர் தனஞ்ஜய டி சில்வாவின் தந்தையான கே. ரஞ்சன் சில்வா கடந்த வாரம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

சாவகச்சேரி மாட்டிறைச்சிக்கடை டிசெம்பர் வரை நிலைத்திருக்கும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் மாட்டிறைச்சிக்கடையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை நிலைத்திருக்க சபையில் தீர்மானிக்கப்பட்டது. சாவகச்சேரி நகரசபையில் கொல்களம் மற்றும் மாட்டிறைச்சிக்கடையால் அண்மைக்காலமாக பல குழப்பங்கள் நிலவி வந்தன. இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட அமர்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் சிலரின் கடும் எதிர்ப்பையும் மீறி எதிர்வரும் டிசெம்பர் மாதம் மாட்டிறைச்சிக்கடை ஒப்பந்தம் நிறைவடையும் வரை மாட்டிறைச்சிக்கடை இயங்க அனுமதிப்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தீர்மானம் நிறைவேற்றும் போது ஒரு நாளைக்கு 100 கிலோவிற்கு உள்ளடங்கலாகவே மாட்டினை இறைச்சியாக்க வேண்டும். அதற்காக ஒன்று அல்லது இரண்டு மாடுகள் மாத்திரமே ஒரு நாளைக்கு வெட்டப்பட வேண்டும்.

அத்துடன் தற்போது சாவகச்சேரி பிரதேச சபைக்கும் நகரசபையில் இருந்தே மாட்டிறைச்சி கொண்டு செல்லப்படுகிறது.அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதும் உறுப்பினர்கள் சுகாதார பரிசோதகரிடம் தெரிவித்தனர்.

தீர்மானத்தை மீறி தொடர்ந்தும் மாட்டிறைச்சிக் கடை உரிமம் பெற்றோர் செயற்படும் பட்சத்தில் சீல் வைத்து மூட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

இலங்கையின் வெளிநாட்டுக் கையிருப்பு 11 பில்லியன் அமெரிக்க டொலராக உயரும்

மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வெளி நாட்டு கையிருப்பு 11 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர் வடையும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மற்றும் கையிருப்புக்கள் தொடர்பாக அண்மையில் மாறுபட்ட தகவல்கள் வெளியாகியிருந்தன. இது தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

இலங்கையின் வெளி நாட்டுக் கையிருப்பானதுதற்போது 9.1 பில்லியன் அமெரிக்க டொலராக உள்ளது. எனினும் எதிர்வரும் ஜூன் நடுப்பகுதி அளவில் அது 11 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்வடையும் என அவர் தெரிவித்தார். கடந்த 2014ஆம் ஆண்டு இலங்கையின் வெளி நாட்டு கையிருப்பு 8.2 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்ததாகவும் அரசாங்கத்தின் கொள்கைரீதியான செயற்பாடுகளால் அது இந்தளவு முன்னேற்றத்தை காட்டுவதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார். 2019 ஆம் ஆண்டுக்கானசர்வதேசநாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்க தீர்மானித்துள்ள கடன் தொகையின் அடுத்த பகுதி எதிர்வரும் ஜூன் மாதம் முற்பகுதியில் கிடைக்கவுள்ளதாகவும் இதற்கிணங்க அத்தொகையிட்டுள்ள வேலை நிறுத்தப் போராட்டம் கோரிக்கைகளில்,



12 வருடங்களாக நிகழும் அஞ்சல் சேவைப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு வழங்கு, 5 வருடங்கள் கடந்த 2ஆம் வகுப்பு நியமனங்களை உடனடியாக உறுதி செய், கணனி தொழில்நுட்பக் கோளாறுகளைச் சீர் செய், ஜனவரி 10ஆம் திகதி வாக்குறுதியளித்த அமைச்சரவை பத்திரிகைக்கு அனுமதி வழங்கி தீர்வைபெற்றுக் கொடு, 2012 பொறுப்புப் பரீட்சையை நடைமுறைப்படுத்து, பொறுப்புக் கொடுப்பனவை உடனடியாக வழங்கு, விரிவுரையாளர் சம்பளத்தை புதிய சம்பளத்துக்கு மாற்றிக் கொடு, பொறுப்புப் பரீட்சையில் சித்தியடைந்த முதலாம்வகுப்புஉத்தியோகத்தர்களுக்குத்தகுதிகாண் பரீட்சை என்.7 வேதனத்தை மட்டத்தை பெற்றுக் கொடு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

அஞ்சல், தொலைத்தொடர்பு ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

அஞ்சல் மற்றும்தொலைத் தொடர்பு ஊழியர்கள் இரு நாட்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

ஜூன் மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தொடக்கம் இரு நாட்கள்நாடு தழுவிய ரீதியில் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கம் அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

ஏழு கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப்போராட்டம் இடம்பெறவுள்ளதாகவும் அச்சங்கம் அறிவித்துள்ளது. சங்கத் தலைவர் ஒருவரை மேற்கோள்காட்டி ஊடகம் ஒன்று இதனை தெரிவித்துள்ளது.

கோரா மரணம்

(ஹற்றன்)

ஹற்றன் பொலிஸ் வலயத்தின் மோப்பநாய் பிரிவில் கடந்த மூன்று வருடங்களாக சேவையாற்றி வந்த "கோரா" என்றழைக்கப்படும் மோப்ப நாய், நேற்று முன்தினம் உயிரிழந்ததாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

எட்டு வயது கோரா கடந்த மூன்று வருடங்களாக ஹற்றன் பொலிஸ் வலயத்தில் சேவை புரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.சிவனொளிபாதமலை பருவகாலத்தில் போதைப் பொருட்களுடன் மனைக்குச் செல்வோரை இனங்கண்டு, அவர்களைக் கைது செய்வதற்கு, கோரா பலவகையிலும்உதவியுள்ளது.

மத்திய மாகாணத்தில் பொலிஸ் மோப்பநாய்களுக்கு பயிற்சி வழங்கும் தலைமை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்ற போதே கோரா உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு, அம்பாறை, பேலியகொட, பண்டாரவளை ஆகிய பிரதேசங்களிலும் கோரா பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

சிகரெட்டைப் புகைத்து சம்பாதித்தது மரணம் ஒன்றைத் தான்

இன்று சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினம்

"நோயற்ற வாழ்வே உலகின் நிறைந்த சுகம்" என்பது புத்த பகவானின் முதுமொழியாகும். இன்று "மே 31" சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்புத்தினமாகும். இத் தினத்தை முன்னிட்டு எமது வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் மக்கள் முன் சில அறிவுறுத்தல்களை முன்வைக்கக்கடமைப்பட்டுள்ளது. இந்த சுகத்தை அனுபவிக்க வேண்டுமாயின் மக்களாகிய நாம் நாட்டில் நற்பிரஜைகளாக வாழ்வதற்குச் சில நற்பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அந்த வகையில் நாம் ஒவ்வொருவரும் போதை வஸ்துக்களையும் புகைத்தலையும் கைவிட்டு, நல்லொழுக்கமுடையோராக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். நல்லொழுக்கம் என்பது கடையில் வாங்கும் பொருளல்ல. மாறாக, அது சிறுவர் தொடக்கம் முதியோர் வரை கடைப் பிடிக்க வேண்டிய ஒன்றாகும்.

ஒரு மனிதன் நல்லொழுக்கத்தை கடைப்பிடித்து வருவானாயின் கண்டிப்பாக தீயபழக்கங்களான போதை தரும் போதை வஸ்துக்களையும் புகைத் தலையும் நாட மாட்டான். நமது நாடு ஒரு சிறிய நாடு. இலங்கை வரலாற்றிலே முதன் முதல் சிகரெட் பாவனையை அறிமுகப் படுத்தியவர்கள் போர்த்துக்கேயர்களே. அன்று அவர்கள் மக்களுக்கு இலவசமாகக் கொடுத்த சிகரெட் இன்று விலை ரூ 55/- இற்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றமையை காணக்கூடியதாகவுள்ளது. அந்த வகையில் வருடம்ஒன்றிற்கு சிகரெட் புகைப்பதற்கு 330 மில்லியன் ரூபாவிற்கு மேல் இலங்கை வாழ் மக்களால் செலவிடப்படுகின்றது. இதன் இலாபத்தின் பெரும் பகுதி வெளிநாடுகளுக்கு வழங்கப்படுகின்றது. ஆனால், இப் பாவனையால் பாதிக்கப்படும் மக்களுக்கு அரசாங்கம் பல மில்லியன் ரூபாவிற்கு மேல் செலவு செய்கின்றது. இதனால் அரசாங்கத்திற்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்படுகின்றது.

இலங்கையில் மாத்திரம் சிகரெட் பாவனையால்வருடா வருடம்கிட்டத்தட்ட 26,000 பேருக்குமேல்மரணிக்கின்றார்கள். இரண்டாம் நிலைப் புகைத்தலினால் குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை பாதிக்கப்படுகின்றார்கள். அத்துடன், கர்ப்பவதியாக இருக்கும் தாய்மார்கள் இரண்டாம் நிலை புகைத்தலை சுவாசிப்பதனால் வயிற்றில் இருக்கும் சிசுவுக்கும் இதன் பாதிப்பு ஏற்படுகின்றது. அத்துடன், வீடுகளிலும் வேலைசெய்யும் இடங்களிலும் மற்றும் உணவு விடுதிகளிலும் இரண்டாம்நிலை புகைத்தலுக்கு ஆளாகின்றனர். மேலும், சிகரெட் புகைக்கும் நான்கில் ஒருவருக்கு டாலியாபலவீனம் ஏற்படுவதுடன், குறுகிய காலப்பாதிப்புக்களும்ஏற்படுகின்றன. இன்று புகைப்பவர்களில் 20% மானவர்கள் 15-20 இற்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்களே ஆவர். அந்த வகையில் சமூகத்தில் சிகரெட் பாவனையை குறைக்க வேண்டியது காலத்தின் கட்டாயதேவை.

சிகரெட் பிடித்தால் உடல் நலத்திற்கு கேடு என்பது தெரிந்தவிடயம்தான். ஆனால், புகைப்பவர் அருகில் இருப்பவரின் கண் பார்வைக்கும் கேடு விளைவிக்கும். முகத்துக்கு நேராக புகைப்பது கேடு விளைவிக்கும் என்று பலரும் அறிந்தாலும் உங்கள் நண்பரோ, குடும்பத்தினரோ அருகில் இருந்து புகையை சுவாசித்தால் விழித்திரையின் மையப்பகுதி பாதிக்கப்படும். மேலும் உங்களுடைய படிக்கும் திறன் பாதிப்பதோடு பார்வை சம்பந்தமான குறைபாடுகளும் ஏற்படும். ஆகவே, நீங்கள் புகைப்பிடிக்காவிட்டாலும் உங்கள் அருகிலிருப்பவர் புகைத்தால் தீமை இருவரது கண்களுக்கும் தான். மேலும் புகைப்பிடிப்பவர்களுக்கு பக்கத்தில் சிறுவர்கள் இருந்தால் சிறுவர்களின் மூளை வளர்ச்சி குன்றும். எனவே, நீங்கள் சற்று தள்ளியே நில்லுங்கள். புகைப் பிடிப்பவரிடம் புகைப்பிடிப்பதை நிறுத்துங்கள் நிறைய நன்மை கிடைக்கும் என்று மருத்துவ உலகம் அவ்வப்போது கூறி வருகின்றது. இருந்த போதிலும் புகைப்பிடிப் போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடுகிறதேதவிர, குறையவில்லை. இந்நிலையில் சிகரெட் பிடிப்பதை நிறுத் தினால் சத்திரசிகிச்சைக்கு பிறகு வரும் புண் விரைவில் குணமாகும் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது. புகைப்பிடிப்பவருக்கு புண் குணமாக நாட்செல்லும். மேலும்புகைப்பிடிப்பதை தவிர்த்தால் கீழ் கண்ட ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று மருத்துவ உலகம் கூறுகின்றது. மாரடைப்பு ஏற்படும் அபாயம் குறைதல், இரத்தத்தில் கொலஸ்ரோல்குறைதல், நுரையீரல்பாதிப்பு குறைதல், இருமல் கட்டுக்குள் வருதல், நுரையீரல் புற்று நோய்க்கான வாய்ப்புக்கள் குறைதல், இரத்தத்தில் புற்று நோய்க்கான வாய்ப்பு குறை தல், இரத்தத்தில் கார்பன்மோனைக்சைடு நீங்குதல், உணவின் சுவையினை அறி தல், வெறுக்கத்தக்க நாற்றத்தைப் போக்கி நாற்றமில்லாத சுவாசம் நிலைநாட்டல், வெண்மை அடையும் பற்கள், வயிற்றுக்குடற்புண் நீங்குதல் போன்ற பல்வேறு நன்மைகளை புகைப்பிடித்தலை நிறுத்துவதன் மூலம் கிடைக்கப் பெற முடிகின்றது. இலங்கையில் 2020 ஆம் ஆண்டு புகையிலை உற்பத்திக்கு முற்றாக தடை விதிக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் குறிக்கோளை நனவாக்க அனைவரும் முன்வந்துபுகைத் தல் அற்ற ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்று இந்நாளில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் கேட்டுக் கொள்கின்றது.

செ.குமாரசிங்கம்(ஜே.பி)
செயலாளர், வடபிரதேச
நல்லொழுக்க சம்மேளனம்,
சங்கானை.

உயிரைப் பறிக்கும் நுண்கடன் திட்டத்திலிருந்து விடுபடுங்கள்

சாணக்கியன் மக்களிடம் மன்றாட்டம்

(ஏறாவூர்)

உயிரைப் பறிக்கும் நுண்கடன் திட்டத்தில் இருந்து விடுபடுமாறு இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தலைவர் இரா.சாணக்கியன் மக்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஏறாவூரில் இடம்பெற்ற விழிப்புணர்வு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"தற்போது வடக்கு-கிழக்கில் பல நுண்கடன் நிதி நிறுவனங்களின் உள்நுழைவு அதிகமாக்கப்படுகின்றது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீட்சி பெற்று வருகின்ற இந்த வேளையில் இவ்வாறான நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகள் மக்களின் வாழ்வாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

இம்முறையில் அதிகளவு பெண்களே ஈர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் சுயதொழில் என்ற யெரில் கடனைப் பெற்று அநாவசியமாகச் செலவழித்து விட்டு அக்கடனை நிவர்த்தி செய்ய மேலும் பல கடன்களைத்தொடர்ச்சியாக பெற்று வருகின்றமையினால் இறுதியில் அனைத்தும்இணைந்து கழுத்தை நெருக்கும் அளவுக்கு மரணத்தின் வழிக்கு அனைவரையும் இட்டுச் செல்கின்றது.

ஆகவே இவ்வாறான கடனைப் பெற்றால் அவற்றை பிரயோசனமான முறையில் பயன்படுத்தி அதில் இருந்து அபிவிருத்தி அடைய வேண்டும். இல்லாவிடின் அதனைப் பெறாமல் வேறு வழியில் சுயதொழிலை பெற்று வாழ்வாதாரத்தை அதிகரிக்க வேண்டும்.

இதில் கிராம மட்ட அமைப்புக்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். அந்த அமைப்புக்களின் சேமிப்பில் மலிலட்சம்ரூபாய் உள்ளது. இவர்கள் மக்களுக்கு வட்டியில்லாக்கடன் அல்லது மிகவும் குறைந்தவிலான வட்டி வீதத்தில் கடனை கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும். இன்று இந்த நுண்கடன் திட்டத்தால் பலதற்கொலைச் சம்பவங்கள்பதிவாகியுள்ளமையை அனைவரும் அறிவோம். எனவே இந்த நுண்கடன் திட்டத்தில் இருந்து விடுபடுங்கள் எனக் கோரிக்கை விடுத்தார். (இ-7)

எண் 1 (சூரியன்)
(ஆளும் வேந்தர்கள்)

பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்



விநாயகராமன்

மூளை பலம் மிக்க இவர்கள் செய்தொழிலில் விரைவில் உயர்ந்த நிலைக்கு வந்துவிடுவார்கள்.

நல்ல நட்புடன் கூடிய பெண்களால் பல நன்மைகளை அடைவார்கள். அரசியலில் புதிய சட்டங்களை இயற்றுவார்கள். புதிய கொள்கைகளை மக்களிடம் பரப்பும் புரட்சியாளர்கள். புதிய பரிமாணத்தில், புதிய திட்டங்களை மற்றவர்களுக்கு புரியும்படி எடுத்துச்சொல்லி எளிதில் வெற்றியும் பெறுவார்கள்.

சொன்னதைச் செயலாக்கும் வெற்றி வீரர்கள். விஞ்ஞானத்தில் மனம் அதிக நாட்டமுடன் செயற்படும். மற்றவர்களின் புகழ்ச்சிக்கோ பாராட்டுதலுக்கோ கடுகளவும் மயங்க மாட்டார்கள். உத்தம குணத்துடன், உயர்வான சிந்தனையுடன் கல்வி, கேள்வி, ஞானத்தில் சிறந்து விளங்கி, நாலும் தெரிந்த நபர்கள் என்று பெயரெடுப்பார்கள். இவர்கள் ஆதாயம் பார்க்காமல் அரசியல் வானில் மின்னுவார்கள். இவர்களின் உடலில் உள்ள ஜீவகாந்த சக்தியானது சூரிய தியானத்தின் மூலம் வலுப்பெறக்கூடியது. சிறந்த மேதைகளாக, அரசியல்வாதியாக, நாடாளும்மன்னராக முடிசூடி அரசாட்சி செய்யும் அரசர்களாக இராஜகம்பீரத்துடன் வாழ்க்கை நடத்துவார்கள்.

சூரிய ஆதிக்கத்தின் பலம் குறைந்தவர்கள் வீண் வம்பு பேசித்திரிவார்கள். தன்னுடைய திறமைகளை வீணடித்து, அடிமைத்தனமான வாழ்க்கை வாழ்வார்கள். பிறர் தம்மைப் புகழ்வதைப் பெரிதும் விரும்புவார்கள். தற் பெருமை பேசுந்தன்மை அதிகமிருக்கும். ஆடம்பரமாக வாழ்வதையே அழகு என்று நினைப்பார்கள். அனைத்தும் தமக்குத் தெரியும், நமக்குத் தெரியாத விடயங்கள் உலகத்தில் இல்லை என்று உரைப்பார்கள். அடக்கம் என்பதே என்ன வென்று அறியாத இவர்கள், எதையுமே சாதிக்காமல் அனைத்தையுமே சாதித்த வர்கள் போல காட்டிக் கொள்வார்கள். கீழ்த்தரமாக நடந்து கொண்டாலும், பிறருக்குத் தீங்கு செய்ய மனம் இடந்தராது. தன்னம்பிக்கை குறைந்து மற்றவருக்குக் கட்டுப்பட்டு அடிமை வாழ்க்கை வாழ்வார்கள். குடும்பத்தில் தீராத குழப்பம், தீய பழக்கம், வீண் சண்டை சச்சரவுகள் போன்றவற்றில் ஈடுபட்டுத் தன்னுடைய சுயகௌரவத்தை, மரியாதையை இழக்கும் நிலைக்கும் சென்று விடுவார்கள். வெறுப்பில் லாபமில் வீணாகக் கண்மூடித்தனமாக உழைத்துக் கொண்டிருப்பார்களேயன்றி, கருத்தோடு உழைக்கவே மாட்டார்கள்.

இரக்கமற்ற மனிதராக, பாச உணர்வற்றவராக, கொடுமைக்காரக் குணத் தோடுதான் சாக்கடையில் தவழ்ந்தாலும் மற்றவரைப் பழித்துப் பேசத் தயங்காதவராக வலம் வருவார்கள். சூரியன் எப்படி கிரகங்களில் தனித்தன்மையோடு விளங்குகிறதோ, அதைப் போலவே இந்த எண்ணில் பிறந்த நபர்கள் தன்னிச்சையாக முடிவு எடுக்கக் கூடியவர்கள். பிறருடன் கூட்டுச் சேர்ந்து விளையாடும் பருவத்திலும் விளையாடமாட்டார்கள். தனிமையை மட்டுமே விரும்புவார்கள். அதைப் போன்று படிப்பிலும் தனித்தன்மை வெளிப்படும்.

பிறர் செய்யும் தொழிலில் இவர்கள் ஈடுபட்டால் இவர்களின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கும். புகழ் கீர்த்தி செல்வாக்கு இவற்றைக் குறிக்கும் 1 ஆம் எண்ணைச் சார்ந்தவர்கள் சமுதாயத்தில் புகழ் பெற்றவர்களாக இருப்பார்கள். புத்திக் கூர்மை, ஞானம், ஆற்றல் ஆகிய அனைத்தையும் இவர்கள் இயற்கையாகவே பெற்றிருப்பார்கள். கோபமும் குணமும் ஒருங்கே இருக்கும்.

சூரிய ஆதிக்கத்தினரின் உடல் அமைப்பு- உணவு, நோய் மற்றும் மருத்துவ முறைகள்

1ம் எண்ணில் பிறந்த இவர்கள் உஷ்ணோதிக்க உடலைப் பெற்றவர்கள். இவர்களின் உடல் கெட்டிப்பட்டு கம்பீரமான தோற்றத்துடன் பரந்து விரிந்து அகலமான நெற்றியுடன் வலுவான தோள் பட்டையும் கொண்டு தலை நிமிர்ந்து நடக்கும் நயமானவர்கள். மிகவும் உயரமாகவும் நடுத்தர உயரத்துடனும் கலந்து காட்சியளிப்பார்கள். மார்பு விரிந்திருக்கும். சுழுத்து வலு வுடையது. மனித உடலில் முதுகு, தண்டுவடம், தலைப் பாகங் களில் ஆட்சி செய்வதால் எப்போதும் மிடுக்காகவே காட்சியளிப்பார்கள். இவர்களின் பேச்சிலும் நடையிலும் ஓரு வித தனிக் கம்பீரம் இருக்கும். உடலில் உஷ்ணம் அதிகமாக இருக்கும். இருதயம் பலம் மிகுந்து இருக்கும். இரத்த ஓட்டம் சீராக இருக்கும். எலும்புகள் சக்தி வாய்ந்தவை. சிறப்பான மிடுக்கான அங்க அசைவுகளுடன் பாவனைகளில் கம்பீரமும் மற்றவரை அடக்கும் ஆதிக்க பலமுடையதாகவே இருக்கும்.

சூரிய ஆதிக்கப் பெண்கள் சிலர் வயதுக்கு மீறிய அங்க வளர்ச்சி பெற்று அசாத்தியத் தோற்றத்துடன் காட்சியளிப்பார்கள். கண் சம்பந்தப்பட்ட வியாதிகள், உஷ்ண வியாதிகள், அஜீரணம், பித்தம்., இரத்த அழுத்தம், இரத்த ஓட்டப் பாதிப்பு, இருதயப் படபடப்பு, மன வியாதிகள் போன்றவையால் அவதிப்படுவார்கள்.

(தொடரும்....)

தூத்துக்குடி படுகொலைகளைக் கண்டித்து யாழ். இந்தியத் தூதரகம் முன் கவனயீர்ப்பு

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களின் ஆரோக்கியத்திற்கும் சுற்றுச் சூழலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவந்த தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் அமைந்துள்ள ஸ்டெர்லைட் செப்புத் தொழிற்சாலையை மூடக்கோரி அமைதியான முறையில் போராடி வந்த மக்கள், அந்தப் போராட்டத்தின் நூறாவது நாளன்று மேற்கொண்ட ஊர்வலத்தின் மீது தமிழக பொலிஸாரால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையைக் கண்டிக்கும் கவனயீர்ப்புப் போராட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்திற்கு முன்பாக மேற்கொள்ளப்படவுள்ளது என சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் சார்பாக அதன் தலைவர் க. ஆனந்தக்குமார சுவாமி, இணைச் செயலாளர்கள் ச.தனுஜன், அ.சீவரத்தினம் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அக் குறிப்பில் மன்னார் வளைகுடாக் கடல், நிலத்தடி நீர், காற்று ஆகிய இயற்கைச் சூழலைச் சீரழித்து, புற்றுநோய் போன்ற பாரதூரமான நோய்களை உருவாக்கி மக்கள் பலர் பலியாகவும் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகவும் காரணமாக இருந்த இந்த செப்பு ஆலையை மூட இருபது வருடங்களுக்கு மேலாகப் போராடி வந்த தூத்துக்குடி மக்களின் கோரிக்கைகளைக் கருத்தில் எடுத்துத் தீர்வை வழங்காத இந்திய மத்திய அரசும், தமிழக மாநில அரசும் போராடிய மக்கள் மீது கடந்த வாரம் பெரும் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதில் 13 இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 60 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தும் 100 மேற்பட்டோர் கைது செய்யப்பட்டும் காணாமலாக்கப்பட்டும் உள்ளனர்.

இம் மக்கள் போராட்டங்களின் பின்னர் குறித்த ஸ்டெர்லைட் ஆலை சட்டவிரோதமானது எனக் கூறி அதைப் பூட்டியுள்ள அரசு, சரியானதும் சட்டரீதியானதுமான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடிய மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டதோடு அல்லாமல், இப் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக இதுவரை எந்தவொரு நீதி விசாரணைகளையும் முன்னெடுக்கப்படாமை கண்டிக்கத்தக்கதாகும். எனவே, வேதாந்தா என்ற பெருமுதலாளிய நிறுவனத்தின் இலாப வெறிக்காக மக்களைப் பலிகொண்ட தமிழக அரசின் வன் செயல்களை எதிர்த்து இடம்பெறவுள்ள கவனயீர்ப்பில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் அனைவரையும் அணிதிரளுமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (இ-7)

நுளம்பாய் குளத்தைப் புனரமைக்க வரணி மக்கள் வேண்டுகோள்

(வரணி)

வரணி மாசேரிப் பகுதியில் அமைந்துள்ள நுளம்பாய் குளமானது பல வருடங்களாகத் தூர் வாரப்படாமல் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது. இக்குளமானது முன்பு கிராம மக்களின் நீராடல் தேவைக்காகவும் கால்நடைகளின் குடிநீர்த் தேவையினைப் பூர்த்தி செய்கின்ற குளமாகவும் காணப்பட்டது. ஆனால் இப்போது தூர் வாரப்படாமையால் அதிகளவான சேறு படிந்துள்ளது.

அதுமட்டு மன்றி குளத்தைச் சுற்றி அணைக்கட்டு இல்லாமையால் மழை காலங்களில் வெளியிடத்து நீர் குளத்தினுள் சேர்வதால் நீரும் அசுத்த மடைகின்றது. மேலும் குளமானது நிரம்பி அணைக்கட்டு இன்மையால் வீதிக்கு மேலாக தேங்கி நிற்கின்றது.

இதனால் மழை காலங்களில் அருகில் உள்ள வீதியினைப் பொது மக்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளனர். எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் தலையிட்டு குளத்தினை தூர்வாரி சுற்றி அணைக்கட்டினை அமைத்து கிராம மக்களின் நீராடல் தேவையைப் பூர்த்தி செய்வதோடு கால்நடைகளின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கையெடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-103)

"சகவாழ்வே சக்திதரும்" யாழ். முஸ்லிம்கள் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

"சகவாழ்வே சக்தி தரும்" எனும் தொனிப்பொருளில் யாழ். முஸ்லிம் மக்களின் இப்தார் ஒன்று கூடல் நாளை மறுதினம் 2 ஆம் திகதி மாலை 5 மணிக்கு யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறும்.

யாழ்., கிளிநொச்சி முஸ்லிம் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் விசேட விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், யாழ்மாநகரசபைமுதல்வர்இஆனோல்ட், யாழ். இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-9)

பாதாள உலகக் குழுத் தலைவன்

மதூஷின் பிரதான ஆதரவாளர் கைது

காலி - லபுதுவ பிரதேசத்தில் வைத்து 10 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

(கொழும்பு)

பிரபல பாதாள உலகக் குழுவின் தலைவரான மாகந்துரே மதூஷின் பிரதான ஆதரவாளர் உள்ளிட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"கிழக்கில் இன்று மீண்டும் சூரியன் உதித்து விட்டது"

நீதிபதி இளஞ்செழியனுக்கு வரவேற்பு

(திருமலை)

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று திருகோணமலை மேல் நீதிமன்றத்தை சென்றடைந்தார். இதன்போது "கிழக்கில் இன்று மீண்டும் சூரியன் உதித்து விட்டது" என்ற கோசத்துடன் நீதிபதி வரவேற்கப்பட்டார்.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்து திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக இடம் மாற்றம் பெற்றுச் சென்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று தமது கடமைகளை பொறுப்பேற்றார்.

இந்நிலையில் திரு கோணமலை மேல் நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. ஆயுதம் தாங்கிய பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

வருடாந்த இடமாற்றத்தின் கீழ் மூன்று ஆண்டுகள் ஒரே மாகாண மேல் நீதிமன்ற அமர்வில் கடமையாற்றியதன் அடிப்படை யில் நாடு முழுவதும் மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதி தி மா.இளஞ்செழியன். திருகோணமலை மேல் நீதிமன்ற நீதி பதியாக மாற்றம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

சந்தேக நபரைப் பிடித்துக் கொடுத்த தமிழ் இளைஞனுக்கு பொலிஸார் பாராட்டு

(கொழும்பு)

கொழும்பில் சிங்கள நபர் ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை தமிழ் இளைஞன் ஒருவர் அதிரடியாக செயற்பட்டு பிடித்துள்ளார்.

மஹரகம நகர சபைக்கு முன்னால் உள்ள மஞ்சள் கோட்டில் சிங்களவரை, மோட்டார் வாகனத்தினால் மோதி விட்டு தப்பிச்சென்ற வரை தமிழ் இளைஞன் துரத்திப் பிடித்துள்ளார்.

மஹரகம மாநகர சபையின் பாதுகாப்பு அதிகாரியாக செயற்பட்ட ஒருவரே இவ் வாறு விபத்தில் பாதிப்படைந்துள்ளார்.

பாதுகாப்பு அதிகாரி, சந்தேக நபரின் மோட்டார் சைக்கிளில் மோதுண்ட போது 68 மீற்றர் தூரம் தூக்கி வீசப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் படுகாய மடைந்த பாதுகாப்பு அதிகாரியை களுபோவில வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் உயிரிழந்துள்ளார் என மஹரகம பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த பாதுகாப்பு அதிகாரி மஹரகம மாநகர சபைக்கு முன்னால் உள்ள ஹய்லெவல் வீதியை கடக்க முயற்சித்துள்ளார். அங்கு கொட்டாவ பகுதியில் இருந்து கொழும்பு நோக்கி வேகமாக சென்ற மோட்டார் வாகனம் ஒன்று பாதுகாப்பு அதிகாரியை மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதனை அவதானித்த மோட்டார் வாகனத்தின் தமிழ் சாரதி ஒருவர், தப்பிச் சென்ற சாரதியை துரத்தி சென்றுள்ளார். மஹரகம பேருந்து நிலையத்திற்கு அருகில் வைத்து சந்தேக நபரை தமிழ் சாரதி மடக்கி பிடித்துள்ளார்.

மடக்கி பிடித்த சந்தேக நபரை தனது வாகனத்திலேயே ஏற்றி சென்று பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பதற்கு தமிழ் சாரதி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

சந்தேகநபரை பரிசோதித்த போது அவர் அதிகளவு மதுபானம் அருந்தியிருந்தார் என தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கருப்பையா நிர்மலசந்திரன் என்ற தமிழர் ஒருவரே சந்தேக நபரை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

தற்காலத்தில் வாகன விபத்துக்கள் தொடர்பில் சாட்சி வழங்குவதற்கே தயங்கும் நபர்களுக்கு மத்தியில் தப்பிச் சென்ற சாரதியை பிடிப்பதற்கு முயற்சித்த தமிழ் இளைஞனை பாராட்ட வேண்டும் என மஹரகம பொலிஸ் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி புத்திக்க அபேகோன் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ-7)

4,400 கோடி செலவில் 8,903 வீடுகள் 2 வருடங்களில் பூர்த்தி செய்ய திட்டம்

(கொழும்பு)

இரண்டு வருடங்களுக்குள் 8,903 வீடுகளை மக்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளதாக, பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வீடுகள் 2019ஆம் ஆண்டு இறுதிக்குள் சுமார் 4,451 கோடி ரூபாய் செலவில் நிர்மாணித்து மக்களிடம் கையளிக்க எதிர்பார்ப்பதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

14 வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2016, 2017ஆம் ஆண்டுகளில் 908 கோடி ரூபாய் முதலீட்டில் 270 வீடுகளைக் கொண்ட ஏழு வீடமைப்புத் திட்டங்கள் மக்களுக்காக கையளிக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, தற்சமயம் 4,952 கோடி ரூபாய் செலவில் 9,904 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

சட்டவிரோத கட்டடங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் சதாசிவம் இராமநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கரவெட்டி பிரதேசசபை அமர்வு அண்மையில் இடம் பெற்றது. இதன்போதே குறித்த கோரிக்கையை முன் வைத்துள்ளார். நெல்லியடி பிரதேசத்தில் அனுமதி பெற்ற கட்டடங்கள் 108 அமைந்துள்ளன. ஆனால் 173 கட்டடங்கள் அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை எல்லையில் 147 அனுமதிபெற்ற கட்டடங்கள் உள்ளன. ஆனால் 2770 கட்டடங்கள் அனுமதி பெறாமல் அமைக்கப்பட்டுள்ளன. கட்டி முடிக்கப்பட்டிருக்கும் புதிய கட்டடங்களுக்கு புதிய கட்டட அனுமதி சட்டப்படி விண்ணப்பித்து அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேலும் பிரதேச சபையின் நிர்வாக செயற்பாடுகளுக்கு ஆளணிப்பற்றாக்குறை காணப்படுமிடத்து அவை செயலகம் ஊடாக நிரப்பப்பட வேண்டும். பிரதேச சபையின் அதிகாரத்தை பயன்படுத்தியும், கட்டட ஆவணங்களை மதிப்பீடு செய்து மக்களுக்கு அவற்றை வழங்க வேண்டும். பிரதேச மக்கள்மீள்அஞ்சேபனைகளை தெரிவிக்க மூன்று மாத காலம் அவகாசம்வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையால் கதவு மூடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலையின் பின்பக்க கதவு திறப்பதில்லை.

இதனால் சனிக்கிழமைகளில் இடம்பெறும் குழந்தை நல ஆலோசனைக்கு (கிளினிக்) வரும் தாய்மார் மற்றும் குழந்தைகள் நீண்ட தூரம் வைத்தியசாலையைச் சுற்றி நடக்க வேண்டி இருப்பதாகவும், அதனால் வைத்திய சாலையின் பின்பக்க கதவினை திறந்து விட வழிவகை செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் பசுபதி அச்சுதனை தொடர்பு கொண்டு கேட்ட போது, குழந்தைகள் மற்றும் தாய்மாரின் நலன் கருதி குழந்தைகள் கிளினிக் இடம்பெறும் நாளான சனிக்கிழமைகளில் காலை 9மணி தொடக்கம் முற்பகல் 11மணி வரை வைத்தியசாலையின் பின்பக்க கதவினை திறந்து விட அனுமதிப்பதாக தெரிவித்தார்.

ஏற்கனவே செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் நீரிழிவு நோயாளர்களின் நலன் கருதி வைத்திய சாலையின் பின்பக்க கதவு திறந்து விடப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை நிலவுகின்ற போதிலும் மக்கள் நலன்கருதி கதவினை திறந்து விட அனுமதித்தமைக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (இ-7)

அமைச்சர் ராஜிதவுக்கு அமோக வரவேற்பு

(கொழும்பு)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் உப தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள சுகாதார நோஷாத்துக்கு மற்றும் சுதேச வைத்திய துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்னவை வரவேற்கும் நிகழ்வு, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று இடம்பெற்றது.

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு இதனை ஒழுங்கு செய்திருந்தது.

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் இடம்பெற்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் போது ஸ்தாபனத்தின் உப தலைவர் பதவிக்கு அமைச்சர் ராஜித சேனாரட்ன போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

பொதுக்கிணற்றை புனரமைத்து தாருங்கள்

பொது மக்கள் கோரிக்கை

(சுன்னாகம்)

வலி.தெற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மருதனார்மடம் பொதுச்சந்தையின் உட்பகுதியில் பாழடைந்த நிலையில் காணப்படும் பொதுக்கிணற்றை சுகாதார நலன் கருதி விரைவில் புனரமைக்குமாறு, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மருதனார் மட பொதுச் சந்தையின் உட்புறமாக அமைந்துள்ள கிணறு பாழடைந்த நிலையில் காணப்படுகிறது. குறித்த கிணறு கவனிப்பாரற்று காணப்படுவதால் அதற்குள் கழிவுப் பொருட்கள் தொடர்ச்சியாக கொட்டப்பட்டு வருகின்றன. சந்தைக் கழிவுகள் கொட்டப்பட்டுவருவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்பு பெருக்கமும் அதிகரித்து காணப்படுகிறது. இதனால் சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர்களும் பொதுமக்களும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே இந்த கிணற்றினை புனரமைப்பு செய்து அங்குள்ள கழிவுகளை அகற்றி மேலும் இந்த செயற்பாடு இடம்பெறாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலி.தெற்கு பிரதேச சபைக்கு பொதுமக்களால் மகஜர் ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக வலி.தெற்கு பிரதேசசபை தவிசாளர் க.தர்சனை தொடர்பு கொண்டு கேட்டபோது பொதுமக்களால் எமக்கு எழுத்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்குரிய ஏற்பாடுகளை செய்யவேண்டியிருந்ததால் குறித்த புனரமைப்பு பணியை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. பொது மக்களுக்கு பாதிப்பில்லாத வாறு அடுத்த வாரம் குறித்த கிணறு புனரமைப்பு செய்து கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 6 பாடசாலை மாணவர்களுக்கு புதிய துவிச்சக்கரவண்டிகள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

நாட்டினை ஆட்சி செய்ய கோத்தபாயவுக்கு

எந்தத் தகுதியுமில்லை

சரத் பொன்சேகா எதிர்ப்பு

(கொழும்பு)

யுத்த காலத்தில் நாட்டை விட்டு வெளியேறியவர்கள் இன்று முதுகெலும்புள்ள தலைமைத்துவம் குறித்து பேசுகின்றனர். கோத்தபாய ராஜபக்ஷவிற்கு இந்த நாட்டினை ஆட்சி செய்ய எந்தத் தகுதியும் இல்லை என அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி இணங்கினால் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு சவாலாக நான் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

நல்லாட்சியின் நகர்வுகள் மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அரசியல் நகர்வுகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதான இரண்டு கட்சிகளை இணைத்து முன்னெடுக்கப்பட்டு வரும் கூட்டாட்சியில் எதிர் பார்த்த அளவிற்கு எந்தவித மாற்றங்களும் இடம்பெறவில்லை. அதனை எம்மால் முழுமையாக மறுக்க முடியாது.

எனினும் கடந்த மூன்று ஆண்டுகளில் பல நல்ல காரியங்களையும் இதற்கு முன்னர் ஆட்சிகளில் முன்னெடுக்கப்படாத வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்துள்ளோம்.

யுத்தத்தின் பின்னர் முன்னெடுக்க வேண்டிய நல்லிணக்க செயற்பாடுகள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள், நாட்டில் ஜனநாயகத்தை பலப்படுத்த முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என முக்கியமான வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம். ஆகவே வேலைத்திட்டங்கள் எதனையும் செய்யவில்லை என கூறிவிட முடியாது.

ஆனால் இன்று தேசிய அரசாங்கம் என்ற கொள்கையை முறந்து மீண்டும் கட்சி சார்ந்த தனிப்பட்ட அரசியல் நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்ற காரணத்தினால் எதிர்கால வேலைத்திட்டங்கள் தடைப்படுகின்றன. இந்த அரசாங்கத்தில் உள்ள பாரிய பிரச்சினை இதுவேயாகும்.

ஜனாதிபதி பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டு வெற்றி பெற்றவர். அவரது வெற்றியில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பங்களிப்பு மிகவும் குறைவானதாகும்.

மாறாக ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஆதரவிலேயே அவர் ஜனாதிபதியானார். அவ்வாறு இருக்கையில் இன்று அவர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நலன்களை மாத்திரம் கவனத்தில் கொண்டு செயற்படுவது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயமாகும்.

அதேபோன்று அப்போதைய ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட்ட நபர்களுக்கே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னுரிமை வழங்கி அவர்களுக்காக இன்று ஆட்சியை குழப்பும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளார். ஆகவே இனியாவது ஜனாதிபதி சரியான தெரிவுகளை முன்னெடுக்க வேண்டும்.

முதுகெலும்புள்ள தலைவர்களை உருவாக்க வேண்டும் என சிலர் கூறுகின்றனர். அதனை நாமும் ஏற்றுக் கொள்கின்றோம். ஆட்சியை சரியாக முன்னெடுத்து செல்லக்கூடிய, தீர்மானங்களை சரியாக முன்னெடுக்கக்கூடிய முதுகெலும்புள்ள தலைவர்கள் ஆட்சிக்கு வர வேண்டும்.

ஆனால் யுத்த காலத்தில் நாட்டை விட்டு வெளியேறி 15 ஆண்டுகளாக ஒளிந்து மறைந்து யுத்தத்தின் பின்னர் தாம் தான் வீரர்கள் எனக் கூறிக்கொண்டுள்ள தலைவர்கள் இந்த நாட்டினை ஆளுவது பொருத்தமற்றதாகும்.

கோத்தபாய ராஜபக்ஷவிற்கு இந்த நாட்டினை ஆட்சி செய்ய எந்தத் தகுதியும் இல்லை. அவருக்கு ஆட்சி நிர்வாகத்தை செய்யத் தெரியாது.

இராணுவத்தையே ஒழுங்காக வழிநடத்த தெரியாத, தைரியம் இல்லாத நபர் நாட்டினை ஆட்சிசெய்யும் ஆசையில் உள்ளார். ஆனால் அது நடைபெறாது. அதேபோல் இன்று ஜனாதிபதி வேட்பாளர் குறித்து அதிகமாக பேசுகின்றனர். கோத்தபாய ராஜபக்ஷ அதற்காக தன்னை தயார்படுத்தி வருகின்றார் என்றே தெரிகின்றது.

அதேபோல் ஐக்கிய தேசியக்கட்சியும் இப்போதே தமது அடுத்த தலைமைகளை தெரிவு செய்ய வேண்டும். மீண்டும் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க முடியாது.

தனி ஆட்சியையே அமைக்க வேண்டும். ஆகவே ஐக்கிய தேசியக்கட்சி அதற்கான தயார்படுத்தலை முன்னெடுக்க வேண்டும். இதில் என்னை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க தீர்மானம் எடுத்தால் நான் களமிறங்கவும் தயார் எனவும் பொன்சேகா மேலும் தெரிவித்தார். (இ-7)

மட்டக்களப்பு நீர்ப்பாசன திணைக்களத்தின் செயற்பாடுகளைக் கண்டித்து கவனயீர்ப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு நீர்ப்பாசன திணைக்களத்தின் செயற்பாடுகளை கண்டித்து விவசாயிகள் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

நேற்றுபுதன்கிழமை காலை மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் ஒன்றுகூடிய உன்னரிச்சை நீர்ப்பாசனத்திற்குட்பட்ட பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆயிரக்கணக்கான விவசாயிகளும் விவசாய குடும்பங்களும் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, நீர்ப்பாசன திணைக்களத்திற்கு எதிராக பதாகைகளை போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்ததுடன், தமக்கான நிவாரணங்களை உரியவர்கள் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையினையும் முன்வைத்தனர்.

வாவிக்கரை வீதியில் ஆரம்பமான இந்தக் கவனயீர்ப்புப் பேரணியானது அந்தோனியார் ஆலயவீதியூடாக மட்டக்களப்பு மாவட்ட செயலகம் வரையில் சென்றதுடன் அங்கு மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது. இதன் பின்னர் போராட்டம் நிறைவடைந்தது.

கடந்த நான்கு நாட்களுக்கு முன்பாக உன்னரிச்சை குளம் திறக்கப்பட்டதன் காரணமாக உன்னிச்சை நீர்ப்பாசன குளத்தினை அண்மிய சுமார் 6 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன. உன்னிச்சை குளத்தினை சிறந்த முறையில் நீர்ப்பாசன திணைக்களம் முகாமைத்துவம் செய்யாத காரணத்தினாலேயே இந்த நட்டம் ஏற்பட்டதாக விவசாயிகள் சுட்டிக்காட்டினர். (இ-7)

முன்னாள் உபவேந்தர் இஸ்மாயிலுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் எஸ்.எம்.எம். இஸ்மாயிலுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பதவியில் இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் அதிகார துஷ்பிரயோகங்கள், ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழு நேற்று முன்தினம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பல்கலைக்கழகத்தின் பதிவாளர், பிரதிப் பதிவாளர், விரிவுரையாளர்கள், விடுதிப் பொறுப்பாளர், முன்னாள் பொறியியலாளர், கேஷலை மேற்பார்வையாளர் உள்ளிட்ட பலரிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-7)

செய்தித்துளிகள்

அமல் கருணாசேகர மீள விளக்கமறியலில்

(கொழும்பு)

இராணுவ புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க கல்கிஸை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்ட சம்பவத்தில் அதற்கு உடந்தையாக இருந்த சந்தேகத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

மிலிடரி பலத்தை உபயோகித்து கொண்டுவரும் "கொதலாவல" தனியார் பல்கலைக்கழக சட்டமூலத்திற்கு எதிராகவோம்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு நகரில் பல பகுதிகளில் கொத்தலாவல தனியார் பல்கலைக்கழகத்தை எதிர்க்கும் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் நேற்று ஒட்டப்பட்டுள்ளன. "மிலிடரி பலத்தைப் பிரயோகித்து கொண்டு வரும் கொத்தலாவல தனியார் பல்கலைக்கழக சட்டமூலத்தை எதிர்ப்போம்" எனும் வாசகங்கள் அடங்கிய சுவ ரொட்டிகளே மட்டக்களப்பு நகரின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன. அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறித்த சுவரொட்டிக்கு உரிமை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

இத்தாலியில் கோர விபத்து இலங்கை இளைஞன் மரணம்

(ரோம்)

இத்தாலியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையை சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழிலுக்கு சென்று திரும்பிக்கொண்டிருக்கையில் அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் பாரவூர்தி ஒன்றுடன் மோதுண்டதை தொடர்ந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது. கம்பஹா மாவட்டத்தை சேர்ந்த 24 வயதுடைய சிந்தன தனஞ்சன என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ-7)

ஐ.தே.க செயற்குழுவுக்கு மேலும் சில உறுப்பினர்கள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவுக்கு மேலும் சில உறுப்பினர்கள் இன்று நியமிக்கப்படவுள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். இன்று நடைபெறவுள்ள கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின்போது புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கட்சியில் மேலும் சில மாற்றங்கள் சீரமைப்புப் பணிகள் இந்த வாரம் இடம்பெறவுள்ளதாக பிரதமரும் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே அறிவித்திருந்தார். இந்நிலையில் இந்தக் கூட்டமும் தொடர்ந்தும் இன்று செயற்குழுக் கூட்டத்தின்போது இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக, கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். (இ-7)

விமானப்படைச் சிப்பாய் உயிர் மாய்ப்பு!

(கொழும்பு)

ரத்மலானை, விமானப்படை முகாமில் பணியாற்றிய சிப்பாய் ஒருவர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டுள்ளார். அந்த முகாமின் படையினர் தங்கும் வீட்டில் வைத்து நேற்றுக் காலை அவர் தூக்கில் தொங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அம்பாறை, பரகஹகெலே பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். தற்கொலைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை என்பதுடன், கல்கிஸை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

தேனீக்களாக மாறிய தேவர்கள்



ஒரு சமயம் தேவலோகத்தில் தேவர்கள் உற்சாக மிகுதியால் அளவுக்கு மீறி அமிர்தத்தை சுவைத்து மகிழ்ந்தனர். எனவே, போதை தலைக்கேறி தாம் என்ன செய்கிறோம் என்பதை மறந்து பூஜைக்குரிய பூங்காவனத்தை நாசம் செய்தனர். இச்செய்கையினால் கோபமுற்ற தேவேந்திரன் அவர்களைக் கண்டித்து, "நீங்கள் செய்த இப்பாவச் செயலுக்கு பூலோகத்தில் தேனீக்களாக மாறி அங்கு காட்டிலுள்ள பூச்செடிகளிலிருந்து தேன் சேகரித்து பிழைத்துக் கொள்ளுங்கள். கஷ்டப்பட்டு உழைத்தால் உங்களுக்கு நல்ல புத்தி உண்டாகும்" என சபித்தார். தங்கள் தவறை உணர்ந்த தேவர்கள், "பிரபு! நாங்கள் அறியாமல் செய்த இக்குற்றத்தை மன்னித்து தங்களுக்கு பணிவிடை செய்ய அருள் புரியுங்கள். சாப விமோசனம் அளியுங்கள்!" என்று வேண்டினர்.

"அற்பர்களே! நீங்கள் செய்ததோ மாபெரும் குற்றம். கொடுத்த சாபம் கொடுத்ததுதான். அதைத் திரும்பிப் பெற இயலாது. இருப்பினும் இச்சாபத்திலிருந்து விடுதலை பெற ஒரே வழிதான் உள்ளது. காட்டில் தேன் சேகரிக்க வரும் வேடர்கள் தீப்பந்தத்தோடு தேன் அடையில் வாழும் உங்களைத் தீயால் விரட்டி தேனை தங்கள் சுரை குடுக்கையில் சேகரித்துக் கொள்வர். ஆனால், எவன் ஒருவன் உங்கள் வேண்டுகோள்படி தீங்கு செய்யாமல் தேனைச் சேகரித்துக் கொண்டு நீங்கள் வாழும் தேன் அடையை கடலில் வீசி எறிகிறானோ அப்போது தான் நீங்கள் உங்கள் சுய உருவை அடைந்து என்னை அடைவீர்கள்" என்றார் தேவேந்திரன். சாபத்தினால் தேவர்கள் தேனீக்களாக மாறி விந்தியமலை சாரல் காட்டில் தேனடையில் வாசம் செய்தனர். வழக்கம் போல் தேன் சேகரிக்கும் வேடர்கள் தீப்பந்தத்தில் கொளுத்தி தேனீக்களை விரட்டினர்.

ஒரு தேனீ தன் இனிய குரலில், "அன்பார்ந்த வேடர்களே! எங்களைத் தீப்பந்தத்தில் சுடாதீர்கள். உங்களுக்கு வேண்டிய தேனைத் தருகிறேன்" என்றது. வேடர் தலைவன் இக்குரலைக் கேட்டு, "ஏதோ பிரமைபோல் தோன்றுகிறது. தேனீயாவது பேசுவதாவது!" என்று சிரித்துக்கொண்டே சென்றுவிட்டனர். இது வழக்கமாக நடந்து வந்தது. துன்பத்திலிருந்து விடுதலை கிடைக்காமல் தேனீக்கள் தவித்தன. கடவுளை நினைத்து வேண்டின.

ஒரு நாள் நல்ல உள்ளம் படைத்த தர்மன் என்ற வேடன் தீ பந்தத்தோடு வந்தான். வழக்கம் போல் அவனைக் கண்ட தேனீ, "அன்பனே! கொஞ்சம் நில். நான் சொல்வதைக் கேள். உன்னை செல்வந்தனாக மாற்றுவேன்" என்றது. அதிர்ச்சியும், ஆச்சர்யமும் அடைந்த தர்மன் தான் காண்பது கனவா அல்லது நினைவா என்ற குழப்பத்தோடு தேனீயின் வேண்டுகோளின்படி தீப்பந்தத்தை எறிந்து விட்டு அது சொல்வதைக் கேட்க இசைந்தான்.

"நண்பனே! நாங்கள் தேவர்கள். எங்கள் தலைவரின் சாபத்தால் தேனீக்களாக மாறி அல்லல் படுகிறோம். எங்களைக் காப்பாற்ற நீதான் உதவ வேண்டும். அதாவது நீ எங்கள் அருகில் வந்து எங்களுக்கு எவ்வித தீங்கும் செய்யாமல் தேனை எடுத்துக் கொண்டு எங்கள் அடையை கடலில் வீசி எறிந்து விடு. இதைச் செய்தால் உன்னை பெரிய செல்வந்தனாக மாற்றுவோம்" என்றது. "நான் உங்களுக்கு ஒரு தீங்கும் விளைவிக்கமாட்டேன்.

உங்கள் விருப்பப்படியே செய்கிறேன்" எனக் கூறி தேன் அடைக்கு அருகில் சென்றதும் சுரைக் குடுக்கையில் தேன் தானாக நிரம்பியது. உடன் தேன் அடையை எடுத்து கடலில் வீசினான். அடுத்த நிமிடமே தேனீக்கள் தேவர்களாக மாறினர்.

தொடரும்...

- 1223- செங்கிஸ் கானின் மங்கோலியப் படைகள் கிப்சாக்கியரை சமரில் தோற்கடித்தனர்.
- 1889-பென்சில்வேனியாவில் ஜோன்ஸ்டவுன் நகரில் அணைக்கட்டு ஒன்று உடைந்ததில் 2,200 பேர் கொல்லப்பட்டனர்.
- 1900-பிரித்தானியப் படைகள் ரொபேர்ட் பிரபு தலைமையில் ஜோகர்னஸ்பேக் நகரைக் கைப்பற்றின.
- 1910- தென்னாபிரிக்க ஒன்றியம் அமைக்கப்பட்டது.
- 1911-டைட்டானிக் கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1921-ஐக்கிய அமெரிக்காவில் ஒக்லஹோமா, துல்சா என்ற இடத்தில் இடம்பெற்ற இனக்கலவரங்களின் போது 39 பேர் கொல்லப்பட்டனர்.
- 1942-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல்கள் சிட்னி நகரைத் தாக்கின.
- 1961-தென்னாபிரிக்கா பொதுநலவாய அமைப்பில் இருந்து விலகியது. தென்னாபிரிக்கக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1970- பெருவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் யுங்கே என்ற நகர் முழுமையாகப் புதையுண்டதில் 47,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1973-சென்னையில் இருந்து புறப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் 440 பாலம் விமான நிலையத்தை அண்மித்த போது, தீப்பற்றி எரிந்ததில் அதில் பயணம் செய்த 65 பேரில் 48 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997- கனடாவில் நியூ பிரன்ஸ்விக்கையும் பிரின்ஸ் எட்வர்ட் தீவையும் இணைக்கும் கூட்டமைப்புப் பாலம் (Confederation Bridge) திறக்கப்பட்டது.
- 1981-யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் நள்ளிரவில் இலங்கைக் காவல்துறையினரின் வன்முறைகள் ஆரம்பமாகின. யாழ். பொது நூலகம் அடுத்த நாள் எரியூட்டப்பட்டது.
- 2004-வீரகேசரி பத்திரிகை நிருபரும் பத்திரிகையாளருமான ஜயாத்துரை நடேசன் மட்டக்களப்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 2005-இலங்கையின் புலனாய்வுத்துறை உயர் அதிகாரி மேஜர் நிசாம் முத்தாலிப் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 2007-டொரண்டோ தமிழியல் மாநாடு ஆரம்பமானது.

பிறப்புகள்

- 1819--வால்ட் விட்மன், அமெரிக்கக் கவிஞர், ஊடகவியலாளர் (இ. 1892)
- 1852--ஜூலியஸ் ரிச்சர்டு பெட்ரி, செருமானிய நுண்ணுயிரியலாளர் (இ. 1921)
- 1912-மார்ட்டின் சுவார்சுசைல்டு, செருமானிய-அமெரிக்க வானியற்பியலாளர் (இ. 1997)
- 1919-எம்.ஐ.எம்.அப்துல் மஜீத், இலங்கை அரசியல்வாதி (இ. 1970)
- 1930-கிளின்ட் ஈஸ்ட்வுட், அமெரிக்க நடிகர், இயக்குநர்
- 1931--நீலாவணன், ஈழத்துக் கவிஞர் (இ. 1975)
- 1945-லோரண்ட், பாக்போ, ஐவரி கோஸ்ட்டின் 4ஆவது அரசுத்தலைவர்
- 1948--சிவெத்லானா அலெக்சியேவிச், நோபல் பரிசு பெற்ற பெலருசிய எழுத்தாளர்
- 1966-ரொசான் மகாநாம, இலங்கைத் துடுப்பாளர்
- 1976-கோலின் பார்ரெல், ஐரிய நடிகர்

இறப்புகள்

- 1809-ஜோசப் ஹேடன், ஆஸ்திரிய இசையமைப்பாளர் (பி. 1732)
- 1832-எவரிஸ்ட் கால்வா, பிரான்சியக் கணிதவியலாளர் (பி. 1811)
- 1910-எலிசபெத் பிளாக்வெல், ஆங்கிலேய-அமெரிக்க மருத்துவர் (பி. 1821)
- 1960-டி.பி.ஜாயா, இலங்கை அரசியல்வாதி, கல்வியியலாளர் (பி. 1890)
- 1964-பி.ஆர்.மாணிக்கம், தமிழகக் கட்டடக் கலைஞர் (பி. 1909)
- 1973-மோகன் குமாரமங்கலம், இந்திய அரசியல்வாதி (பி. 1916)
- 1976-ஜாக்குவஸ் மோனாட், நோபல் பரிசு பெற்ற பிரான்சிய உயிரியலாளர் (பி. 1910)
- 1987-ஜான் ஆபிரகாம், இந்தியத் திரைப்பட இயக்குநர் (பி. 1937)
- 2000-அ.ஜெ.வில்சன், இலங்கை வரலாற்றாளர், எழுத்தாளர் (பி. 1928)
- 2004-ஜயாத்துரை நடேசன், இலங்கை ஊடகவியலாளர் (பி. 1954)
- 2007-எஸ். எம். கமால், தமிழக வரலாற்று ஆய்வாளர், நூலாசிரியர், பதிப்பாளர் (பி. 1928)
- 2009-கமலா தாஸ், மலையாள எழுத்தாளர் (பி. 1934)

சிறப்பு நாள்

- உலக புகையிலை எதிர்ப்பு நாள்

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	தெல்லிபழை	சாவகச்சேரி	கொழும்பு	கிளிநொச்சி	மருதனார்மம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	80	120	70	90	120	120
உருளைக்கிழங்கு	100	120	100	95	120	110
பச்சைமிளகாய்	80	120	100	80	150	70
தக்காளி	180	250	180	130	200	200
முருங்கைக்காய்	40	30	50	35	40	35
கோவா	80	160	100	80	120	100
கரட்	180	400	200	130	300	200
பூசணி	30	20	40	20	40	30
புடோல்	80	100	80	60	120	120
வாழைக்காய்	60	40	50	35	80	50
சின்ன வெங்காயம்	120	200	160	130	160	140
பெரிய வெங்காயம்	100	100	90	85	100	100
பாகற்காய்	160	200	160	120	200	200
வெண்டிக்காய்	80	100	70	70	180	70
கருணைக்கிழங்கு	60	100	60	65	100	60
பயற்றங்காய்	100	100	60	110	80	100
பீன்ஸ்	200	300	250	200	320	250
பீற்றூட்	80	100	60	35	120	80
கறிமிளகாய்	120	200	200	90	160	200
முருங்கைக்காய்	200	100	150	100	240	200
போஞ்சி	250	350	250	–	320	–
கத்தரிதம்புள்ள	60	–	–	–	120	100
கீரை-1பிடி	30	80	40	30	40	60
தேசிக்காய்	180	150	200	200	250	200
தேங்காய்(ஒன்று)	60	60-100	75	65	50-70	70
இராசவள்ளி	200	200	160	–	200	180
வெங்காயப்பூ	250	400	280	–	280	300
முள்ளங்கி	100	100	100	30	120	100
பொன்னாங்காணி	40	50	40	10	30	35
வல்லாரை	15	20	20	10	20	30
ஈரப்பலா	80	120	–	–	100	–

நல்லவர்களாய் நாம் வாழும் வரை வாழ்வின் இலக்கண நூல்களைப் பற்றி நாம் ஏன் கவலைப் பட வேண்டும்! — சார்ல்ஸ் ப்ரவீன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

ஓய்வுபெற்றுள்ள அன்புடையீர்! பேரவையில் இணைந்து சேவை தாரீர்

அரசு மற்றும் தனியார் துறைகளில் கடமை யாற்றிவிட்டு ஓய்வுபெற்றவர்களில் கணிச மானவர்கள் அடுத்து என்ன செய்வது என்ற விடை காணமுடியாத வினாவுடன் காலம் கழிக்கின்றனர்.

இதில் ஒருபகுதியினருக்கு குடும்பச் சுமை தீராமல் இருக்கலாம். பிள்ளைகளின் உயர் கல்வி, திருமணம் என்ற பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம் கொடுப்பவர்களாக இருப்பர்.

எனினும் இன்னும் கணிசமானவர்கள் பணிகளில் இருந்து ஓய்வுபெற்றிருப்பது மட்டு மன்றி, குடும்பச் சுமைகளையும் இறக்கி வைத்த வர்களாக சுதந்திரமாக இருப்பர்.

இத்தகையவர்களை நோக்கியதே இவ் விண்ணப்பமாகும்.

அன்புக்குரிய பெரியவர்களே! தமிழினம் இன்று பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது.

கூடவே எங்கள் இளம் சமூகம் தம்மை வழிப் படுத்த முடியாமல் தத்தளிக்கிறது. கையடக்கத் தொலைபேசியும் மதுவும் அவர்களை நகர விடாமல் தன்னுள் அடக்கி வைத்துள்ளது.

இவைதவிர, ஒரு பகுதி இளைஞர்கள் வாள் வெட்டு கலாசாரத்துக்குள் இறங்கி தங்களை யும் கெடுத்து தங்கள் குடும்பங்களையும் துன் பக் கடலில் வீழ்த்தியுள்ளனர்.

இந்நிலையில் அவர்கள் யாரோ பிள்ளை கள் என்று நாம் பேசாதிருந்தால் எங்கள் வாழ் வும் பாதிப்பைச் சந்திக்கும் என்பதை நாம் ஒரு போதும் மறந்துவிடக்கூடாது.

எனவே இந்த மண்ணில்தான் எங்கள் முந்தையர்களும் எந்தையும் தாயும் நாமும் எங்கள் பிள்ளைகளும் வாழ்ந்தோம். வாழப் போகிறோம்.

மண்சரிவில்லை, சூறாவளியில்லை, பூமிய திர்ச்சியில்லை, அதிகூடிய வெப்பம் இல்லை, அளவுக்கதிகமான குளிரில்லை, இயற்கை அனர்த்தம் இல்லை. எங்கு பார்த்தாலும் தெரி ந்த முகங்கள், உறவுகளின் கூட்டங்கள்.

வீதியில் இறங்கினால் நின்று கதைத்து சிரித்து மகிழ்ந்து பிறர் துன்பம், துயரம் பகிர்ந்து ஆறுதல் கூறி வாழ்கின்ற இந்த வாழ்வு உல கில் எங்கும் கிடையாதென்பதே உண்மை.

இப்பெரும் பாக்கியம் இங்கு வாழுகின்ற நமக்கு இறைவன் தந்தான் எனில் அதனைக் காப்பாற்றுகின்ற பெரும் பொறுப்பு நம்முடை யது.

ஆகையால் ஆழ்ந்தகன்ற சான்றோர்களே! உங்கள் ஓய்வுக்காலம் தமிழினத்துக்கான அர்ப்பணிப்புக் காலமாக மாறட்டும்.

இதற்காக தமிழ் மக்கள் பேரவை எனும் மக் கள் இயக்கத்தில் நீங்கள் அத்தனை பேரும் சேர்ந்து நம் இனம் வாழ உங்கள் சேவையை ஆற்றுங்கள்.

உங்களிடம் இருக்கக்கூடிய நிர்வாக அறிவு, மொழிப்புலமை, அரசியல் அனுபவம், புவிசார் அறிவியல், தகவல் தொடர்பாடல் என்பவற் றின் மூலமாக தமிழினத்துக்கும் தமிழர் தாய கத்துக்கும் உங்கள் சேவையை வழங்க முன் வாருங்கள்.

உங்கள் அர்ப்பணிப்பான சேவை எதிர் காலத்தில் எங்கள் இனத்தின் எழுச்சிக்குப் பேருதவியாக அமையும்.

காணாமல்போனோர் அலுவலகத்தின் அடுத்த அமர்வு முல்லையில் நடத்த திட்டம்

காணாமல்போனோர் தொடர்பில் மக்களின் கருத் துக்களைக் கேட்டறியும் அமர வுகள் ஏற்கெனவே மன்னார் மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட் டிருந்தன.

இந்த நிலையில், முல் லைத்தீவு மாவட்டத்திற் கான அமர்வு மாவட்ட செய லகத்தில் ஜூன் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள தாக காணாமற்போனோர் தொடர்பிலான அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பகுதிகளில் காணாமல்போன வர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உற வினர்களை அலுவலகத் தின் ஆணையாளர்கள் சந் தித்து கருத்துக்களைக் கேட் டறியவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு மற்றும் மணலாறு ஆகிய பகுதிகளி லும் அமர்வுகள் இடம்பெற வுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட சிவில் சமூகப் பிரதிநிதி களும் இந்த அமர்விற்காக அழைக்கப்பட்டுள்ளதாக காணாமல்போனவர்கள் தொடர்பிலான அலுவலகத் தின் தவிசாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் குறிப்பிட்டார். (ம-281)

ஒருவர் செய்த குற்றத்தை எல்லோர் மீதும் சுமத்த முடியாது

முன்னாள் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

(கொழும்பு)

பேர்ப்பச்சுவல் ட்ரெசரிஸ் நிறுவனத்தில் பணம் பெற் றுக்கொண்டுள்ளதால் தமது அணியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதால், அனை வரையும் அந்த குழுவில் சேர்க்க முடியாது என முன் னாள் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

சுசில் பிரேமஜயந்த உட் பட அரசாங்கத்தில் இருந்து விலகிய சுதந்திரக்கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப் பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனை அவரது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று சந் தித்தனர்.

இதன் பின்னர், அரசாங் கத்தில் இருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் 16 நாடாளுமன்ற உறுப் பினர்களில் தயாசிறி ஜய சேகர அர்ஜுன் அலோசிய ஸின் நிறுவனத்திடம் இரு ந்து பணம் பெற்றதாக குற் றம் சுமத்தப்பட்டுள்ளமை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே சுசில் இதனை கூறியுள்ளார்.

பிணை முறி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு வின் விசாரணையின்போது அர்ஜுன் அலோசியஸிடம் இருந்து 5 பேருக்கு தொலை பேசி அழைப்பு எடுக்கப்பட் டமை குறித்த தகவல்களும் வெளியாகியதால் இதுகுறி த்து தேடிப்பார்க்க வேண் டும்.

அந்த நிறுவனத்தில் பணம் பெற்றார்கள் எனக் கூறப்படும் 118 பேரும் நாடா ளுமன்ற உறுப்பினர்களாக இருக்க முடியாது. அர்ஜுன் அலோசியஸை முதல் முறை யாக புத்திரிகைகளில் வெளி யாகிய புகைப்படம் மூலம் அறிந்து கொண்டேன். இத னால், 118 பேர் குறித்த தக வல்களை தகவல் அறியும் சட்டத்தின் கீழ் வெளியிடு வது சிறந்தது எனவும் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள் ளார். (ம)

24 கிலோ கஞ்சாவுடன் மன்னாரில் இருவர் கைது

29 இலட்சம் ரூபாய் பெறுமதியான 24 கிலோ (24.18kg) கேரள கஞ்சா வுடன் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று மன் னார் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

மன்னார் பொலிஸ் பிரி விற்குட்பட்ட, பேசாலை ஒரு துடுவை பகுதியில் வைத்து நேற்று அதிகாலை சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பேசாலை, திருதேப்புப் பகுதியைச் சேர்ந்த 27, 24 வயதுடைய குறித்த சந்தேக நபர்கள் இருவரும் மோட் டார் சைக்கிள் ஒன்றில் பய ணித்துக் கொண்டிருந்த வேளையில் கஞ்சா பொதியு டன் கைது செய்யப்பட்டுள்ள னர். (ம)

சத்திய தரிசனம்

கோபத்திற்கு அடிமையாகாதே

❖ சாதாரண குடத்திலும் தூய்மையான தண்ணீர் வைக்கலாம். அதுபோல, சாதார ண மனிதர்களும், மனதில் தூய எண்ணங் களை வளர்த்துக் கொண்டால் இறைவனை அணுக முடியும்.

❖ இறைவனை வெளியே தேட வேண்டாம், அவர் நமக்குள்ளேயே இருக்கிறார்.

❖ கோபம் நம்மை ஆட்கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சாந்தம் தெய்வீகமானது. கோபம் மிருக சுபாவத்தைக் காட்டுவது. எனவே கோபத்துக்கு அடிமையாகக் கூடாது.

❖ வாழ்க்கையை சத்திய சோதனையாக எடுத்துக் கொள்ளுங்கள். எண்ணம், வாக்கு, செயல் மூன்றிலும் அதைக் கடைப்பிடியுங்கள். அமைதியும், செல்வமும் தானே உங்களை வந்து அடையும்.

❖ தனி மனிதனின் ஒழுக்கமும் கட்டுப்பாடுமே சமூகத்தை உருவாக்குகிறது. சமூகத்தின் ஒற்றுமையும், கட்டுப்பாடுமே நாட்டின் பலத்தை உருவாக்குகிறது. இதை அடைவதற்குத் தர்ம நெறியில் வாழுகற்றுக் கொடுக்கும் மதத்தின் மீது நம்பிக்கை வைத்து வாழ ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்

அர்ஜுன் அலோசியஸ் எனக்கும் ஒரு லட்சம் பணம் கொடுத்தார்

அமைச்சர் சரத் பொன்சேகா

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்த லின்போது அர்ஜுன் அலோ சியஸ் தனக்கும் ஒரு லட்சம் ரூபாய் பணத்தை கொடுத்த தாக அமைச்சர் சரத் பொன் சேகா தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தான் அந்த பணத்தை தேர்தலு க்கு பயன்படுத்தாது வேறு கட்சி ஒன்றின் ஆதரவாள ருக்கு வழங்கியதாகவும் அவர் கூறியுள்ளார்.

கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர் களை சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப் பிய கேள்விகளுக்கு பதில ளிக்கும்போதே பொன்சேகா இதனை கூறியுள்ளார்.

அதேவேளை தனது அமைச்சில் நிதி தட்டுப்பாடு நிலவுவதாக வெளியாகிய செய்திக்கு பதிலளித்துள்ள பொன்சேகா, ஐக்கிய நாடு கள் அமைப்பு மூலம் தமது அமைச்சுக்கு நிதி கிடைத் துள்ளதாகவும் நிதித் தட்டுப் பாடு எதுவும் கிடையாது என வும் மனித வலு தொடர்பான பற்றாக்குறை இருப்பதாக வும் குறிப்பிட்டுள்ளார். (ம)

அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

மோட்சம் பெறுவது எவ்வாறு?

மோட்சம் என்பது முக்தி பெறு வதாகும். அதற்கு பிறப்பு, இறப்பு கள் இல்லாமல் இருக்கவேண்டும். பிறக்கவில்லையெனில் இறக்க வேண்டியதில்லை. அவ்வாறு ஜென்மம் இல்லாத ஒரு நிலை உண்டாக வேண்டும். புண்ணி யம் செய்து தேவனாகப் பிறந்தா லும் சொர்க்கத்தை அடைந்தாலும் புண்ணியம் முடிவடை யும் போது சொர்க்கத்திலிருந்து புறந்தள்ளப்படுவார்கள். மீண்டும் ஜென்மம் எடுக்க வேண்டும்.

ஆனால் சுத்தமான மனதுடன் நல்ல காரியங்கள் செய்து மனதை இறைவனில் ஒருநிலைப்படுத்தி இறைவா, நீயே எனக்குக் கதி என்று நினைத்து எந்த நேரமும் இறைவ னையே நினைத்து வேறு எந்த அபிலாசைகளும் இல்லாமல் இறைவனுக்குச் சேவை செய்ய வேண்டும். அவ்வாறு இறைவனுக்குச் சேவை செய்வதன் பலனாக பக்தி உண் டாகும். பக்தியுண்டானால் மனம் இறைவனை மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கும்.

இறைவனை மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கும் மனது பவித்திரமாக மாறும். அதன் பின்பு இறைவனைத் தவிர வேறொன்றையும் அந்த மனம் நாடாது. அவ்வாறு பக்தனாகி இறைவனை மட்டுமே வணங்கி வாழ்பவனுக்கு மோட்சம் கிடைக்கும். மோட்சம் கிடைத்தால் அதன் பின்பு ஜென்மம் இல்லை. இது பக்தியினால் கிடைப்பதாகும். பக்தி உண்டாவதற்கு இறைவனின் நாமத்தைக்கூற வேண்டும். கோவில் தரிசனம் நடத்த வேண்டும். புராணங்களை படிக்க வேண்டும். (தொடரும்)

உலகக் கிண்ண பயிற்சியாட்டம்
மெஸ்ஸி ஹற்றிக் கோல் அடித்து அசத்தல்

ஆர்ஜெண்டீனா கால்பந்து அணித்தலைவர் லயோனல் மெஸ்ஸி, உலகக் கிண்ண கால் பந்து பயிற்சி ஆட்டத்தில் ஹற்றிக் அடித்து அசத்தியுள்ளார்.

2018 உலகக் கிண்ண கால் பந்து தொடர், ரஷ்யாவில் அடுத்த மாதம் 14ஆம் திகதி முதல் ஜூலை 14ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. இந்த தொடரில் 32 அணிகள் கலந்துகொண்டு விளை யாட உள்ளன. இந்நிலையில், இந்த தொடருக்கு முன்பாக நட்பு ரீதியிலான பயிற்சி ஆட்டங்கள் நடை பெற்று வருகின்றன. நேற்று முன் தினம் நடை பெற்ற பயிற்சி ஆட் டத்தில் ஆர்ஜெண்டீனா மற்றும் ஹைதி அணிகள் மோதின. இந்த ஆட்ட த்தின் 17வது நிமிடத்தில் ஆர்ஜெண்டீனா அணிக்கு பனா ல்டி வாய்ப்பு கிடைத்தது.

அதனைப் பயன் படுத்திக் கொண்ட அந்த அணித்தலை வரும், நட்ச த்திர வீரருமான மெஸ்ஸி கோல் அடி த்தார். இதன் மூலம், முதல் பாதி யில் ஆர் ஜெண்டீனா அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன் னிலை பெற்றது. அதன் பின்னர், விறு விறுப்பாக நடந்த இரண்டாம் பாதியின் 58வது நிமிடம் மற்றும் 66வது நிமிடம் என அடுத்தடுத்து மெஸ்ஸி இரண்டு கோல்களை அடித்தார்.

மெஸ்ஸியின் இந்த ஹட்ரிக் கோலாஆர்ஜெண்டீனா 3-0 என முன்னிலை பெற்ற நிலையில், 69வது நிமிடத்தில் அந்த அணி யின் செர்ஜியோ அக்யூரோ ஒரு கோல் அடித்தார்.

கடைசி வரை ஹைதி அணி யால் பதிலுக்கு ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.

இதன் மூலம், ஆர்ஜெண்டீனா அணி 4-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. (க)

துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஒளிராமல் இருக்கும் சில மின்குமிழ்கள்

யாழ்ப்பாணம் துரையப்பா விளை யாட்டரங்கின் மைதானத்தில் நிறுவப்பட்டுள்ள மின்விளக்குகளில் பெரும்பாலான விளக்குகள் பழுத டைந்துள்ளன.

யாழ்ப்பாணம் துரையப்பா விளை யாட்டரங்கு, இந்திய அரசாங்கத் தின் 145 மில்லியன் ரூபாய் நிதியு தவியில் புனரமைப்புச் செய்யப்பட்டு அதனை தற்போது யாழ்ப்பாணம் மாநகர சபை பராமரிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் மின்னொ ளியில் கால்பந்தாட்டம் உள்ளிட்ட விளையாட்டுக்களை நடத்தக்கூடிய வகையில் யாழ்ப்பாணம் துரை யப்பா விளையாட்டு மைதானம் உள்ளது. இந்த மைதானத்தில் மின்னொளியை வழங்கும் வகை யில் 4 கம்பங்களில் மின்விளக் குகள் பொருத்தப்பட்டுள்ளன.

மேற்படி மின்விளக்குகள் இங் கிலாந்தில் இருந்து தருவிக்கப்பட்டு, பொருத்தப்பட்டுள்ளன. ஒரு கம் பத்தில் 9 விளக்குகள் வீதம் பொருத் தப்பட்டுள்ளன. தற்போது, ஒவ் வொரு கம்பத்திலும் மின்விளக் குகள் தலா 5 அல்லது 6 விளக்குகள் மாத்திரம் ஒளிர்கின்றன. மற்றை யவை பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. இதனால் மைதா னத்துக்கான வெளிச்சம் குறைந் தளவே கிடைக்கின்றது. இனிவ ரும் பருவகாலத்தில் அதிகள வான கால்பந்தாட்ட போட்டிகள், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாண கால் பந் தாட்ட லீக் உள் ளிட்டவை மின் னொளியில் நடத்தப்படவுள்ளமை யால் பழுதடைந் துள்ள மின்விளக்கு களை விரைந்து திருத்தப்பட வேண் டிய நிலையில் உள்ளதாக ஆர்வலர் கள் சுட்டிக் காட்டுகின்றனர். (க-26)

தூய ஒளி வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டி முடிவுகள்

மண்டைதீவில் படுகொலை செய் யப்பட்ட 31 மீனவர்களின் 32 ஆவது ஆண்டு நிறைவை முன் னிட்டு குருநகர் பாடும்மீன் விளை யாட்டுக்கழகத்தின் அனுசரணையு டன் தூயஒளி வெற்றிக்கிண்ணத் திற்கான உதைபந்தாட்டத் தொடர் நடை பெற்று வருகின்றது.

கடந்த 26ஆம் திகதி நடை பெற்ற முதலாவது போட்டியில் திருக்குமரன் விளையாட்டுக்கழ கத்தினை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியில் 4:2 என்ற கோல் கணக்கில் உருத்திரபுரம் விளை யாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியாக இள வாலை கென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து முத்தமிழ் விளை யாட்டுக்கழகம் மோதியது. இப் போட்டி 3:1 என்ற கோல்கணக்கில் கென்றிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

27ஆம் திகதி நடைபெற்ற போட் டியில் சென்.சேவியர் விளையாட் டுக்கழகத்தை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியில் 3:1 என்ற கோல் கணக்கில் வளர்மதி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் நாவற்குழி அன்னை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வேலணை ஐயனார் விளை யாட்டுக்கழகம் மோதியது. இப் போட்டியில் 2:1 என்ற கோல்கணக் கில் ஐயனார் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

28ஆம் திகதி நடைபெற்ற போட் டியில் ஊரெழு றோயல் விளையாட் டுக்கழகத்தை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியில் 3:2 என்ற கோல்கணக்கில் றோயல் விளை யாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

29ஆம் திகதி நடைபெற்ற போட் டியில் சென்றேக்ஸ் விளையாட்டு கழகத்தினை எதிர்த்து ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் மோதியது. இப்போட்டியில் 1:0 என்ற கோல்கணக்கில் ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக கழகம் வெற்றி பெற்றது. (க-106)

பந்தை சேதப்படுத்தியதற்கு தண்டனை அதிகமே

பந்தை சேதப்படுத்திய விவ காரத்தில் வார்னர், பான்கிராஃப்ட் மற்றும் ஸ்மித்திற்கு கொடுக் கப்பட்டது அதிகப்பட்ச தண்டனை என அவுஸ்திரேலிய அதிரடி ஆட்டக்காரர் ஷேன் வாட்சன் கருத்து தெரிவித்துள்ளார். 2018 ஐ.பி.எல். இருபது-20 தொடர் சமீபத்தில் நடந்து முடிந்தது. இந்த தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஐ.பி.எல் கிண்ணத்தை வென்றது. சென்னை அணியின் வெற்றிக்கு ஷேன் வாட்சனின் அதிரடி சதம் முக்கியமான கார ணமாக அமைந்தது.

இந்நிலையில், தென்னாபிரி க்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில், அவுஸ்திரேலிய அணியின் ஸ்டீவ் ஸ்மித், டேவிட் வார்னர் மற்றும் பான்கிராஃப்ட் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட தடை குறித்து ஷேன் வாட்சன் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஷேன் வாட் சன் கூறுகையில், தடையை ஒப்பிடும்போது அவர்கள் மீதான தண்டனை மிகவும் அதிகப்ப சமானது. கடந்த காலங்களில் இதுபோன்று நடைபெற்ற தவறு களுக்கு இப்படி தண்டனை கொடு க்கப்படவில்லை. மூன்று பேரும் அதிகப்படியான விலையை கொடு த்துள்ளனர். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை. மீண்டும் அணிக்கு திரும்பும்போது, பக்க ளின் நல்ல பெயர் எடுக்க எல்லா வகை முயற்சிகளையும் மேற் கொள்வார்கள் என தெரிவித் துள்ளார். (க)

இறுதி நேரத்தில் அபார ஆட்டம் மன்னார் வசமானது கிண்ணம்

மன்னார் அணியின் பியூல் ஸின் இறுதிநேர அசத்தலான ஆட்டத்தால், வடமாகாண கால் பந்தாட்ட கிண்ணத்தை மன்னார் மாவட்ட அணி கைப்பற்றியது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வடமாகாண மாவட்டங்களுக் கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடந்து முடிந்துள்ளது. இவற்றில் ஒரு அங்கமாக கால் பந்தாட்ட இறுதிப்போட்டியானது பலத்த இழுபறிக்கு மத்தியில் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி உருத்திரபுரம் மைதா னத்தில் நடைபெற்றது.

மேற்படி இறுதிப்போட்டியானது முன்னர் யாழ்ப்பாணம் துரை யப்பா விளையாட்டரங்கில் நடை பெறுவதாக இருந்து தவிர்க்க முடியாத காரணத்தால் வவுனியா நகர சபை மைதானத்தில் நடை பெறுவதாக இருந்து அதுவும் மாற் றப்பட்டு மீண்டும் ஒருவாறு கிளி நொச்சியில் நடத்துவதற்கு தீர்மா னிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அணியும் யாழ்ப்பாண மாவட்ட அணியும் மோதின. முதற்பாதியாட்டத்தில் மன்னார் அணி முதலாவது கோலைப் போட்டது. இரண்டாம் பாதியில் யாழ்ப்பாண அணியின் ஞானரூபன் கோல் ஒன்றைப் போட்டு கோல் எண்ணிக்கையை சமப்படுத்தினார். இதன் பின்னர் யாழ்ப்பாண அணியின் ஆட்டம் சிறப்பாக இருந்தும், அவர்களால் கோல் எதனையும் போட முடிய வில்லை.

ஆட்டத்தின் இறுதி நிமிடங் களில் மன்னார் அணியின், பியூல்ஸ் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு, போட் டியின் போக்கை சடுதியாக மாற் றினார். முடிவில் மன்னார் மாவட்ட அணி, 03:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. (க-26)

மோ.சைக்கிள்-சைக்கிள்...

தில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

படுகாயமடைந்த நபரை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வீதியால் சென்றவர்கள் முச்சக்கரவண்டியில் அனுப்பி வைத்தனர்.பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அங்கு மரணமடைந்துள்ளார். இச் சம்பவத்தில் மீசாலை தெற்கு மீசாலையைச் சேர்ந்த 40வயதான பெருமாள் மகேஸ்வரன் என்ற நபரே மரண மடைந்துள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

16 நாடாளுமன்ற...

அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை சந்தித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை குறித்த சந்திப்பு இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பிற்கான நோக்கம் வெளிப்படாத போதிலும், மக்கள் விடுதலை முன்னணி சமர்ப்பித்துள்ள 20ஆவது அரசியலமைப்புச் திருத்தச்சட்டம் குறித்து ஆராயும் வகையிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றிருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த சந்திப்பில் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீ.சு.கட்சியிலிருந்து விலகிய 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்த குறித்த 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசாங்கத்தில் தாம் வகித்த அமைச்சு பொறுப்புகளிலிருந்து விலகியதுடன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஒன்றிணைந்த எதிரணியில் இணையப் போவதாக பிரசாரம் செய்துவருகின்றனர்.

எவ்வாறாயினும், சுதந்திரக் கட்சியில் வகித்துவரும் பதவிகளிலிருந்து அவர்கள் ஒருபோதும் நீக்கப்படமாட்டார்கள் என ஸ்ரீ.சு.க. மத்திய செயற்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

கொக்குவில் பகுதியில்...

உள்ள ஆகம முறை சாராத சிறிய ஆலயம் ஒன்றிலுள்ள கருப்பண்ணசாமி சிலையை தேங்காயால் அடித்து சேதப்படுத்தி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த ஆலயத்திற்கு பூஜை செய்ய வந்திருந்த குருக்கள் இது தொடர்பில் அங்குள்ளவர்களுக்கு தெரியப்படுத்தி சேதமாக்கப்பட்ட சிலையை கடலில் கொண்டு சென்று போட்டனர்.

இது விடயம் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

பிரிவினையின்றி அனை...

யல் நகர்வுகளை கையாளும் வகையில் பல்வேறு சந்திப்புகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தனை எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னர் சந்திப்பு குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சுயாதீன அணியாக செயற்படும் 16 பேர் கொண்ட குழுவினராக நாம் எதிர்க்கட்சியில் அங்கம் வகித்து வரும் நிலையில் நாம் முன்னெடுக்கும் காரியங்கள், எதிர்காலத்தில் நடைபெறும் அரசியல் காரணிகளில் நாம் எவ்வாறு செயற்படுவோம் என்ற விடயங்கள் மற்றும் சு.க. வின் கொள்கைகளிலிருந்து அடுத்து நாம் செயற்படும் காரியங்கள் குறித்து இன்றைய (நேற்று) சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுடன் கலந்துரையாடினோம்.

தமிழ் மக்களின் தலைவர் என்ற வகையிலும் அனுபவமிக்க அரசியல்வாதி என்ற வகையிலும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் எமக்கு முன்வைத்த காரணிகள் அனைத்தையும் இந்த நாட்டின் சிங்கள பெரும்பான்மை மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கையராக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். பிரிவினைவாதம் வேண்டாம். அனைத்து தரப்பையும் இணைத்து வெற்றிகொள்ள வேண்டும் என அவர் கூறியமை முக்கியமானதாகும். இந்த நிலைப்பாட்டினை எட்டவே கடந்த காலங்களில் கடுமையாக போராட வேண்டிய தேவை இருந்தது. ஆனால் இன்று அவர்களின் நிலைப்பாடுகள் நாட்டினை ஜக்கியப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளது.

தமிழ் தலைமைகளே இவ்வாறான நிலைப்பாட்டில் இருந்து செயற்பட்டு வருகின்ற நிலையில் தெற்கின் அரசியல்வாதிகள் இந்த நிலைபாட்டினை செவிமடுக்காத காரணத்தினாலேயே இந்த நாடு குழப்பமடைந்தது என்பதை மீண்டும் சிந்திக்க வேண்டும்.

சம்பந்தன் ஒரு நேர்மையான அதே போல் கொள்கையுடன் பயணிக்கும் அரசியல் வாதியாவார். ஆகவே எம்முடனான சந்திப்பில் அவர் முன்வைத்த காரணிகள் மிகவும் முக்கியத்துவமானவையாகும்.

ஆகவே அவருடன் நடந்த இந்த பேச்சுவார்த்தையை எமது அரசியல் பயணத்திலும் அதேபோல் நாட்டின் அரசியல் பயணத்திலும் மிகவும் மகத்துவம் வாய்ந்த ஒன்றாகவே கருதுகின்றோம் என்றனர். (ம)

தடுக்க நீதிமன்றம்...

நீதவான் நீதிமன்றம் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதனடிப்படையில் மாவா விற்பனை மற்றும் தயாரிப்பில் ஈடுபட்ட ஒருவர் நீதிமன்றால் எச்சரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார் . மேலும் நால்வரின் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டது.

மாவா தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் புகையிலை மற்றும் வாசனைத் திரவியங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த வாரம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முஸ்லிம் வர்த்தகரொருவர் தன்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை தொடர்ந்து அவருக்கு நேற்று 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஐந்து சந்தி பகுதியில் மாவா விற்பனை மற்றும் தயாரிப்பில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட இரண்டு முஸ்லிம் இளைஞர்களின் விளக்கமறியலை எதிர்வரும் ஜூன் மாதம் 12ஆம் திகதி வரை நீடித்து நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை தலா 2 கிலோ மாவாவுடன் கோப்பாய் பொலிஸாராலும் யாழ்ப்பாணம் பொலிஸாராலும் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டது. (ம)

அரசியல் கைதிகளின்...

யக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல் தலைமையிலான குழுவினருக்குமிடையில் சந்திப்பு இடம்பெற்றது.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரித்தானியாவிற்கு விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு வைத்து பி.பி.சி. சிங்கள சேவைக்கு செவ்வி ஒன்றையும் வழங்கியிருந்தார்.

அந்த செவ்வியில் அரசியல் கைதிகள் எவரும் இல்லை என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி தெரிவித்த கருத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவிக்காத நிலையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்காக தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல் தலைமையிலான குழுவினர் நேற்று எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தனை கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடினார்கள்.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக முதற்கட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராகவுள்ளதாக குறிப்பிட்டார். (ம)

பாராளுமன்றத்தினை...

100 நாள் வேலைத்திட்டத்தை யார் தயாரித்தது என்று கூட தமக்குத் தெரியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற மாதுலுவாவே சோபித தேரரின் 76 ஆவது ஜனன தின நிகழ்விலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி சோபித தேரரின் 76 ஆவது ஜனன தின நிகழ்வுக்கு தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் இலங்கை மன்றக் கல்லூரி மற்றும் சோபித தேரர் நினைவு நிதியத்தின் தலைவர் ரவி கருணாநாயக்க ஆகியோரிடம் இது குறித்து விசாரித்ததாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

நாட்டில் தற்போது இப்படிதான் வேலைகள் நடக்கின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் கிடைக்காத காரணத்தினால் என்னை பயன்படுத்திக்கொண்டனர். கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதிக்கு பின்னர் நடைமுறைப்படுத்திய 100 நாள் திட்டத்தை உருவாக்கியது யார் என்பது எனக்கு தெரியாது.

100 நாள் வேலைத்திட்டம் என்பது செய்த மிகப் பெரிய தவறு. இல்லாவிட்டால் ஜனவரி 8ஆம் திகதி இரவே நாடாளுமன்றத்தை கலைத்திருக்கலாம்.

சில கட்சிகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்களை அறிவித்துள்ளது. இது போன்ற குற்றச் செயல் எதுவுமில்லை.

தேர்தல் பரப்பரப்பு காரணமாக அரச அதிகாரிகள் வேலைகளை செய்வதில்லை. இதனால், நாடு ஸ்திரமற்ற நிலைமைக்கு செல்லும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம)

பல பிரேரணைகள்...

சினைகளுக்கு முகம் கொடுத்திருக்கும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அமைச்சரவைக்கு ஒரு தடவை அரச வங்கிகளில் உள்ள நிதியை தனியார் வங்கிக்கு மாற்றும் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தனர். நான் அதற்கு எதிராக நின்றேன். இதனை நிறைவேற்ற மூன்று மாதங்கள் அமைச்சரவையில் முயற்சித்தனர். நான் அதற்கு இடமளிக்கவில்லை.

அன்று அந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தால், மக்கள் வங்கியும், இலங்கை வங்கியும், என்.எஸ்.பீ வங்கியும் மூட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மறைந்த மாதுலுவாவே சோபித்த தேரரின் 76 பிறந்த தினத்தை முன்னிட்டு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற விசேட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைக் கூறினார். (ம)

விவசாய பிரதிப் பணிப்பாளர் இடமாற்றத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

வவுனியாவில் விவசாய பிரதிப்பணிப்பாளரை இடம்மாற்றியமைக்கு எதிராக அமுதம் சேதன விவசாய உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும்

இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட சில அமைப்புக்கள் இணைந்து நேற்று கண்டன ஊர்வலம் ஒன்றினை நடத்தியிருந்தன.

கல்வி நிர்வாகத்தில் பல்வேறு இடர்பாடுகள் காணப்பட்டு வரும் நிலையிலும் ஆசிரியர்களுக்கு பல பிரச்சினைகள் உள்ள நிலையில் வவுனியா விவசாய பிரதிப்பணிப்பாளராக கடமையாற்றிய யோகேஸ்வரன் இடமாற்றம் செய்யப்பட்டமையை கண்டித்தும் வவுனியாவில் பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட மூங்கில் செய்கையால் நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதாகவும் தெரிவித்தே இவ் ஊர்வலம் இடம்பெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தினர், அமுதம் சேதன விவசாய உற்பத்தி அமைப்பு, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, இலங்கை தேசிய பொது ஊழியர் சங்கம் என்பன இவ் ஊர்வலத்தில் கலந்துகொண்டன.

இதன்போது வவுனியா மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் இடமாற்றம் செய்யப்பட்டமையை கண்டித்தும் மூங்கில் செய்கையை உடன் நிறுத்தவேண்டும் எனவும் பதாகைகளை ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் தாங்கியிருந்தனர்.

இவ் ஊர்வலத்தில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் உறுப்பினரும் தமிழ் ழீழ விடுதலை இயக்கத்தின் உயர்பீடத்தை சேர்ந்த உறுப்பினருமான சந்திரபத்மன், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் அரசியல்குழு உறுப்பினர் கே. அருந்தவராஜா, செட்டிகுளம் பிரதேசசபையின் உறுப்பினரும் தமிழீழ விடுதலைக்கழகத்தின் முக்கியஸ்தருமான ஜெகதீஸ்வரன், புதிய மாக்சிச லெனின் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் பிரதீபன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தரும் அமுதம் சேதன விவசாய உற்பத்தி அமைப்பின் தலைவர் நேசராஜா உட்பட 40 பேர் வரையில் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

ஊர்வலமானது வவுனியா பிரதி விவசாய பணிப்பாளர் பணிமனை முன்பாக ஆரம்பித்து கடைத்தெரு வழியாக யாழ் வீதியில் அமைந்துள்ள அம்மாச்சி உணவகத்திற்கு அருகாமையில் நிறைவடைந்தது.(ம-250)

கடந்த காலங்களில் அரசாங்கத்தில் குறைபாடுகள் இருந்தது-பொன்சேகா

(கொழும்பு)

மக்கள் எதிர்பார்த்த ஆட்சி விரைவில் செயற்பாட்டு ரீதியாக நடைமுறைக்கு வரும் என்று அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கண்டி பிரதேசத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பிரதிநிதி என்ற வகையில் கடந்த காலங்களில் அரசாங்கத்தில் குறைபாடுகள் இருந்ததை தான் ஏற்றுக்கொள்வதாகவும், சில வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது போனதாகவும் அவர் கூறியுள்ளார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் போது அரசாங்கம் என்ற வகையில் சில தீர்மானங்கள் எடுப்பதில் தோல்வியடைந்துள்ளதாகவும், தற்போது தவறுகளை உணர்ந்து எஞ்சியுள்ள இரண்டு வருடங்களில் செயற்படுவதாகவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேலும தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் மக்கள் நிராகரித்த செல்லாக்காசுகளுக்கு மீண்டுமொரு முறை ஏமாற்றமடைய வேண்டாம் என்றும் அந்த கசப்பான கடந்த காலத்தை மறக்க வேண்டாம் என்றும் அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

வேகக்கட்டுப்பாட்...

யளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

மல்லாவி நகரப் பகுதியில் இருந்து மாங்குளம் நோக்கி மோட்டார் சைக்கிளில் தலைக் கவசம் அணியாமல் மூன்று இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் பயணித்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வன்னிவிளான்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக உள்ள வீதி வளைவுப் பாலத்துடன் மோதுண்டு தூக்கி வீசப்பட்டதில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இதில் மல்லாவி அணிஞ்சியன்குளம் 2-ம் பகுதியைச் சேர்ந்த முருகன் நளின் (வயது 24) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இவருடன் பயணித்த மேலும் இருவரில் ஒருவர் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்ற நிலையில் மல்லாவி அணிஞ்சியன் குளம் 2-ம் பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் ஜெகன் (வயது20) என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வீதியால் சென்ற பொதுமக்களினால் மீட்கப்பட்டு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற மாங்குளம் பொலிஸார் விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளை மீட்டு மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளதுடன், விபத்துடன் தொடர்புபட்ட நிலையில் தப்பிச் சென்றுள்ள மற்றைய இளைஞரை கைது செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொண்ட நிலையில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-15)

இலங்கையின் புதி...

அளவை ஆணையாளர் பி.எம்.பி.உதய காந்த தெரிவித்துள்ளார்.

இதேபோன்று மொரஹாகந்த உள்ளிட்ட நீர்பாசனங்கள் பல இந்த வரைப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 1:500 என்ற அளவில் புதிய இலங்கை வரைப்படம் அச்சிடப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் நடுப் பகுதியில் பொது மக்களால் இதை கொள்வனவு செய்ய முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதன் டிஜிட்டல் பதிவின் பிரதிகளை நில அளவை திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் கொள்வனவு செய்ய முடியும்.(ம)

ஊடகவியலாளர்...

முதல்வருக்கு மகஜர் கையளிக்கப்பட்டது. குறித்த மகஜரை பெற்றுக்கொண்ட முதலமைச்சர், அதன் பின்னார் மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களை பயமுறுத்தும் வகையிலேயே இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்த முதலமைச்சர், இவை அரசியல் ரீதியாக நடைபெறுகின்றதா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளார்.

இத்தாக்குதலை வன்மையாக கண்டிப்பதோடு, இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு சிரேஷ்ட உப பொலிஸ் அதிபரிடம் கோரியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தாக்குதல் நடத்தியவர்களை பொலிஸார் நன்கறிவார்கள் எனக் குறிப்பிட்ட முதலமைச்சர், ஆகவே அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். அதே சந்தர்ப்பத்தில் இளைஞர்களும் இவ்வாறான பிழையான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். (ம)

கேள்விப்பத்திரமி...

தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் குறித்த அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, இந்த வைரஸ் காய்ச்சல் காரணமாக மூடப்பட்டிருந்த தென் மாகாணத்தின் 8 கல்வி வலய பாடசாலைகள் நேற்று மீண்டும் திறக்கப்பட்டன.

எவ்வாறாயினும், மாணவர்களின் வருகை குறைந்தளவிலேயே காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

வாக்குறுதி நிறை...

தொடர்பில் சர்வதேச சமூகம் வெறும் பார்வையாளர்களாக இருக்காமல் தமது நிலைப்பாட்டினை தெளிவுபடுத்த வேண்டும் என தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன், இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் கடைப்பிடிக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதனை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டும் எனவும் அமெரிக்க குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள மக்கிலேனென் தொன்பெர்ரி தலைமையிலான அமெரிக்க காங்கிரஸ் குழுவினருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

அக் கலந்துரையாடலில் நாட்டில் நிலவும் அரசியல் சூழல் குறித்து மேற்குறித்த உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன், நாட்டில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வினை கண்டு நாட்டை முன்னேற்றி செல்வதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமரும் சேர்ந்து பயணிக்கவேண்டியதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்தியதுடன், நாடு தற்போதுள்ள நிலைமை குறித்து தமது அதிருப்தியையும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர்களுக்கு விளக்கமளிக்கையில்,

பெரும்பான்மையான மக்கள் தேசிய பிரச்சினைக்கான தீர்வு நிரந்தரமாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள், ஆனால் ஒரு அரசியல் யாப்பின் தேவையும் அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் சிங்கள தலைவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்லாமல் இருப்பதுதான் காணப்படுகின்ற பிரச்சினையாகும்.

சில சிங்கள தலைவர்கள் அனைத்து மக்கள் குறித்தும் நியாயமாக சமத்துவமாக நோக்குவதனை விடுத்து கடும்போக்காளர்களை திருப்திபடுத்துவதிலேயே ஆர்வமாக உள்ளனர். அவர்கள் இவ்வாறே தொடர்ந்தால் நாடு மீண்டும் பின்னோக்கி செல்ல நேரிடும்.

மேலும், ஜனாதிபதியும் பிரதமரும் இதய சுத்தியுடன் சிங்கள மக்களிடம் சென்று புதிய அரசியல் யாப்பிற்கான தேவையினை எடுத்துக்காட்ட வேண்டும். 1988-ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு அரசாங்கமும் ஜனாதிபதியும் இது தொடர்பில் முயற்சிகளை எடுத்து வந்துள்ளமையினால் இந்த கருமங்களை விளங்கிக் கொள்வதில் சிங்கள மக்களிற்கு சிரமம் இருக்காது.

நாம் பிளவுபடாத பிரிக்கமுடியாத ஒருமித்த நாட்டிற்குள்ளேயே ஒரு தீர்வினை எதிர்பார்க்கிறோம் அதிகாரப் பகிர்வானது சர்வதேச உடன்படிக்கைகளான சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், பொருளாதார சமூக கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை,சர்வதேச மனித உரிமைகள் சாசனம் போன்றவற்றின் அடிப்படையிலேயே அமைய வேண்டும்.

தேக்கநிலையிலுள்ள புதிய யாப்பு உருவாக்க நடவடிக்கைகள் தொடர்பில் நாம் நோக்கும் போது புதிய அரசியல் யாப்பானது நாட்டில் நிலவும் பாரிய கடன் சுமை மற்றும் பொருளாதார வளர்ச்சி உள்ளடங்கலான பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகளை கண்டு கொள்ள வழிவகுக்கும். எனவே இந்த முயற்சியினை நாம் கைவிட்டு விட முடியாது. மேலும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நிரந்தரமான தீர்வினை புதிய அரசியல் யாப்பினூடாகவே அடைய முடியும்.

புதிய அரசியல் வரைபானது பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படுகின்ற போது அது சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களினால் அங்கீகரிக்கப்படும் என்ற நம்பிக்கை எமது கட்சிக்கு உள்ளது. குறிப்பிட்ட கால எல்லைக்குள் கருமங்கள் இடம்பெறாமல் போகின்ற பட்சத்தில் நாமும் தமிழ் மக்களும் எமது நிலைப்பாடு குறித்து மீளாய்வு செய்ய நிர்ப்பந்திக்கப்படுவோம்.

இலங்கை அரசாங்கமானது 2015 இல் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை மார்ச் 2019 இற்குள் முழுமையாக நிறைவேற்றுவதாக வாக் குறுதி அளித்துள்ளது. அவர்கள் அப்படி நிறைவேற்றுவதாக இருந்தால் கருமங்கள் துரித கதியில் இடம்பெற வேண்டும்.

ஐ.நா மனித உரிமை பேரவை தீர்மானத்தினை அடிப்படையாக கொண்டு இலங்கை தொடர்பில் தமது நிலைப்பாட்டினை சர்வதேச சமூகம் தெளிவுபடுத்த வேண்டும். இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் கடைபிடிக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதனை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டும்.

மேலும் சர்வதேச சமூகம் இலங்கை தொடர்பில் வெறும் பார்வையாளராக மாத்திரம் இருக்க முடியாது. இலங்கை அரசு தமது வாக்குறுதிகளை நிறைவேற்றாது போகும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதிலும் மீள் நிகழாமையை உறுதி செய்வதிலும் சர்வதேச சமூகத்தின் அணுகுமுறை எவ்வாறு இருக்கும் என்பதனையும் வலியுறுத்த வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

சுமார் 45 நிமிடங்கள் நீடித்த இந்த கலந்துரையாடலில் குழுவின் தலைவர் மக்கிலேனென் தோன்பெர்ரியோடு காங்கிரஸ் உறுப்பினர்களான என்றிக் குலார், விக்கி ஹாஸ்லேர், கரோல் ஷி போர்ட்டர் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கேஷாப் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.(ம-9)

அரசின் செயற்பா...

தெரிவித்துள்ளார்.

மலேசியாவின் பிரதமர் மஹாதீர் முஹம்மத் பதவியேற்று ஐந்து நாட்களில் ஒன்பது அமைச்சர்களை கைது செய்ததாகவும், 144 வர்த்தகர்களை மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்ததாகவும் ஆங்கில தேசிய ஊடகமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய புகைப்படத்தையும் அவருடைய புகைப்படத்தையும் போட்டு இந்த தகவலைப் போட்டுள்ளனர்.

என்னுடைய புகைப்படத்துக்குக் கீழே 3 வருடம் எனக் குறிப்பிட்டு கேள்விக் குறியை இட்டுள்ளனர். இந்த தகவல் பொய்யானது. இந்த செய்தி வெளியான உடன் நான் மலேசியாவிலுள்ள தூதரகத்துக்கு தொடர்பு கொண்டு கதைத்தேன். அவர்கள் அப்படியொன்று நடக்க வில்லையென்று கூறினர்.

நான் இந்த அரசாங்கத்தைப் பொறுப்பெடுத்த நாள் முதல் நடைபெற்ற பல்வேறு விடயங்கள் உள்ளன. அவற்றை நான் கூற விரும்பவில்லை. தேவை ஏற்பட்டால் கூறுவதற்கும் நான் பின்நிற்பதில்லையெனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டினார்.

எனது அரசியல் வாழ்வில் 47 வருடங்களையும் வரைபில் காட்டினால், கீழ் இருந்து உயரத்தை நோக்கியே சென்றுள்ளது. இந்த அரசாங்கத்தின் 3 வருடங்களில் தான் அது கீழ் நோக்கிச் சென்றுள்ளது எனவும் ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார். (ம)

யாழ்ப்பாணத்தில் புகழ் பூத்த
ஈ-சிற்றி ஆங்கிலக்
கல்லூரியில் புதிய ஆங்கில
டிப்ளோமா பிரிவு ஆரம்பம்!

O/L, A/L பரீட்சை எழுதிய, பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், பல்கலைக்கழக, உயர் கல்வி மாணவர்கள், அலுவலர்கள் மற்றும் பெண்கள் அனைவருக்கும் சிறந்த பாடநெறி! (8-2769)

Diploma In English

காலம் :- 06 மாதங்கள்

புதிய பிரிவு ஆரம்பம்
02.06.2018 10.30 மணி
(சனி/ஞாயிறு தினங்களில் காலை 10.30 - 12.30 மணி வரை இடம்பெறும்)

முற்றிலும் குளிரூட்டப்பட்ட நவீன வகுப்பறை

E-CITY COLLEGE OF ENGLISH
இல. 372 D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (வீரகாளி அம்மன் கோவில் அருகில்)

Tel : 0212217106 / 0770610271 / 0774924166
Web. ecitycollege.lk

விற்பனைக்கு

✱ மீன்பிடி றோலருக்கான 30 அடி புதிய வள்ளம், யன்மார் 2 சிலிண்டர் (Full Recondition) எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.

வேம்படி வல்வெட்டித்துறை (4225) தொடர்புகளுக்கு 077 357 3055

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

பதவி வெற்றிடம்

அரச அங்கீகாரத்துடன் இலங்கையில் பல வருடங்களாக முகாமைத்துவத் துறையில் பயிற்சியுடன் பல நிரந்தர தொழில்வாய்ப்பினை வழங்கிவரும் தனியார் கம்பனி மேலும் பல நிரந்தர தொழில் வாய்ப்புக்களை வழங்கவுள்ளது. தகைமைகளுக் கேற்ப பதவிகள் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு :
077 157 1699, 021 567 9001 (4252)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org (4250)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



(C-2867)
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

வேலையாட்கள் தேவை

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் இயங்கிவரும் அபான்ஸ் காட்சியறைக்கு வேலையாட்கள் தேவை. தகைமையாக க.பொ.த சாதாரண தரம் பூர்த்தி செய்து உயர்தரம் கற்றிருக்க வேண்டும். தொடர்பு: 0771590339, 0215776156

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.